N 86
ACC·NO·33784

ஓம் பரப்ரஹ்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.) [REGISTERED.

கமலம்-5. Vol. 5.	சென்னை: பிரமோதூதஸு தைமீ 1உ 1931-ம்ஸு ஜனவரிமீ 16உ	இதழ்-58. No. 58.

ஆநந்த  தர்சனம்

காதலனே! யருட்கார்முகிலே! யெங்கள் கண்மணியே!
கோதறுநற் குணக்குன்றே! பெரும்புகழ் கொண்டவனே!
தீதரவன்பரைத் தேற்றும் சுகானந்தத் தெள்ளமுதே!
நீதரவேண்டுமெந்தாய் நின்பாலன்பு நிலைபெறவே.

"கணநாதனை வணங்கினால் தினநாதனைப்போல் வாழலாம்" எவன் கணபதியைத் தியானிக்கிறானோ அவன் ஸூர்யனைப்போல் கீர்த்தி ப்ரகாசத்தோடு வெகுகாலம் இவ்வுலகில் வாழ்ந்துகொண்டிருப்பான். எந்தக் காரியம் தொடங்கினாலும் கணபதிபூஜை செய்யாமலிருப்பதில்லை. விக்னமின்றி சுப காரியங்கள் நிறைவேறுவதற்கு விநாயகரின் கிருபை அவசியம். பரமசிவனுக்கு மூத்தபிள்ளையாயும் பிரணவ ஸ்வரூபியாயுமுள்ள விக்நேசுவரரை ஸதா தியானிக்கக் கடவோம்.

ஃ

"அயன் இட்ட கணக்கு யாருக்கும் தப்பாது" அன்று எழுதியவன் அழித்து எழுதுவானோ? எல்லாம் ஈசனருளால் நடக்கிறது. முற்காலத்தில் இராவணன் லங்காபுரியை ஆண்டுவருகையில் ஒரு பிராமண வாலிபன் இராவணனைக் கண்டு வணங்கினான். அந்த ஸமயம் வசிஷ்டர் வந்தார். ராவணன் அவரை யுபசரித்து இவனுக்கு எப்பொழுது விவாகமாகுமென, அதற்கு அவர்

"அமிர்த குணபோதினி" பிரதிமாதமும் அளவற்ற இன்பத்திற்கு ஆஸ்பதமாக இருக்கிறது. ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு வாக்கியத்திலும் ஒவ்வொரு விதமான ரகஸ்யங்களையும் ரஸங்களையும் அறியலாம்.

நாளையதினம் பகல் 12-மணிக்கு ஒரு இராஜகுமாரி இவனுக்கு மனைவி யாவாள் என்றார். ராவணன் அதைப் பரீக்ஷிக்க எண்ணி அவனை ஒரு பெட்டியிலிட்டுப் பூட்டிப் பத்திரமாக வைத்தான். இரவு வந்தது. யாவரும் தூங்கினர். பிரதிதினமும் காசிக்குச்சென்று கங்காஸ்நானம் செய்கிற சூர்ப்பநகை தனது மடிப்பெட்டியென்று தவறுதலாக விப்பிர வாலிபன் இருந்த பெட்டியை எடுத்துக்கொண்டு காசி சேர்ந்து மடித்துணி எடுக்கப் பெட்டியைத் திறந்தாள். அதில் ஒரு வாலிபனைக் கண்டு அதிசயப்பட்டாள். இதற்குள் அத் தேசத்து அரசகுமாரியை நான் நீ என்று பல தேச ராஜகுமாரர்கள் மணந்துகொள்ள வாதாடினர். மந்திரி அவர்களைக் கங்காநதியின் அருகில் தருவித்து ஸமாதானம் செய்ய முயன்றான். இராஜகுமாரியின் கையில் புஷ்பஹாரம் இருந்தது. அவள் அங்கே அதிதேஜஸ்ஸுடன் விளங்கும் பிராமண வாலிபனைக் கண்டு மோகித்து புஷ்பமாலையைப் போட்டாள். மந்திரி அதே முகூர்த்தத்தில் விவாகம் செய்துவிட்டான். தம்பதிகளை சூர்ப்பநகை பெட்டிக்குள் வைத்து லங்காபுரம் கொண்டுவந்து சேர்த்தாள். ராவணன் பகல் 2-மணிக்குப் பெட்டியைத் திறந்து பார்க்கவே ஆச்சரியமுற்றான். சூர்ப்பநகை நடந்த சங்கதிகளைச் சொல்லக்கேட்டு அயனிட்ட கணக்கு யாருக்கும் தப்பாது என்பது மெய்யென்றுணர்ந்து அவர்களுக்கு வேண்டிய ஸர்மானங்களைக் கொடுத்தனுப்பினான்.

ஃ

"ஒரு ஊருக்குப் பல வழிகள்போல" மதங்களும் இறைவனை யடைவதற்கு ஒவ்வொரு வழிகளாக உள்ளன. எல்லா மதங்களிலும் சிறிது உண்மையுண்டு. அவரவர்களின் மனதுக்கு எட்டியவரையில் சொல்லி யிருக்கிறார்கள். அதுவரையில் மெய்யாகவே இருக்கும். ஃ

"ஸ்வாமி விவேகாநந்தர் கூறுகிறார்":—நாம் வசிக்கும் பாதகண்டமே ஞானத்துக்கு இருப்பிடம். இங்கிருந்துதான் மற்ற தேசத்தார்கள் ஞானம் என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கைப்பற்றிச் சென்றார்கள். மகரிஷிகள் அலைந்து திரிந்த மகோன்னதமான இடம் இவ்விந்தியாதான். ஆத்ம விசாரணை இத்தேசத்தில்தான் முதல் முதல் உண்டாயிற்று. ஆத்மாவுக்கு அழிவில்லையென்பதும், சர்வேசுரன் ஒருவர் இருக்கிறார் என்பதும் இவ்விந்தியாவில் தான் ஆரம்பத்தில் தெரியவந்தது. நமது தேசத்திலிருந்துதான் தத்வசாஸ்திரமும் வேதாந்தமும் பிற கண்டங்களிற் பரவியது. லக்ஷம் லக்ஷமான ஜாதியார்கள் படையெடுத்துவந்தும், பற்பல ஆசாரங்கள் நவீனமாக உண்டாகியும், அவைகளால் யாதொரு அழிவையும் அடையாமல் நமது மதம் நிலைத்திருப்பதற்கு அதன் உண்மையே காரணம். கோடானுகோடி வருஷம் மழை பொழிந்தாலும் ஹிமாசலத்துக்கு அழிவுண்டோ? அதுபோல், கோடிக்கணக்கான அன்னிய தேசத்தார்கள் நமது நாட்டின்மீது படையெடுத்து வரினும், அவர்களால் அசைக்க முடியுமா நம்முடைய மதத்தை?

ஃ

"நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே" பாதகண்டம் புண்ய பூமியென்று பெயர்பெற்றது. இக்கண்டத்தில் அநேகாயிர வருஷங்களாய் புண்யவான்கள் அப்போதப்போது அவதாரம்செய்து பரஹித ஸாதகமான காரியங்

இன்னொருவரின் வீட்டு விளக்கானால் திரியை அதிகமாய்த் தூண்டிவிடுகிறார்கள். இன்னொருவர் வீட்டு நெய்யானால் தாராளமாய் ஊற்றச் சொல்கிறார்கள். தன் வீட்டில் அப்படிச்செய்ய மனம் வராத தென்னவோ?

களையும், உத்கிருஷ்ட கிரந்தங்களையும் ஆச்சரிய விஷயங்களையும் இன்னும் அநேகவிதமான நீதிநியாய தர்மங்களையும், வாசமகோசரமாய் எடுத்தோதித் தங்கள் ஆயுள்கால முழுவதையும் ஹிதம் செய்வதிலேயே செலவழித்து ஏராளமான ஹிதோபதேசங்களைக் கிரந்தரூபமாய் ஏற்படுத்தி மகோபகாரிகளாய் விளங்கினார்கள். அம்மகான்கள் மாண்டும் மீண்டவர்களா யிருக்கின்றனர். அத்தகைய புண்யமூர்த்திகள் எழுதியும் சொல்லியுமுள்ள வாக்ய வசனங்களை நாம் அவசியம் படித்தறிந்துகொள்ளவேண்டும். பிற மதஸ்தர்களின் நிந்தாஸ்பதமான மொழிகளில் நாம் மயங்கிவிடக்கூடாது. முன்னோர்களைத் தூஷிப்போரின் சொற்களிலும்—அது எத்தனை சாதுர்ய பாஷிதமாயிருப்பினும்—அதனில் விசுவாசம் வைக்கக்கூடாது. அடியிலுள்ள சேற்றைக் கலக்காமல் மேலுள்ள தெளிவான ஜலத்தைமட்டும் எடுத்து அருந்தி தாகம் தீர்த்துக்கொள்ளக் கடவோம்.

“நீற்றைப் புனைந்தென்ன, நீராடப் போயென்ன, நீமனமே” தேகத்திலுள்ள அழுக்கு ஸ்நானத்தால் தீருகிறதென்பது உண்மையே. ஆயினும், இதனால் மனதிலுள்ள அழுக்கு போய்விடுமோ? இவன் சுத்தன், அவன் அசுத்தன் என்று சொல்வது கேவலம் சரீரத்தைப் பற்றியல்ல; மனதைப்பற்றியே. களங்கமற்ற மனதையுடையவனே சுத்தன். பொய், சூது, வஞ்சனை, களவு, காமம், குரோதம் முதலியவற்றால் மனம் அசுத்தமாகிறது. இதைச் சுத்தமாக்க விரும்பினால் மேற்கண்ட துர்க்குணங்களைத் துரத்தவேண்டும்.

“பொன்னாசை மண்ணாசை பூங்குழலா ராசை” கொண்ட மனிதன் எதனால் சிரேஷ்டனாக மதிக்கப்படுகின்றான்? பகுத்தறிவினால் மனிதன் உயர்ந்தலனாகிறான் என்பது உண்மையாயினும், மனுஷ்யன் இவ்வொன்றினால் மட்டும் மேம்பாடடையான். முக்கியமாக தர்மசிந்தை, கருணை, பரோபகாரம் இவைகள் மனுஷ்யனைச் சிறந்தவனாக்கவேண்டும். மகாதுஷ்ட ஸ்வபாவமுள்ளது புலி. அது இறந்தபிறகு அதன் தோல் ஆஸனமாகக் கொள்ளப்படுகிறது. ஸிம்ஹமோ ஸாக்ஷாத் அம்பிகையின் வாகனமாயிருப்பதுடன், அரசர்களின் ஆஸனத்துக்கும் விசேஷமாக இருப்பதால் அதன் பெருமை வர்ணிக்கத்தரமன்று. கரடியைக் கண்டால் ஜாம்பவானுடைய ஞாபகமுண்டாய் இராமபக்தி ஜனிக்கிறது. குரங்குகளோ தாசரதியின் ஸைன்யங்கள். பாம்பு ஆதிசேஷன் இனம்; நாராயணமூர்த்தியின் சயனமாயும் சிவமூர்த்தியின் ஆபரணமாயும் இருக்கிறது. காக்கை பிண்டத்தைத் தின்றால் பிதிர்க்களுக்குப் பிரீதி அதிகம். மான் உயிரோடிருக்கும்போதும் சுத்தமுள்ளது. அது இறந்தபின்னும் அதன் தோல் ஆஸனமாக உபயோகமாகிறது. தேனீக்களால் பகவத் ஆராதனைக்குத் தேன் கிடைக்கிறது. வெள்ளாடு மரித்தால் அதன் ரோமம் கம்பளங்கள் நெய்ய உதவுகின்றன. மனுஷ்யன் மரித்தால் அவன் உடலால் என்ன பிரயோஜனம்? அதை நாயும் நரியும் புழுக்களும் தான் உண்

சாதாரண வாழ்க்கை கெட்டு விட்டால் மறுபடியும் சீக்கிரம் செப்பனிட்டுக்கொள்ள முடியும். ஆனால், பெரிய மனித வாழ்வு இடிந்து மண்ணானால் அது சீர்படுவது துர்லபம். சாதாரண பேனா கீழே விழுந்து ஸ்டீலின் முனை கெட்டுவிடின் வேறொன்று போட்டுக் கொள்ளலாம். ஆனால் பவுண்டன் பேனா கீழே தவறிவிழுந்து முனைகெட்டுவிடுமானால் ஹா! அது வெகுகஷ்டமன்றோ?

றும். ஆகவே, ஜீவனோடிருக்கும்பொழுதே தான தர்மங்களைச் செய்து பகவத் பக்தனாவது நலம். ஃ

"சன்னியாசியானதிலு மூடருண்டு, சமுசாரஞ் செய்வதினு ஞானியுண்டு" காலையிலெழுந்து கடவுளைத் தொழுது திவ்ய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸந்தியாவந்தனாதிகளைப் பண்ணி சுசியோடு வேதாத்யயனம் செய்து தேவ பூஜை நடத்தி அதிதிகளை யுபசரித்து நல்ல பதார்த்தங்களைப் புசித்து நற் ரெந்தங்களை வாசித்து புத்தியை விசாலப்படுத்திக்கொண்டு யோக்யர்களுடன் ஸகவாஸம் செய்து பகவத் பக்தி பண்ணி இரவில் படுக்கும்போதும் கடவுளைத் தியானித்து உறங்குவது உத்தமர்களின் கடமை. இத்தகையோர் இல்லறத்தி லிருந்துகொண்டே முக்தியைப் பெறுதல் கூடும். ஒவ்வொரு நிமிஷத்தையும் நல்விஷயத்தில் செலவழித்தால் மனதுக்குத் திருப்தி உண்டாகும். சமுசாரம் செய்துகொண்டே ஞானமடைந்தோர் அநேகருண்டு.

ஃ

"தெய்வத் தியானமே தேர்ந்த ஞானம்" ஆஸ்திக புத்தியையுடைய ஸகல மதஸ்தர்களும் எந்தக் காரியத்தை யாரம்பித்தாலும் தெய்வத்யானம் செய்யவேண்டியது அத்யாவசியம். தெய்வகிருபையும் பெரியோருடைய அருளும் பெறாதவன் மூடனே. ஃ

"அஞ்ஞானமாகிய தீமை" தன் எதிரில் நிற்பதால் ஸுக்ஞானமாகிய விளக்கை மூடன் அறியாமல் தீபமே அங்கு இல்லையென்று வாதம் செய்கிறான். பாபத்துக்குத் தகுந்த பிராயச்சித்தமும், புண்யத்துக்குத் தகுந்த பலனும் கைமேல் கிடைக்குமென்பது அனுபவஸித்தம்.

ஃ

"ஜீவன் ஒன்றா? அநேகமா?" என்பது கேள்வி. சிலர் ஜீவன் ஒன்றெனவும், அநேகமெனவும் சொல்லுகிறார்கள். அநேக ஜீவன்களிருந்தாலும் அவைகளெல்லாம் உபாதியால் ஒரே ஆத்மாவின் பல சாரங்களென்றே கொள்ள வேண்டும். இவ்வுபாதிகளினின்றும் தத்துவத்தைப் பிரித்தால் உபாதிகள் நிலையல்லவென்பது தெரியவரும். ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்களிலிருந்து பிரிந்த ஆத்மாவானது எங்கும் நிறைந்த மகாகாசம் (மகா ஆகாசம்) போலவும், சரீரத்திலுள்ள ஜீவன் கடாகாசம் (பானைக்குள்ளடங்கிய ஆகாசம்) போலவும் இருக்கின்றன. கடம் (பானை) என்ற உபாதியொன்றை நீக்கினால் அதிலுள்ள ஆகாசத்துக்கும் மகாகாசத்துக்கும் வித்யாசமுண்டா? இல்லையன்றோ?

ஃ

"ஆத்மாவின் தோற்றங்கள்" ஆத்மாவானது ஜீவனாகியும் ஈசுவரனாகியும் தோன்றுகிறதேயன்றி உண்மையில் ஒன்றுதான். இதற்கு உதாரணம்: சூரியன் பல பாண்டங்களில் நிரம்பியுள்ள ஜலங்களில் பல சூரியன்களைப்போல் தோன்றினாலும் அத்தனை தோற்றங்களும் பொய்யேயன்றி நிஜமல்ல, உண்மையாக ஒரே சூரியன்தானுண்டு என்று நாம் நிச்சயிக்கிறோம். அதுபோல, ஆத்மாவானது பஞ்சகோசங்களில் புகுந்து பலவாறாகக் காணப்படினும், அது

மனைவி கோபித்துக்கொண்டு போய்விட்டாலும், குழந்தைகள் தன்னருகில் இருந்தால் மனைவியில்லாத தனிமையைக் கணவன் எண்ணாமல் நாள் போக்க முடியுமாம். ஆனால், குழந்தைகள் தமது தாயை மறக்க முடியுமோ?

உண்மையில் ஒரே பொருளெனவும், அவ்வொன்றே நாமரூபங்களால் வெவ்வேறுவிதமாய்க் காணப்படுகிறதெனவும் தெளியவேண்டும்.

II

பகவத் பிரார்த்தனை :—1. சகலத்துங் காரணனும், சர்வவியாபியாய், ஆதித்தன்முதல் அணுபரியந்தம் அந்தரியாமியாய் ஆளாநின்ற ஓ பரம புருஷனே! உன்னை அன்புடன் சிந்திப்போமாக.

2. எந்த புருஷன் சகல ரூபங்களையும் விசேஷமாய் உண்டாக்கிப் பெயர்களையும் கொடுத்து, அப்பெயர்களால் வியவஹரித்துக் கொண்டிருக்கிறானோ, அப்படிப்பட்ட மகானுகியும், சூரியனைப்போல் ஜ்வலித்துக்கொண்டும், அஞ்ஞானத்துக்குப் புறம்பாகியும் விளங்குகின்ற புருஷோத்தமனே; நின்னைத் தியானமார்க்கத்தால் தொழுது கரையேறுவோமாக.

3. ஓ ஜகத்ரக்ஷகா! சர்வக்ஞனும், புராதனனும், சகல பிரபஞ்சங்களை ஆளுவோனும், அணுவிலும் அணுவாகி யாவற்றையும் தரிக்கின்றவனும், சிந்திக்கக்கூடாத ஸ்வரூபமுள்ளவனும், அந்தகாரத்தைக் கடந்த சூரியப்பிரகாசனும், புருஷோத்தமனும் ஆகிய உன்னுடைய திவ்யஸ்வரூபத்தையே முயற்சி யோகத்தைக் கொண்டுணர்ந்து வேறொன்றையும் பற்றாது நின்திருவடிகளைப் பற்றியவாறு நின்னையே அடைவோமாக.

4. எதை வேதார்த்த முணர்ந்தவர்கள் நாசரஹிதமானதென்று சொல்லுகிறார்களோ, எதைப் பற்றற்று இந்திரிய நிக்கிரகம் பண்ணினவர்கள் அடைகின்றனரோ, எதை யறியவிரும்பி சேதனர் பிரமசாரிகளாகிறார்களோ, அப்படிப்பட்ட பரமபதத்தை அடியோம் அடையும்வழி யீதென விளக்கியருள்வாய்.

5. ஓ பகவானே! நீர் சராசரங்களடங்கிய இந்த லோகத்திற்குத் தந்தையும், பூஜிக்கப்படத்தக்கவரும், உத்தமரான குருவுமாய் இருக்கின்றீ ராகலான், மூன்று லோகங்களிலும் உமக்குச் சமானமில்லை, உமக்கு மேலானவனுமில்லை. ஆகவே, எம் சரீரத்தை நினது பாதகமலங்களில் தாழ்த்தி நின்னை வணங்கி நியாமகனும் பூஜநீயனுமாகிய நின்னையே பிரசன்னமாகக் கொண்டோம். கர்த்தனே! புத்திரனைப் பிதாவும், சினேகிதனைச் சிநேகிதனும், நாயகியை நாயகனும் க்ஷமிப்பதுபோல எம்மையும் எமது அபராதங்களைக் கருதாது க்ஷமித்துக் காத்தருள்வாய். ஓம் தத்ஸத்.

ஒருவருக்கு ஒன்றை ஒரு சமயம் தந்து விடுகிறோம், அதற்கு அடுத்த நிமிஷமோ அந்த நன்றி கெட்டவனுக்கு என் தந்தோமென நினைக்கிறோம்.

பிரசித்தமான பழங்காலத்துப் புஸ்தகங்களுக்கு வைத்துள்ள பெயர்களைத் தற்காலத்திய புது ஆசிரியர்களும் பிரசுர கர்த்தர்களும் சிறிது மாற்றித் தங்கள் நூல்களுக்கு வைத்து விடுகிறார்கள். பழய நூலின் அழகு இதில் வராது.

துர்க்குணமுடைய ஸ்திரீ புருஷர்களுக்கு அக்குணத்தை வெறுக்க விருப்பமிருந்தால் "அமிர்த குணபோதினி"யைப் படித்தறிந்தாற் போதுமானது. தக்ஷணமே தாங்கள் அநுஸரிக்கவேண்டிய நல்லொழுக்கங்களைக் கற்றுக்கொள்வார்கள். அநுபவ போதனை எவரையும் திருந்தவைக்கும்.

அமிர்தகுணபோதினி

பிரமோதூதவரு தைமீ 1௳

புது வருஷத்திய பிரதிக்கினைகள்.

ஆவலுடன் எதிர்நோக்கிய 1931-ம் வருஷம் பிறந்துவிட்டது. புது வருஷம் ஆரம்பிக்கும்போதெல்லாம் புதிதாய் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்துமுடிக்கவேண்டுமென்கிற பிரதிக்கினை கொள்வது மிகவும் உத்தமமென்று பலரும் நினைப்பதுண்டு. இவ்விதமே பரீக்ஷை தேறி மேல்வகுப்பிற்கு வந்ததும் நாம் புதிய புஸ்தகம் வாசித்து மேன்மையடையப் போகிறோமல்லவா என்று சிறுவர்கள் மகிழ்வதுமுண்டு. அப்படி ஒரு நல்ல தீர்மானம் கொண்டால் அவ்வளவோடே தாங்கள் சகல காரியத்தையும் சாதித்துவிட்டதாக எண்ணிவிடுகிறார்களே! முதலில் ஒரு பிரதிக்கினை செய்துகொள்வது வேறு; பிறகு அந்தப் பிரதிக்கினையை நிறைவேற்றுவது வேறு. புதுப் புத்தகத்தைப் படித்து அதிலுள்ள விஷயங்களைத் தெரிந்துகொள்ளாமல், பார்வைக்கு அழகாய்ப் புஸ்தகத்தைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டிருப்பதில் ஏதாவது நன்மை உண்டோ? முதலில் நாம் ஒரு தீர்மானம் செய்து பின்பு அதை நிறைவேற்றாமற் போனாலும், முதலில் ஒரு நல்ல பிரதிக்கினை செய்துகொண்டே புது வருஷம் ஆரம்பிக்கவேண்டுமென்று கருதுகிறவர்களுண்டு. அத்தகையோர் அதனால் என்ன பயன் பெறக் காத்திருக்கிறார்களோ? சமையல் செய்யாவிட்டாலும் "சமைப்போம்" என்றுமட்டும் எண்ணிக்கொண்டிருந்தால், அதனால் பசி யடங்கிப்போகுமா?

ஃ

தினந்தோறும் காலையில் மிகவும் சோம்பலாய்த் தூங்குகிற கெட்ட வழக்கமுள்ள ஒருவன் புது வருஷம் ஆரம்பித்தபோது தன் தந்தையைப் பார்த்து, அப்பா! நான் இந்த வருஷம் முதல் மிகவும் சுறுசுறுப்புடன் சிற்றஞ்சிறுகாலே யெழுந்து என் வேலைகளை நன்றாய் நடத்தத் தீர்மானித்திருக்கிறேன் என்று சொல்லி அவ்வளவோடு திருப்தியடைந்தான். சொல்லிவிட்டால் மட்டும்

பிரிந்துபோய்ப் பிறகு சேருகிறவர்கள் பழைய அன்பில் இரார். என்னடா வந்துவிட்டானே என்று ஒரு தலைச்சுமையாகத்தான் நினைப்பார்கள்.

போதுமா? அந்தப்படி நடந்துகாட்ட வேண்டாமா? மறுநாட் காலையிலோ முன்னிலும் நாலு நாழிகை அதிகமாகவே தூங்க ஆரம்பித்தான். நேற்று செய்துகொண்ட பிரதிக்கினை என்ன? இன்று நடந்தவிதமென்ன? ஃ

இப்படியெல்லாம் நேரிடுவதற்குக் காரணமென்னவெனில், நாம் இப்போது ஆரம்பிக்கிற காரியம் செம்மையாய் முடியுமா முடியாதாவென்பதை நன்ருய்க் கருத்துடனே முன்னதாக ஆலோசித்துப் பாராமல், திடீரென்று ஒரு பிரதிக்கினை செய்வதனுல் அது நிறைவேருமற் போய்விடுகின்றது. "இக்காரியம் நம்மால் செய்து முடிக்கக்கூடும்"———என்று நம்முடைய மனதுக்குத் தைரியமாய்த் தோன்றினுலொழிய நாம் ஒன்றையும் முன்னதாகத் தீர்மானிப்பது தகுதியன்று. அதைப்பற்றிப் பிரதிக்கினை செய்துகொள்வதிலும் பலனில்லை. ஃ

புதுவருஷத்தைத் தொடங்கவேண்டிய விதம் எப்படிப்பட்டதென்று தெரியுமா? நாம் இவ்வளவு காலத்தையும் நல்ல வழியில் செலுத்தாமலே வீணுய்க் கழித்துவிட்டோமே; நமது மனதோ மிகவும் கெட்டதாயிருக்கிறது; அதினுடைய கெட்ட எண்ணம் இன்னும் நம்மைக் கெட்டவழியிலேயே செலுத்தக் காத்திருக்கிறது; நாம் எச்சரிக்கையின்றிக் கொஞ்சம் ஏமாந்திருப்போமானுல் அது நம்மைப் படுகுழியிலே தள்ளிவிடுவது நிச்சயம்; ஆதலால் கடவுள் நம்மை இவ்வுலகத்தில் பிறப்பித்ததானது நாம் நற்காரியங்களைச் செய்து நாளுக்குநாள் நல்வழியில் விருத்தியடைந்து அவருடைய பொற்ருமரையடியைப் பெறுவதற்காகவே யென்பதை நன்குணர்ந்து அதற்கு வேண்டிய நற்செய்கைகளைச் செய்யத் தீர்மானித்து அதை அவ்வாறே நிறைவேற்றவேண்டும். இது நமது நித்தியகடமை.

ஃ

சென்ற வருஷத்தில் நாம் எவ்வளவோ தவறுகள் செய்திருக்கலாம்; ஏமாற்றி யிருக்கலாம்; பிறர் பொருளைக் கவர்ந்திருக்கலாம்; இரவலாகப் பெற்று விழுங்கியிருக்கலாம்; மோசமும் சூதும் செய்திருக்கலாம்; வாயிலொரு சிரிப்புவைத்து வஞ்சகம் பேசியிருக்கலாம்; பல துரோக நினைவுகளுக்கும் பாவச்செயல்களுக்கும் ஆளாகிவிட்டிருக்கலாம்; நமது வீட்டில் சமாதானமற்றிருக்கலாம்; உக்கிரகமும் கோபமும் கொண்டிருக்கலாம்; பட்ட கடன் தீர்க்காதிருக்கலாம்; இன்னும் இதுபோன்ற பலவற்றிலும் நாம் குறைவுபட்டுக்

அவரவர்கட்கு ஒரு முக்கிய வேலையிருந்துதான் நம்மைத் தேடி வருகிருர்கள். சும்மா சும்மா வருவோர் எவருமில்லை. எல்லாம் வெளிப்பகட்டான மயக்குப் பேச்சே! அன்புக்காகவே வருவோர் ஆயிரத்தி லொருவரே!

கிடக்கலாம். அவற்றையெல்லாம் இப்புதுவருஷத்தில் திருத்திக் கொண்டு மேன்மைப்பட புதிய பிரதிக்கினைகள் கொள்ளவேண்டும்.

ஃ

ஒருவர்மேல் இல்லாத தோஷங்களை யெடுத்துப் பழிப்பாய்ப் பேசுகிறவர்களுடைய நாக்கையே விஷமுள்ள நாக்கென்று சொல்ல வேண்டும். அது செய்யுமளவு தீங்கு வேறொன்றும் செய்யாது; உலகத்தையே ஒருமிக்க அழித்துவிடவேண்டுமென்றாலும் அழித்து விடும். குறிப்பான பேச்சுகளும், குசமசக்கான பேச்சுகளும் செய்கின்ற வலிவு தீங்கு மற்றொன்றும் செய்வதில்லை. உடம்பில் ஒரு புண்பட்டால் அது சரீரத்தில் மட்டும் நோயுண்டாக்கும்; பழிப்புச்சொல்லோ, முதலில் ஒரு சிறு நெருப்புப் பொறிபோ லிருந்து பிறகு பெருகி படீரென்று வெடித்துத் தேசமெங்கும் பாவி, ஒருவனுடைய பெருமையையும் பிரசித்தியையும் அழித்து அவனைச் செத்தவனுக்கும் கேடாக்கிவிடும். நன்மையான பேச்சு களைவிடத் தீமையான பேச்சுகளையே விசேஷமாய் நம்புவது உலக இயற்கை. ஒரு பெண்மணியின் கற்பைப்பற்றிப் பழுதாக ஒருவன் கூறினால், ஒருவனுடைய நடத்தையைப்பற்றி இழிவாக ஒருவன் பேசினால் அதைத்தான் பலரும் அதிகமாக நம்புகிறார்கள். இதென்ன துர்ப்பாக்கியமோ! சென்றுபோன வருஷத்தில் இவ்விதமான பாபச் செயல்களில் சம்பந்தப்பட்டு நாவடக்கமின்றி நாம் நடந்துகொண் டது எத்தனை எத்தனை தடவைகளிலோ? இப்புதிய வருடத்திலே னும் நமது நாவை யடக்கிக்கொள்ளப் பிரதிக்கினை செய்துகொள்ள வேண்டும். ஒருவனைப்பற்றி நன்மையாய்ப் பேசப் பிரியமில்லாவிட் டால், ஒன்றுமே பேசாமலிருந்துவிடுவதே நலம். ஏனெனில், அதனால் பிறருக்கு நன்மை விளையாமற் போனாலும், அவர்களுக்கு வீணான மனவருத்தமொன்றும் உண்டாகாதல்லவா? பத்துபேர் சேர்ந்து ஒருமுகமாய் ஒருவனைப் பழிப்பார்களாயின், மறுபடி அவனுக்கு நல்லவனென்கிற பெயருண்டாகுமா? இதில் நாம் வாரிக்கொள்ளு கிற மகிழ்ச்சி என்னவோ? நாம் கண்ணால் காண்பதையெல்லாம் எப்படிப் புசிக்கத் துணிவதில்லையோ, அப்படியே காதினால் கேட் பதையெல்லாம் உண்மையாக நம்பத் துணியக்கூடாது. இது நாம் புது வருஷத்தில் பெற்றுக்கொள்ளவேண்டிய புதிய அறிவு ஆகும்.

ஃ

தூஷணமான பேச்சுகளைக் கேட்டு, அதற்குத் தங்கள் மன தில் வசிக்க இடம்கொடுத்து ஒருவரும் அதை ஆதரியாதிருப்பார்

நகைகளை நண்பன் மூலம் பாங்கியில் வைத்துக்கடன் பெற ஒருவர் எண் ணுகையில், நமது வீட்டு விஷயம் அவர்களிட மெல்லாம் பரவுவது சரியல்ல வென்று மனைவி தடுத்தாள். அது அவருக்கு நியாய மென்றே பட்டது. கட னும் வாங்கவில்லை; மானமும் வெளியிற் செல்ல வில்லை.

களாயின், பின்பு அப்படிப்பட்ட பேச்சுகளுக்குப் பிழைப்பேது ?—மதிப்பு ஏது ?—அவை பரவுவதும் ஏது ?—தமக்குத்தாமே அவை பயனற்று அழிந்து மறைந்து போகவேண்டுவதுதானே.

ஃ

எப்போதும் காதை விரித்துக்கொண்டு யார் என்ன குற்றம் சொல்லுவார்களென்று கேட்க ஆவல்கொண்டுள்ளவர்கள் அடங்குவார்களாயின், நாவை யடக்கமாட்டாமல் வாய்ப்பதட்டத்துடன் பிறர்மேல் பழிகூறக் காத்திருப்பவர்களும் அந்த க்ஷணமே அடங்குவார்கள். இந்தப் புதுவருஷத்திலே நம்முடைய காதை நாம் விரித்துக்கொண்டு நிற்கவேண்டாம். ஃ

முற்காலத்தில் ஒரு அரசன் இருந்தான் ; அவன் முன்னிலையில் எவனாவது ஒருவன்மீது குற்றங்கூற வருவானாயின், அப்போது அவன், "நல்லது, இருக்கட்டும் ; அவனைப்பற்றி நன்மையான பேச்சு ஏதாவது உண்டா ?" என்று கேட்பது வழக்கமாம். அப்படி, அன்னம் நீரை வேருய்ப் பிரித்துப் பாலைமட்டும் பருகுவதுபோல் பிறருடைய தீக்குணங்களைத் தள்ளி நற்குணங்களையே கிரகிக்க முயல்வார்களாயின், அப்படிப்பட்டவர்கள் இம்மையில் நல்லோரென்று பிரசித்திபெற்றுப் பேரும் புகழுமாய் வாழ்வதுமன்றி, கடவுளுடைய கருணை கடாக்ஷத்திற்குப் பாத்திரராகி மறுமையிலும் நற்பதவிகொண்டு ஜ்வலிப்பார்கள். ஆதலின், நாமும் இவ்வருஷ முதல் அந்த அரசனைப்போல நன்மையானதைமட்டுமே கேட்கக் கடவோம். ஃ

இன்னும், புதுவருஷ ஆரம்பத்தில் ஒன்றைச் சிரத்தையாய்ச் செய்ய ஆரம்பித்துப் பிறகு சோர்ந்துபோகிற விஷயங்கள் எவ்வளவோ உண்டு. டயிரி என்கிற தினசரிப் புஸ்தகம் வைத்திருப்பவர்கள் புதுவருஷத்தில் பிரதிதினமும் ஒருபக்கமும் விடாமல் சிரத்தையாய் எழுதிவந்து பிறகு பல தினங்கட்கும் எழுதாமலே இருந்துவிடுவார்கள். புதுவருஷத்தில் பலர் தமது துர்க்குணங்களை நீக்கிக்கொண்டு நிற்பார்கள். பிறகு சில தினங்களுக்கெல்லாம் பழயபடி கெட்டழிவார்கள். இதுதான் கூடாது. புதுப்பிரதிக்கினைகளை நம்மாலானவரையில் நிறைவேற்ற நாம் சக்திவந்தர்களாகவேண்டும்.

ஃ

புதுவருஷத்தில் புது வியாபாரம் தொடங்கவேண்டும். புதுக் கல்வி கற்கவேண்டும். தொடர்ந்து பெறும் பத்திரிகைகளை மறவா

ஒரு வஸ்து ஒரு சமயத்தில் எவ்வளவோ அருமையாய்த் தேவைபடப் போகிற விஷயம்—அது அலக்ஷியம் செய்யப்படுகிற இப்போது நமக்குத் தெரிவதில்லை, பிறகே அறிகிறோம். பிறர் விவாகம் செய்துகொண்டு போன பிறகே நமது மாமன் மகள்—அத்தை மகள் இவர்களின் அருமை தெரிகிறது.

மல் புதுவருஷத்திலும் ஆதரிக்கவேண்டும். புதுப் புஸ்தகங்களை இன்னமும் வாங்கவேண்டும். புது நகைகள் செய்யவேண்டும். புது நிலபலங்கள் வீடுகள் கொள்ளவேண்டும். புதிய செல்வம் சேர்க்கவேண்டும். புதிய ஊக்கம் பெறவேண்டும். புது பதவிகள் வகிக்கவேண்டும். புதுவழியில் புகவேண்டும்.

ஃ

இவ்வளவு காரியமும் நம்முடைய முயற்சியினாலேயே செய்துவிட முடியுமா? நாம் எக்காரியம் செய்ய ஆரம்பித்தாலும், நம்முடைய மதிக்குறைவால் அதற்கு வேண்டிய மனோவுறுதி தவறிப்போவதுமாத்திரமே யன்றி, இன்னும் பல இடையூறுகளும் மத்தியில் ஸம்பவிக்குமாதலின், அவையொன்றும் இல்லாமல் நாம் செம்மையாய் நல்வழியில் விருத்தியடையும் பொருட்டுக் கடவுளை நாள்தோறும் தியானித்து வணங்கி, நம்முடைய நல்லெண்ணங்களும்—நற்செய்கைகளும் மேன்மேலும் அதிகரிக்கும்படி அவரைப் பிரார்த்திக்கக்கடவோம். இப்படிக் கடவுளைத் தொழுது, அவர் அருளையே பூர்ணமாக நம்பி, அவருக்கு அஞ்சி நடந்து மனவுறுதியோடும் புதுவருஷத்தைத் துவக்குவோமானால், நன்மை தீமைகளை நன்றாய்ப் பகுத்தறிந்து வாழ்நாளைத் தூயமனத்துடனே நல்வழியாய்ப் போக்கிச் சௌக்கியமும் இகபர சுகமும் அடையவல்லவர்களாவோம். புதுவருஷத்தில் அவ்விதமே ஆகக்கடவோம். இறைவன் அருள் புரிக. நமது புதுவருஷப் பிரதிக்ஞைகள் நிறைவேறுவதாக.

உள்ளே யிருக்கிற ஓட்டை!

படித்த வகுப்பாரிற் சிலரும், மிக்க அழகு வாய்ந்தோரிற் சிலரும் வெகு ஆபத்தானவர்கள். பிறர் தமக்குச் செய்யும் உதவிகளை, அப்படிச் செய்யவேண்டியது அவர்களின் தலையெழுத்தென்று எண்ணிவிடுகிறார்கள். தங்களிடம் மயங்கிக் கற்பைத் தாரைவார்த்த பெண்களைப்பற்றியோ, அது அவர்களின் தலைவிதியால் நேர்ந்த சங்கதி என்கிறார்கள். மேலும் எவ்வளவோ பேர் தங்கட்கு உதவியவாறே இருப்பதில் அந்த உதவிகள் ஒரு அருமையாகப்படுவதும் இல்லை. எத்தனையோ பேர்களிடத்தில் பணம் வாங்கிக் காய்த்துப்போனதால் பிறரிடம் தாம் பரிசாகவோ இலஞ்சமாகவோ பெறுகிற பணத்திற்கு நன்றி செலுத்தவேண்டுமென்றுகூடத் தோன்றுவதில்லை. இத்தகையோரையே மிக்க உயர்வாக மதித்து உலகத்தார் கௌரவிக்கின்றனர்!

பொங்கலோ பொங்கல்!

"பொங்கலோ பொங்கல்!'' புகுந்த இத்திங்கள்
மங்கல முதல்நாள் மகிழ்வொடு பலரும்
பகர்ந்திடும் மொழியது! பகலவன் மிகவும்
உகந்தருள் பொழிய உற்றஇத் தைம்மதி
பிறக்கும் நன்னளில், பெரிய பானைகளில்
சிறக்க புதிதாய்ச் சேர்த்த நெல்குத்தி
எடுத்த பச்சரிசி இட்டு, மண்கட்டி
அடுப்பென வைத்து அக்கினி மூட்டி,
உலை கொதித்தபின் ஊற்றிய பால் அது
தலை வழியுங்கால் சந்தோஷமாக
பொங்கலோ பொங்கல்! பொங்கிற்று என்பர்:
பொங்கும் அக்களிப்பை புகலவும் படுமோ!
உத்தராயணமாய் உரைத்திடுங் காலம்
மெத்த சிறப்போடு விளங்குவ தன்றே!
மனிதர் களிக்க மழையும் வெயிலும்
இனிதில் அளித்ததை எண்ணி, அதனல்
உளங் களிக்கநல் உரம் பெற்றோங்கி
வளம்பெற வளர்ந்து வருவாய் ஈந்த
பயிர்கள் பெற்ற பயனையும் எண்ணி
உயிர்களைப் பேணும் ஒளி அளித்தருளும்
கதிரைப் போற்றுவர் களிப்போ(டு) இந்நாளில்;
சதிபதி கட்டும் சந்தோஷம் ஊட்டும்
வனிதையர் புதுக்கலை வனைந்து சிறப்பர்;
இனியநாள் இவ் எழிற்பொங்கல் நாளே.

ஆரியூர்—வ. பதுமநாப பிள்ளை.

தனது எமாறிய ஆத்திரத்தில் தன் வாய் மொழியாக இன்னொருவன் சில முக்கியமான குடும்ப-வர்த்தக - சங்கதிகளைத் தெரிந்துகொண்டு விடும்படி செய்வது எத்துணை மடமை என்ற விஷயம் அந்த சமயம் தெரிவதில்லை.

சென்றுபோன நாட்கள்.

1. ஸ்ரீமான் D. வில்ஸன்,

சேலம் "தக்ஷிணதீபம்" பத்திராதிபர்.

2. ஸ்ரீமான் D. A. ஜான் நாடார்,

சேலம் "திராவிடாபிமானி" பத்திராதிபர்.

நமது அன்பிற்கினிய நாடார் குல ஸகோதரர்களின் முன்னேற்றத்தை ஆசித்து அன்னோரின் பொருட்டாகப் பிரபவமான ஒரு வாரப்பத்திரிகையை முதன் முதலாக ஆரம்பித்து நடத்தி அரும் பெரும் புகழ் பெற்ற புண்ணிய கண்ணியவான் ஸ்ரீமான் D. வில்ஸன் ஆவார். "தக்ஷணதீபம்" பத்திரிகை அவரது காலத்தில் மகோன்னதமான நிலையில் இருந்தது. ஸ்ரீ டி. வில்ஸனின் தமிழ் நடை மிக்க கம்பீரமும் தெளிவுமானது. அத்துடன் இனிமையும் கலந்தது. ஜாதிப்பத்திரிகையாக இருப்பினும், எல்லா வர்ணத்தவரும் வாங்கும் வகையில் பொதுப்பட நடத்தி யாவருக்கும் பிரியராய் நின்றதானது அவரது பத்திரிகா நிர்வாகத திறனைக் காட்டுகின்றது. சந்தாதார்களிற் பெரும்பான்மையோர் நாடார் குலத்தவராகவே யிருந்தனர். அதி உன்னத நிலையில் "தக்ஷணதீபம்" பத்திரிகை இருந்து கொண்டிருக்கும் பொழுது தமக்கு உதவியா யிருப்பதற்காக ஸ்ரீமான் டி. ஏ. ஜான் நாடாரை அஸிஸ்டெண்டாக அமர்த்திக் கொண்டார். ஸ்ரீமான் நாடாரும் நன்கு கற்றவர். ஆங்கிலம் தமிழ் இவற்றிலும் வல்லவர். இவ்விருவராலும் தக்ஷண தீபம் சேலத்தில் நன்கு நடைபெற்று வந்தது. 1905-ம் வருஷ ஆரம்பத்தில் ஸ்ரீமான் டி. வில்ஸன் திடீரென்று மார்படைத்துக் கொள்ள அது குணப்படாமல் காலமாயினர்.

ஃ

குடும்பத் தலைவர் போனபின்பு குடும்பம் படும்பாடு மிக்க பரிதாபமே. "தக்ஷணதீபம்" பத்திரிகையை ஸ்ரீ ஜான் நாடார் நடத்தி வருவதென்று ஏற்பாடாகி அவ்விதமே பிரசுரமாயிற்று. 1905, 1906-வரையில் ஸ்ரீ ஜான் நாடாரே நடத்திவந்து பின்னர் தமக்கே அப்பத்திரிகையைக் கொடுத்துவிடும்படி வேண்டினர். அதற்கு ஸ்ரீ வில்ஸனின் மனைவியார் ஸ்ரீமதி ஞானபுஷ்பம்மாள் ஒப்பவில்லை. அதிலிருந்து ஸ்ரீ ஜான் நாடாரும் அப்பத்திரிகையி லிருந்து விலகிக்கொண்டு, அந்தக் காலத்தில் திரிச்சிராப்பள்ளியில் வாசமாயிருந்த தமது நண்பரான எஸ். ஜி. இராமானுஜத்திற்கு தாம் ஒரு புதுப்பத்திரிகை ஆரம்பிக்க விரும்புவதாயும், அதற்கு அழகான பெயரொன்று வேண்டுமென்றும், அதன் ஆசிரியத்துவத்தை வகித்துக் கொள்ளும்படியும், தாம் நிர்வாகத்தை மேல்பார்த்துக் கொள்வ

இலவசத்தில் எமதை அடித்துக்கொண்டு போகலா மென்று சிலர் வெகு கூர்மையாய் ஆராய்கின்றனர். அவர்களிடம் ஏமாறிக்கொடுத்து இழந்து விடாமல் கண்டிப்பா யிருப்பதே நமக்கு வெற்றியும் லாபமுமாம்.

தாயும் எழுதினர். அதற்கு இராமாநுஜம் சம்மதித்து "திராவிடாபிமானி" என்ற பெயரைக் குறிப்பிட்டு, தாம் ஆரம்ப முதல் கொண்டு ஆசிரியராயிருக்க இணங்கிப் பதில் கடிதம் அனுப்பினர். 1907-ம் ஞூ ஜூன் மீ 7-ம் தேதி "திராவிடாபிமானி"யின் முதல் இதழ் பிரசுரமாயிற்று. பிரதி வாரத்திலும் இராமாநுஜம் திரிச்சியிலிருந்தபடியே நித்தியமும் பத்திரிகைக்கான விஷயங்களை அனுப்பி வந்தார். புதன்கிழமையன்று பத்திரிகையின் தலையங்கம் எழுதி யனுப்புவார். வியாழனன்று முக்கிய விஷயங்களை எழுதி யனுப்பிவிடுவார். வெள்ளிக்கிழமையன்று பத்திரிகை வெளியாகிவிடும். இவ்விதமான முறையில் திராவிடாபிமானி நடைபெறலானது. சேலத்தின் உள்ளூர் வர்த்தமானங்களைமட்டும் ஸ்ரீ ஜான் நாடார் சேகரிப்பது வழக்கம். முதல் வருஷத்தில் முன்பணம் செலுத்தியவர்கட்கு இராமாநுஜம் தயாரித்த "பரிமளா' நாவல் இனாமாகத் தரப்பட்டது.

ஃ

இந்த நிலையில் "தக்ஷண தீபம்" பத்திரிகையை அதன் சொந்தக்காரர்கள் மறுபடியும் நடத்த முயன்றனர். ஆனால் "திராவிடாபிமானி"க்கு முன்பு அது சிறந்தோங்கவில்லை. அதன் உயர்வு ஒரு காலம்! இதன் உயர்வு ஒரு காலம்! பிறகு "தக்ஷண தீபம்" நின்று விட்டது. "திராவிடாபிமானி"யே எங்கும் பிரபலமாய் விளங்கிற்று. இராமாநுஜம் திரை மறைவில் உண்மையான பத்திராசிரியராயிருந்து நடத்தி வந்தாலும், வெளிக்கு உப பத்திராதிபர் என்றே பத்திரிகையில் பிரசுரிக்கும்படி செய்து வந்தார். இந்தக் காலத்தில்தான் நாடார் குல மகாநாடும் கூடிற்று. அதன் பொருட்டும், நாடார் குல மகாஜன சங்கம் ஸ்தாபிதமாவதற்கும் "திராவிடாபிமானி" நன்கு உழைத்தது. இவ்விதமாக 1907-ம் வருஷ முதற் கொண்டு 1916-ம் ஞூ வரையில் திராவிடாபிமானி மிகுந்த பிரக்யாதியுடன் நடந்துவருகையில், 1916-ம் ஞூ டிசம்பர் மாதத்தில் அவ்வாரப் பத்திரிகை பாதி அச்சிட்டு முடிந்திருக்கையில், ஸ்ரீ ஜான் நாடார் மார்படைத்துக்கொண்டு கைகள் விழுந்துபோய்ப் படுக்கையிலாய் விட்டார். (மற்றதில் முடிவு.)

நமது வாழ்க்கையின் தவறு.

புத்திரப்பேற்றின் ஆசையால் பெண்ணைக்கொண்டோமில்லை. காமக்குடித்தனம் செய்யவே தலைப்பட்டோம்; தர்மக் குடித்தனம் செலுத்த நினைத்தோமில்லை. குழந்தைகளைப் படைக்கவே விவாஹம் செய்வது என்ற தத்துவத்தை மறந்தோம். குடித்தனம் பண்ணுவது என்பதை, ஆண் சம்பாதிப்பதும், பெண் சமைத்துப்போடுவதும், இருவரும் உண்டு களித்து உறங்குவதும் என்றே கருதி நடந்து வருகிறோம். நமது வாழ்க்கையின் தவறுகளை நாம் அறிவது எப்போதோ? அறிந்தாலும் திருத்திக்கொள்கிறோமில்லை!



ஷார்லெட் ப்ராந்தியாள்.

(Charlotte Bronte. 1816—1855.)

(கற்பனைக் கதைகள் அநேகம் இயற்றிய மாது சிரோன்மணி.)

ஹாவர்ட்டு என்கிற கிராமம் மிகவும் சிறியது. அது இங்கிலாந்தில் யார்க்ஷயர் மாகாணத்தில் உள்ளது. இங்கு தான் ஷார்லெட் ப்ரோந்தீ என்ற பெண்மணி வஸித்து வந்தாள். அவளது தந்தையாகிய பாட்ரிக் பிரோந்தி என்பவர் மத போதகரா யிருந்து ஜீவனம் செய்து வந்தார். ஷார்லெட் பிரோந்தியும், அவளது நான்கு ஸகோதரிகளும், தம்பியும் வளர்ந்து வந்த இடம் கற்கட்டடமாகிய ஒரு மடமாகும். அன்னையோ வியாதிப் படுக்கையிற் கிடந்தாள். குழந்தைகளுடன் குலாவி மகிழவும் சக்தியில்லை. தந்தைக்கும் தமது மதபோதகத் தொழிலில் ஓய்வு கிடைத்தலரிது. தம் கக்ஷியையே விடாப் பிடியாய்ப் பேசும் மூர்க்கமான ஸ்வபாவ முள்ளவர். இதனால் பலரும் அவரை வெறுக்கும்படியாகி, அவரும் தமது பாதுகாப்புக்குத் துப்பாக்கியும் கையுமாய் இருக்கவேண்டியதாயிற்று.

ஃ

சிறந்த அநுபவஞான கதாசிரியரான ஷார்லெட் பிரோந்தியாளின் ஜீவிய காலம் அதிர்ஷ்டமற்றதாயும், ஸதா துக்க வடிவாயும், துன்பங்கள் சூழ்ந்த இருட் குகையாகவும் இருந்தது. பாடசாலையிற் பயின்றுவந்த அவளது இரு தமக்கைகளும் ஒருவர் பின் னொருவராய்க் காலமாயினர். குடும்ப நிர்வாகப்பொறுப்பு பிரோந்தியாளின் தலைமீது விழுந்ததால், தன் தங்கையுடன் பாடசாலையை விட்டுக் கடைசிப் பெண்ணுக்குத் துணையாய் வீட்டிலிருக்கும்படி நேர்ந்துவிட்டது. அவளது தம்பி படிப்பில் அதிக யுக்தி சாலியாக இருந்தான்.

ஃ

ஷார்லெட் பிரோந்தியாள் தானே வீட்டு வேலைகள் யாவும் செய்து வந்ததுடன் படிப்பையும் கவனித்து வந்தாள். அவள் சோறு சமைக்கையிலும், மாவு பிசைகையிலும், அடை தட்டுகையிலும் அவள் பக்கத்தில் புஸ்தகம் திறந்து வைத்திருக்கும். புஸ்தகத்தின் சுவையையும் உறிஞ்சிக் கொண்டு, சமையலின் சுவையும் நன்றாயிருக்குமாறு கவனித்துக் கொள்வாள். அவள் ஸகோதரி எமிலியாவும் துட்பபுத்தி வாய்ந்தவள். இவ்விருவரும் உபாத்திமைத் தொழில் செய்வதாயினர். குடும்பகஷ்டங்களில் அதையும் அடிக்கடி விட்டுவிட வேண்டியிருந்தது. ஷார்லெட்

ப்ரோந்தியாள் முதலில் எழுதிய கதை பிரசுரகர்த்தர்களால் நன்றாயில்லை யென்று திரும்பி வந்து விட்டது. ஆயினும் முயற்சி சோரவில்லை. "ஜேன் அயர்" என்னும் பிரசித்த விநோதக் கதையை எழுதத் தொடங்கினாள். அவள் அக்கதை யெழுதும் போது பிரதி தினமும் ஓயாமல் எழுதுவ தில்லையாம். சில வாரங்கள் வரையிலும், ஒவ்வொரு சமயம் சில மாதங்கள் வரையிலுங்கூட, ஒரு வரியும் எழுத முடியாமல் சும்மா இருந்ததாகவும், சில நாள் காலையில் எழுந்தவுடனே மனம் மிகவும் தெளிவாகிக் கதை முழுமையும் விளக்கமாய் எதிரே தோன்றியதாகவும் அவளே சொல்லுகிறாள். இவ்விதம் கற்பனை கதைகள் வரைவதில் வீட்டுக்காரியங்கள் எதுவும் கெட்டுவிட வில்லை. பிரோந்தியாள் மட்டுமல்ல, அவளது ஸகோதரிகளும் கதைவரைவதிலும், கவிதைகள் புனைவதிலும் தேர்ச்சி யடைந்தனர்.

ஃ

"ஜேன் அயர்" என்ற கதை லண்டனுக்கு அனுப்பப்பட்டு பிரசுரகர்த்தர்களால் புஸ்தகமாக அச்சிட்டு வெளியிடப் பட்டது. இதுவரை இந்த விஷயம் இவர்களின் தந்தைக்குத் தெரியாது. பிரோந்தியாள் தான் எழுதிய கதையைப் படித்துப் பார்க்கும்படி தந்தையை வேண்டினாள். அவரும் வியப்புடன் அதைச் சிலாகித்தார். மற்றொரு ஸகோதரியான ஆன்னாள் எழுதிய புதிய கதையும் அச்சிடப்பட்டு வெளியானது. இவர்களின் கதைகளைப் பிரசுரம் செய்தவர் இவர்களைப் பார்க்க நேர்ந்தபோது இச்சிறுமிகள் எழுதியதாக அவர் நம்பவேயில்லை. பிறகு உண்மையை யறிந்து கொண்டார்.

ஃ

பிரோந்தியாளின் காலம் துன்பமயமே. பொதுவாக நூலாசிரியர்களின் காலமே அவ்விதம்தான். அவளது தங்கமான இரு நற் சகோதரிகளும் கடவுளிடம் போய்ச் சேர்ந்து விட்டனர். ஆ! இத்துயரத்தை எவ்விதம் சகிக்க முடியும்? "ஜேன் அயர்" என்ற கதைக்குப் பிறகு "ஷேர்லி" என்ற கதையை பிரோந்தியாள் எழுதி முடித்தாள். அது முடியப்போகும் சமயத்தில் தான் ஒரு சகோதரி கடவுளிடம் சென்றாள். பிறகு அவள் எழுதிய கதைக்குத் தனது சகோதரிகளின் சம்பவத்தையே வைத்து "மானுந்தகாரப் படுகுழி" என்று பெயரிட்டாள். தான் கண்ட அநுபவங்களையே கதை முற்றிலும் நிறைத்து வைப்பதானாள். அவளுடைய சகோதரி எமிலி எழுதிய "வாடி வதங்கும் இரவுகள்" (உதரிங் நைட்ஸ்) என்ற கதையும் வெகுவாய்ப் பிரசித்தி யடைந்தது. கடைசியாக வில்லெட்டு என்று அவள் எழுதிய கதை அவளது தனித்த கிராமாந்தர வாழ்க்கையையே ஆதாரமாக வைத்து எழுதியதாகும். அதை அனைவரும் ஆவலுடனும் விருப்புடனும் ஏற்றனர்,

ஃ

பிரோந்தியாள் தன் தந்தையின் காரியஸ்தரா யிருந்த நிகலஸுவை 1854-ம் ஷ ஜூன் மாதத்தில் விவாகம் செய்து கொண்டாள். ஆயினும்,

---

பிறர் ஆத்திரப்பட்டு நம்மிடம் தங்கள் சங்கதிகளைச் சொல்ல வரும்போதுதான்,—அவர்கள் மறைக்கவேண்டிய சங்கதிகளையும் வெளியிட்டுவிடுவதில்,—அவர்களின் உள் ரகசியத்தை முழுமையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது. அந்த சமயம் நாம் அதை யறிய அக்கரைப்படாததுபோல் நடித்து மெதுவாக முழு சங்கதிகளையும் கேட்டுவிடுகிற வஞ்சகர்களாக இருக்கிறோம்.

இல்வாழ்க்கையை நடத்தி வெகுநாள் ஜீவிக்கவில்லை. சீக்கிரத்தில் தானே கணவனைக் கைவிட்டுக் கடவுளிடம் சேர்ந்தாள்.

ஃ

பிரோந்தியாள் மகா பெரிய மேதாவி. தன் அநுபவங்களையே கதையாக வரையும் ஆற்றல் படைத்த செல்வி. சமையல் முதல் யாவற்றையும் தானே செய்யும் புனிதவதி. தன் உடன் பிறந்தோரை நன்கு நேசித்த குண பூஷணி. தன் கடமைகள் தவறாத கற்பரசி. கபடு சூது கடுகாகிலும் தெரியாது. உடைமையென்பது கல்வியுடைமை என்னும் மூத்தோர் சொல்லுக்குத் திருஷ்டாந்தமாக விளங்கினள். கால முற்றும் கஷ்டங்களை கண்ட கண்மணி. கஷ்டங்களினின்றும் தோன்றுகின்ற ஞானத்தைப் பொறுக்கி யெடுத்து உலகுக்கு நூல் வழியாக உதவிய பரோபகாரியாவாள். இப் பெண்மணியின் சரிதையினின்றும் வேண்டிய புத்திமதிகளைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளுங்கள். எவ்வளவு கஷ்டத்திலும் முகங்கோணுது அன்புருவாக நின்றதையும் உங்கள் நெஞ்சில் பதியவையுங்கள். கல்வியைக் கவனியுங்கள்.

தந்தைக்குப் பதில் மனைவியா ?

ஒருவர் கடிதம் :—"நாளை ஏகாதசி. சென்ற வருடம் அங்கிருந்தேன். என் தந்தை இவ்வுலகிலிருந்தார். இப்போ தில்லை. தந்தைக்குப் பதிலாகப் புதிய மனைவிபோலும்! இனி வருகிற வருடம் எப்படியோ?

அக்கடிதத்திற்கு விடை :—ஒருவருக்குப் பதிலாக இன்னொருவர் ஒருபோதும் ஆகார். மனைவியால் தந்தையின் அதிகாரம் காட்டமுடியா. அடா மகனே, குழந்தாய், என்ற அமிர்த தாரைகளை மனைவி பொழிய இயலாது. தந்தை உணர்த்திய அன்பு ஒரு தனியன்பு ; ஒரு தனி ருசி; ஒரு தனிமாதிரி ; ஒரு தனி தலைமைத் தத்துவம் ; ஒரு தனிப் பட்ட அதிகாரமான குரல் அது. தந்தையைப்போல் மனைவியும், மனைவியைப்போல் தந்தையும் நடக்க இயலா. 1-2-3-4-ஒன்றுக்கொன்று உறவுள்ள இலக்கங்கள்தாம். ஆனல், ஒன்றுக்கு மற்றொன்று பதில் ஆகுமோ ?—சேருமோ ?—பொருந்துமோ? என்றைக்குமே அதது வேறு வேறுதான்.

மாதிரி கோரும் நேயர்களுக்கு :—

மாதிரிப் பத்திரிகைக்கு ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பாமல், வெறும் கார்டுமட்டும் எழுதினல் அவை கவனிக்கப்படமாட்டா. எவ்வளவுதான் வசிகர சாதுரியமாய்க் கார்டில் எழுதினும் பயனில்லை.

பதங்களின் சேர்க்கை

(முன்பக்கம் 464-லிருந்து.)

123. தேவதத்தன், (தேவ—சுவாமி) + (தத்தம்—வாக்கு) தேவ வாக்குள்ளவன்.

124. நட்புப்பேறு, (நட்பு—சிநேகம்) + (பேறு—அடைதல்) சிநேக மடைதல்.

125. நதி, (நத—ஒலி) ஒலித்துக் கொண்டு போதலால் இப்பெய ருண்டாயிற்று. நீரோட்டம்.

126. நந்தகன். (நந்து—கெடு) கெடுவோன்.

127. நந்தவனம், (நந்த—சந்தோஷத்தைத் தரும்) + (வனம்—தோட்டம்) பூந்தோட்டம்.

128. நமஸ்காரம், (நம—வணங்கல்) + (காரம்— செய்கை) வணக்கம்.

129. நாராயணன், (நாரம்—சலம்)+ (அயனம்—இடம்) விஷ்ணு

130. நிஷ்காரணம், நிஷ் +காரணம். காரண மின்மை.

131. நிசாரம், (நி—இல்லை) + சாரம்—ரஸம்) உபயோக மின்மை.

132. நிதிக்கோன், (நிதி—பொக்கிஷம்) + (கோன்—அரசன்) குபேரன்.

133. நிர்மானுஷியம், (நிர—அல்ல) + (மானுஷியம்—மனிதன்) மனுஷ சம்பந்த மில்லாமை.

134. நிர்மூலம், (நிர்—இல்லை)— + (மூலம்—வேர்) நாசம்.

135. நோயாளி, (நோய்-வியாதி) +(ஆளி—அனுபவிப்பவன்) வியாதியஸ்தன்.

136. பக்ஷணம், (பக்ஷி—உண்) தின்பண்டம்.

137. பக்ஷி (பக்ஷம்—இறகு) பறவை.

138. பஞ்சணை (பஞ்சு—மெல்லிய ஒரு வஸ்து) + (அணை—மெத்தை) பஞ்சு மெத்தை.

139. பதார்த்தம் (பதம் From பாதம்) + (அர்த்தம் + பொருள்) முயற்சியினால் தேடிய பொருள்.

140. பரமசாது (பரம்—சிரேஷ்ட) + (சாது—யோக்கியன்) சற்சனன்.

141. பராமுகம் (பரா—வேறு) + முகம். அசட்டை.

142. பரிபாலி, (பரி—அதிகம்) + (பாலி—காப்பாற்று)

143. பரிபூரண, (பரி-முழுதும்) + பூரணம்.

144. பரிவாரம், (பரி—அதிக) + (வாரம்—உரிமை) கூட்டம்.

145. பரோபகாரி, (பர—மறு) + (உபகாரம்—நயம்) பிறருக்கு நன்மை செய்வோன்.

146. பலவீனம், (பலம்—வலிமை) + (ஈனம்—இல்லாமை) பலக்குறைவு, சோர்வு.

147. பலா பலம், பலம் + அபலம். பலமும் பலயீனமும்.

148. பவானி, (பவம்—அழுக்கு) + (ஹானி—நாசம்) அழுக்கு நீக்குவோன்.

149. பாலனம், (பால—இரக்ஷி) இரக்ஷித்தல்.

(தொடரும்.)

உங்கள் வழி—எங்கள் வழி.

ஓ ! வந்தீர்களா ! வாருங்கள் சுபமங்களம்.
எது இத்தனை தயவோ? என்ன காரியமோ?
நாங்கள்உம்வீடுவருவதுஎன்றோ ஒருபோது
அன்போ--இங்குநீவிர்பன்முறைவருவதே?
உண்டானபோதுகோடானுகோடி உறவே!
நீங்கள் எங்ஙனமோ பிறரும் அங்ஙனமே.
எதிலும்பட்டுக்கொள்ளாமை அதிகயுக்தியே
தந்திரசாலி நீர் ஆனால் பிறரும் தந்திரரே.

எங்கள் வழி அன்புவழி. உங்கள் வழி யாதோ? எங்கள் அன்பில் கபடமில்லை.

எவர் வரினும் வருக வருக என்போம். கையில் இருப்பதையிட்டு உள்ளன்பை உணர்த்துவோம்

அவரவர்க்குத் தக்கபடியே தாளம் இடுவீர்.
இங்கும் உறவு, அங்கும் உறவாக நடிப்பீர்.
இடையே உமது காரியத்திலும் கண்ணுவீர்.
நாமோ—அன்பு மிககாட்டிப் பிரிந்திலோம்.
அணைத்து ஆதரித்துப் பின் கைவிட்டிலோம்.
ஏமாறி நோகவே எவரையும் செய்திலோம்.
வாய் உபசாரம் பேசிடும் வஞ்சக ரல்லோம்.
ஒப்பாரிப் பேச்சுகள் பேசவும் அறியோம்.
மனதில் ஒன்று, வாயில் ஒன்று வழங்கோம்.
தலையாட்டி மயக்கிடு தந்திரமும் அறியோம்.
அன்பு விருந்து கண்டு செலவு அஞ்சிடோம்.

எளிய குடி இது; பிழைபேச வேண்டாம்.
வரவுக்குள் நின்று, கடன் அஞ்சிவாழ்கிறோம்.
சிறுசிலவில் தங்கி, கடவுளை நம்பியுள்ளோம்
எம் சக்தியானுசார உபசாரத்தை ஏற்பீர்.
மறக்கவுமில்லை மறந்ததுமில்லை மறப்பதுமேதே
போகிறீர்களா? நும் அன்புவாழ்க வந்தனம்.

வாழ்க்கைக் குறிப்புகள்.

(முன் பக்கம் 556-லிருந்து)

5. தான் உலகத்தில் தோன்றியதும் தாயின் மார்பகத்தைப் பற்றிக் கொண்டு உறிஞ்சித் தன் பசியை நிவர்த்தித்துக் கொள்ளும் குழந்தை அதே விதமான மற்றொரு மார்பகமே ரதி சுகானுபவத்திற்கும் துணையாக இருக்கின்றதென்று பிறகு ஒரு காலத்தில் தெரிந்துகொண்டு அதற்கே கால் முற்றும் முயல்கின்றது. சிறு குழந்தையின் மூளையில் மடிப்புகள் கொஞ்சமாகவே யிருக்கும். அதனால் அதற்கு உலக அறிவு கிடையாது. பேதா பேதம் கிடையாது. வித்தியாச எண்ணங்கள் இல்லை. விபரீத நினைவுகளும் தோற்ற. பின்பு பருவம் மிகுதிப்பட்டு வளருந்தோறும், புத்தி விசாலமாகி, பக்குவா பக்குவங்கள் தெரிந்து, மதியூகமும் பெருகி, மூளையினிடத்து அதற் கேற்றபடி அதிகமான மடிப்புகளும் விழுந்து சுறுசுறுப்பான மனிதனாகின்றான். மூளையில் அதிக மடிப்புகள் விழுவதற் கேற்றபடி அறிவின் தீக்ஷண்ணியமும் இருக்குமாம். அந்த அறிவு நல்வழியில் சென்று விவாகத்தை நடத்திக் கொண்டு வாழ்ந்திருக்க நாடினால் அதற்கான வழி வகைகளைக் காட்டுவித்து க்ஷேமமான நிலையில் இருக்கும்படி செய்யும். விபசாரம், மற்றொரு ஸ்திரீயைக் கவர்ந் தேகுதல் முதலியவற்றில் மூளையின் அறிவு செல்லுமாகில் அதற்குத் தகுந்தபடி அந்தப் பெண்ணை எவ்விதத்தும் அப்பிக்கொண்டு போவதற்கான வழியும், சிறையின்வாசலைத் தரிசிப்பதற்கான பாதைகளும் தெரிவித்து அந்த விதமாக ஸர்வநாசத்தை யுண்டு பண்ணும். ஆகவே, எத்துணைப் புத்தி விசாலமிருப்பினும், நற்குணத்தின் வழியே பயிற்சி செய்யப்படாவிடில் அவை என்றைக்கும் பாழ்தான்.

6. ஒவ்வொரு அணுவிலும் பகவத் ஆக்ஞை என்பதொன்று கூடவே இருந்துகொண்டிருக்கிறது. அந்த அணு ஆண்டவன் அசைத்தபடியே அசைகிறது. அவர் எதை எதை எந்தப் பக்கம் திருப்புகிறாரோ அவ்விதமே அதுவும் திரும்புகிறது. மனிதன் ஒரு காரியத்தைச் செய்வதில், தான் அதைச் செய்ததாய்த் தனக்கு ஒரு பெருமையைக் கொள்கிறான். அந்தக் காரியம் பலிப்பதும் பலிக்காமற்போவதும் கடவுளின் செயலில் இருக்கிறது. ஒருவன் ஒரு விதையை நட்டு நீர் பாய்ச்சிவிடுகிறான். அத்துடன் அவன் வேலை தீர்ந்தது. அவ்வளவுதான் அவனால் செய்ய முடிந்தது. அதற்குமேல் அந்த விதைக்குள் ஜலமும் மண்ணின் சத்தும் உட்புகச் செய்து, அவ்விதைக்குள் இருக்கும் முளைக்கிற சத்துவத்தை வெளிக்கிளம்ப வைத்து மண்ணைத் தாண்டிக்கொண்டு பூமியின்மேல் இரண்டு இலைகளுடன் தோன்றுகிற சக்தியைக் கடவுளே செய்யவேண்டியவரா யிருக்கிறார். இதை மனிதன் செய்ய முடிகிறதில்லை. ஆனால், கடவுள் யாவும் மறைந்தவாறு இருந்து செய்து கொடுக்க, இலைகள் புறப்பட்டு, பிறகு ஒரு செடியாக முளைத்துப் பலன்தர, அப்பொழுது மனிதன் தான் நட்டுப் பயிர் செய்ததாய்ப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறான். உற்றுப் பார்த்தால் உற்பத்தித் தத்துவங்களை இவன் செய்வித்ததாக ஏற்படவில்லை. இவ்விதமே தனக்கு சந்ததியுண்டாவதில் தனது முயற்சியால் அது உண்டானதாக எண்ணிக்கொள்கி

ருன். தான் தேகசம்பந்தப்பட்டதால் சந்தானபாக்கியம் உண்டானதாக அவன் நினைவு. தேகசம்பந்தப்பட்ட அளவில் புத்திரபாக்கியம் உண்டாகிவிடுவது உறுதியானல், எத்தனையோ பலசாலிகட்குப் புத்திர பாக்கிய மில்லாமற் போவதும், மெலிந்த பலஹீனர்கட்குப் பல குழந்தைகள் பிறப்பதுமான ரகசியத்தின் தத்துவமென்ன? ஒரு நங்கையுடன் தேகசம்பந்தம் கொள்வதற்காகப் பூரண இடசக்தியை ஒரு ஆண்மகன் பெற்றிருந்தும், சந்தான லாபத்திற்காக எண்ணற்ற தடவை அவன் முயன்றிருந்தும், ஒருகுழந்தையுமின்றி வைர்பேரின்றிப் போவதேன்? இங்கு தான் தெய்வத்தன்மை புலனுகின்றது. ஸ்திரீபுருஷ சம்பந்தத்தில் ஆடவன் தனது வீரிய ஸ்கலிதத்துடன் திருப்தியடைந்து விலகிவிடுகிருன். இவ்வளவு வரைக்குமே மனிதனின் காரியம் நடக்கின்றது. அதற்குப்பிறகோ கடவுளின் வேலை துவக்கமாகிறது. புருஷனிடத்திருந்து வெளியான சுக்கிலத்தில் 20-கோடி கிருமிகள் இருக்கின்றனவாம். அவற்றில் 500-கிருமிகளை நேராக வைத்து அளந்தால், ஒரு அங்குல நீளத்தில் அந்த 500 - கிருமிகளின் நீளமும் அடங்கிவிடுமாம்! இவை 48-மணி நேரம் வரை உயிரோடும் இருக்கின்றன. இந்தக் கிருமிகள் ஸ்திரீயின் கருப்பையினுள் 15-நாட்கள்வரை ஜீவித்திருக்கும். இவற்றில் ஒன்ருே இரண்டோ எப்போதோ ஒரு காலந்தன்னில் ஸ்திரீயின் கர்ப்பகோசத்தின் வாய்க்குள் புகும்போதுதான் கர்ப்பம் உண்டாகிறது. இந்த ஒன்றிரண்டு கிருமிகள்மட்டும் உட்செல்ல, மற்ற கிருமிகள் யாவும் பயனற்றுப் போகின்றன. இவ்விதம் இந்த ஒன்றிரண்டு கிருமிகளைக் கர்ப்பகோசத்துக்குள் போகவும், போகாதிருக்கவும் செய்கிற சக்தி கடவுளிடம் இருக்கின்றது. அவருக்குச் சித்தமாயின் அந்தக் கிருமி கர்ப்பகோசத்திற்குட் புகலாம். தெய்வ அருள் அங்கு ஏவப்படாவிடிலோ எந்தக் கிருமியும் கர்ப்பகோசத்துக்குள் செல்வதுமில்லை; கர்ப்பம் நேர்வதுமில்லை. தெய்வசக்தி அத்தனை சூக்ஷ்மமாய் மறைந்து நின்று தொழில் இயற்றி வருகின்றது. இதை யுணராத மனிதன் ஓ! தான் செய்தது—தான் உண்டாக்கியது என்று தலைதுள்ளிப் போகின்ருன்! எல்லாம் அவன் செயல். எல்லாம் அவன் உடமை.

7. புத்திரோற்பத்தியை விரும்புகிறவர்கள் இந்தக் கிருமிகள் கருப்பை வாய்க்குட் செல்லுமாறு தங்கள் கலவி முடிந்த பின்னும் ஒன்றுபட்டவாருகவே சில நிமிஷங்கள் இருக்க வேண்டுமென்றும், அதிலும் ஸ்திரீயானவள் எழுந்திராமல் சயனித்தபடியே இருப்பது உத்தமமென்றும் சொல்லப்படுகின்றது. இந்தக் கிருமிகள் உப்பு ஜலத்திற்கும், குளிர்ந்த ஜலத்துக்கும் இறந்துவிடுமாம். ஆதலின், புத்திரோற்பத்தியை நாடும் ரமணிகள் தங்கள் கலவி தீர்ந்தபின் எவ்வித ஜலம்கொண்டும் சுத்திசெய்து கொள்ளக்கூடாதென்றும், அவ்விதம் ஜலம் பட்டால் கிருமிகள் இறக்குமாதலின் அது சந்தானத்திற்குத் தடையென்றும் உணரவேண்டும். சந்தான பாக்கியம் கூடாதென்ற கருத்துடன் சிலர் ஜலத்தால் சுத்திசெய்து கொண்டாலும், வேறு வழிகளில் கருப்போற்பத்தி உண்டாகாதபடி தடுத்தாலும் கூட எவ்விதமோ கருகூடிக்கொண்டு வயிறு பெருத்துக் குழந்தையும் பிறந்துவிடுகின்றது. இதில் சந்தானம் வேண்டாமென்பவர்கட்கே கிடைப்பதும், வேண்டுமென்று விரதங்கள் நோற்றுக் காசி ராமேஸ்வரம் சுற்றிவிட்டு வந்துங்கூடக் கிடைக்காமற் போவதும் ஒரு வேடிக்கையே.

(தொடர்ந்து வரும்.)



ஹாஸ்ய சஞ்சீவினி



—"நண்பா! நீ யோக்யனா?"

—"இந்த நிமிஷம்வரையில் நான் யோக்கியனே. அதற்குப் பிறகு நடப்பதை அறிந்துகொண்டுசொல்ல நான் ரிஷியுமல்ல—முனிவருமல்ல.

வாஸன்:—காலையில் ஒரு சிட்டிகைப்பொடி மூக்கில் ஏறினால் எவ்வளவோ வேலைகள் நடக்கும்.

நேசன்:—அத்துடன் மூக்கைச் சிந்த ஒரு அழுக்குத் துண்டையும் வைத்துக்கொள்.

வினா:—ஒருவனை ஒருத்தி வைகிறாள், சபிக்கிறாள், அது அவ்விதமே நடந்துவிடுமா?

விடை:—வேண்டுமென்றே துவேஷம் காண்பித்து எந்த நன்மையுமே செய்யாமல் குற்றங் காண்பதே என்றும் தொழிலாகி, அதிலே வயிறெரிந்து சபித்தால் ஒன்றும் பலிக்காது. அந்த சாபம் தனக்கே திரும்பிக் கொள்ளும். என்றும் தான் அன்பாக இருந்தும் தன்னிடம் விசுவாசங் கெட்ட ஒரு துரோகியைப் பார்த்துத் தாளாது வயிறெரிந்தால் அது சீக்கிரம் பலித்துவிடும்.

கணவன்:—கண்ணே! இன்னொரு முத்தம் தாடி.

மனைவி:—அதோ உங்கள் தாயார் வருகிறார். இவ்வளவு சரஸம் போதும். எட்டி நில்லுங்கள்.

பாகவதர்-ஸ்வாமி! வெளிக்கோஷ்டியாரை வெளியிலேயே நிறுத்துங்கள். உள்ளுக்கு விடவேண்டாம்.

மற்றொரு பாகவதர்:— என்ன ஸ்வாமி, நீர் உள்கோஷ்டியோ? எங்களைவிட சுத்தமோ? நான் மனைவியோடு ஒழுங்காக நிற்கிறேன். நீரோ அந்த விதவையுடன் பகிரங்கமாக இருந்துகொண்டு கோஷ்டியில் தாளம் போடுகிறீர். உம்மைவிட நான் எவ்வளவோ மேலானவன். நீரும் வெளிக் கோஷ்டிதான், வெளியே வாரும்.

இன்னொரு பாகவதர்:—எல்லாம் சாப்பாட்டுராமநாமக் கோஷ்டிதான்!

வினா:—மரியாதைகளையெல்லாம் கவனிக்காமல் மனமொத்துப் போவதெப்போது?

விடை:—அன்பு முற்றியபோதும், காதல் ரஸம் சட்டியிலே கொதித்துப் பொங்கும் போதும்தான்.

வினா:—தன்னிடத்து அன்பாயிருப்பவர்களை மிதம் மீறிக் கொடுமைப்படுத்தினால் அதன் முடிவு என்ன?

விடை:—தனது கொடிய எண்ணங்கள் ஒவ்வொன்றும் நிறைவேறாமல் நாசமாய்ப் போவதைத் தானே நேரில் தன் கண்ணால் பார்ப்பது தான்.

தேவன்:—ஒருவன் ஒரு பெண்ணைப்பார்த்து "அவள் மிகவும் அழகாயிருக்கிறாள்" என்று கூறினால் அதன் கருத்து என்ன?

மாதவன்:—இடத்துக்குத் தக்கபடி பொருள்படும். ஒரு தாசியைப் பார்த்து ஒரு உத்தமன் அவள் எத்தனை அழகாயிருக்கிறாள் என்று சொல்வானாகில், அதற்கு அடுத்த நிமிஷமே இத்தனை அழகும் ஒருவனுக்கு மனைவியாயிருந்து சுகிப்பதற்

இல்லாமற் போனதே; அந்த கற்புஇல்லாமல் இந்த அழகு என்ன பயனைத் தருமென்ற நினைவு உடனே தோன்றும். "என் அக்கா இன்றைக்கு வெகு அழகாயிருக்கிறள்; பட்டுச் சேலை கட்டியதில் சிறு பெண்போலிருக்கு" என்று ஒரு தம்பி கூறினல் அது அன்பாலாகும். "ஆ! எத்தனை அழகு" என்று வேறொருவன் சொல்வது அவளை மென்று தின்று விடுவதற்கே.

சுப்பு:—மடிமடி என்று திரை போட்டுக்கொண்டு வெகு வைதிகமாய் உள்ளுக்குள் வெகுநேரம் சாப்பிடுகிறீர்களே? அது ஏன்?

குப்பு:—தாங்கள் உண்ணுகிற ஒரு தவலைச் சாதமும் ஒரு சட்டிக் குழம்பும் அதிகமானவடைகளும் வெளியே தெரிந்துவிடாம லிருப்பதற்குத்தான்.

—"மூக்கு நிறைந்து மறைந்து விடும்படி நாமம் போட்டுக் கொண்டால்—அல்லது ஆடவர்கள் போடுகிற நாமத்தைப் போல் பெண்கள் போட்டுக் கொண்டால் அதிகப் பக்தி ஏற்பட்டு விட்டதென்று அருத்தமா?"

—"அப்படி ஊராரை மயக்க வேண்டுமென்றே அவர்கள்எண்ணம். இவர்களுக்கு வைகுண்டத்தில் முதல் வகுப்பு நாற்காலி கிடைக்கலாம். அல்லது ரகசிய-தனித்த பாபங்களுக்கு நரகத்தில் இடம் ஏற்பட்டிருக்கலாம்.

—"எஜமானன்—வேலைக்காரன் என்றால் அர்த்தமென்ன?"

—"எல்லா கவலைகளையும் தாங்கி முதுகுவளைந்து, வேளைக்குச்சரியான சாப்பாடு புசிக்கவும் நேரமின்றி அலைச்சல் படுகிறவருக்கு எஜமானர் என்று கௌரவப்பெயர். மணியாய்விட்டது, இனி வீட்டிற்குப் போகவேண்டியது தான்; எந்தவேலை எப்படியானலென்ன என்று கவலையற் றிருப்பவனுக்கு வேலைக்கார ராஜா என்று பெயர்.

நல்ல முத்துக்கள்.

நல்ல முத்துக்கள் ஒவ்வொரு முத்துச்சிப்பியிலும் உண்டாகிவிடுவதில்லை. சிலவற்றில்தான் அவை நல்ல உருவுடன் அகப்படுகின்றன. அவ்விதமே, தோன்றிய யோசனைகள் யாவும் வியாசம் எழுதப் பொருந்திவிடுவதில்லை. சிலதான் வியாசம் வரைதற்குத் தூண்டுதலாகி நன்முத்தாய்ப் பொருந்திக் கூடுகின்றன. நாம் காண்கிற அநேக மனிதர்களில் நமக்கு உதவுகின்றவர்களும், நண்பர்களாவோரும் அபூர்வமாய் ஒன்றிரண்டு பேருக்குமேலில்லை.

ஊராரைப்பற்றி எவ்வளவு கதை பேசிடினும் அது இனிப்பாக இருக்கிறது. ஆனல், தன்னைப்பற்றி அந்த சமயம் அருகிலிருப்போர் குறிப்பிட்டு ஊர் அநுபவத்தோடொட்டிப் பேசிவிட்டால் உடனே கோபம் துள்ளி விடுகிறது. இவ்வித கோபத்தையே ஆரம்பமாகவைத்து "பத்மாவதி சரித்திரம்" என்ற நாவலை அதன் ஆசிரியர் எழுதினர். உள்ளதைச்சொன்னல் உடம்பெரிச்சலே!



சுயமரியாதைக் கப்பல் :—

[ஆசிரியர்-ஸ்ரீமான் K. S. நாராயணன் அவர்கள். விலை ரூ. 1.]

இது சுயமரியாதைத் தத்துவங்கள் நிறைந்த துப்பறியும் நாவலாக அமைக்கப்பட்டுள்ளது. பிராமண தூஷணை, மததூஷணை கலப்பு விவாகம் முதலிய லக்ஷணங்கள் இதில் ஸம்பூர்ணமாய் நிறைந்துள்ளன. வழக்கம்போல் ஓர் பிராமணப்பெண் கதாநாயகியாகத் தோன்றி பிராமணரல்லாத ஒருவனைமணக்கின்றாள். தனது ஆங்கிலப்படிப்புப் புத்தியையும் அந்த நங்கை காட்டுகின்றாள். சுயமரியாதைப் பிரஸங்கமும் வேண்டியவரை இருக்கிறது. இராமாயணம் முதலிய பூர்வநூல்களின் நிந்தைகளும் வண்டி வண்டியாயுள்ளன.

விசார சருமர்:—

[இது சண்டேசுர நாயனார் சரித்திர நாடகம். ஆசிரியர் ஸ்ரீமான் K. S. கலியாணசுந்தர முதலியார் அவர்கள். விலை அணா 2.]

சிறு நாடகம். இன்பமான நாடகம். பக்திரஸம் நிறைந்த நாடகம். அழகிய பாக்கள். மனத்தை உருக்கும் வழியில் நூல் அமைந்துள்ளது. நல்ல அச்சு. நல்ல மாதிரி. நற்செயலாகும். ஆசிரியரைத் தமிழ்ச் செல்வர்கள் ஆதரித்தல் வேண்டும்.

பாலகிருஷ்ண பஜனார்ஜித மேனும் அமிர்தகானம் :—

இதன் ஆசிரியர் ஸ்ரீமான் வீ. எஸ். வீரணக் கோனாரவர்கள். விலை அணா 5. இதில் பக்திரஸ கீர்த்தனைகள் அடங்கியுள்ளன. புது வழியில் ஸ்ரீ பாரதியாரைப் பின்பற்றிக் கவிதைகள் புனைவது நலமாகும்.

சாந்திபுரக் கோலை (முதற்பாகம்)

[ஒரு நாவல். புதுவை - ஸ்ரீமான் அ. இலட்சுமண முதலியார் அவர்கள் F. C. R. A. இயற்றியது. விலை ரூபா 1. டபிள் கிரவுன் 1x16-ல் 235-பக்கங்கள்.]

இது மொழிபெயர்ப் பென்று காண்கின்றது. இயற்கையின் நிகழ்ச்சிகளை உள்ளவாறு உரைக்குந்திறன் இதில் பூர்ணமாயுள்ளது. கதாரம்பம் வெகு உருக்கம். அன்புள்ள மனைவி, அன்புள்ள புத்திரி, அன்பின் களஞ்சியமான கணவன். இந்த அழகிய நற்குடும்பம் உள்விவர முணர்ந்த ஒரு வேலைக்காரியால் பாழ்படுங்காட்சி மிகுந்த துக்ககரம். ரகுபதி கஸ்தூரியிடம் கெடினும் பிறகு மிக்க உத்தமனே. எனினும், தவறிய ஒழுக்கம் இழைக்கும் கேடும், அதன் வாதனையும் வெகு பயங்கரம். ரகுபதி நிரபராதியென்பதைக் கதையின் மத்தியில் விளக்காமல் 2-ம்பாக முடிவில் கூறுவதாயின் சுவை குன்றாது பெருகும். சுந்தரவல்லியின் மரணம் தேவையில்லை. அவள் ஜீவித்திருப்பதே வாசகர்கட்குப் பிரியமா யிருக்கும். மறைந்துள்ள விரோதி வெங்கண்ணாவின் சூட்சி ஒரு படுமோச வலை. ஞானுவின் சிநேகவாஞ்சையும் அதிதிவ்யம். இது சோகரஸமே நிறைந்த நாவல். துளி இன்பமும் இதில் அபூர்வமே. இதன் இரண்டாம் பாகம் எப்படியோ?

தமிழ்க்கடல் வெளியீடு—ஆத்தி சூடி, கொன்றைவேந்தன் :—

[ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் பதிப்பித்தது. உயர்ந்த காகிதத்தில் டபின் கிரவுன் 1x16-ல் 240-பக்கங்கள் கொண்டது. காலிகோ பயிண்டுடன் அருமையான அழகிய பதிப்பு. விலை ரூபாய் ஒன்றே.]

நூல் மிகு திவ்யம். அதி ஸ்வாரஸ்யமான ஒரு முன்னுரை. அதன்பின்னர் பாடபேதக் குறிப்பு; அதன் ஆராய்ச்சி வெகு இன்பம். பிறகு ஆத்திசூடி மூலமும் உரையும் தொடங்குகின்றது. ஒவ்வொன்றுக்கும் இராமாநுஜக் கவிராயர் எழுதிய உரையும் தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது. பின்பு திருநெல்வேலிப் பிரதியின்படி ஆத்திசூடிக்கு மறுபடியும் ஒரு அற்புதமான உரை விளக்கப்பட்டுள்ளது. அதன்பின் 'கொன்றை வேந்தன்' ஆரம்பமாகி அதற்கு உரையும் கருத்தும், கவிராயரின் உரையும் கொடுக்கப்பட்டு, பின் திருநெல்வேலிப் பிரதியிலுள்ள புதிய உரையும் சேர்க்கப்பட் டிருக்கின்றது. தமிழ்ச்சுவை பெரிதும் ததும்பியுள்ளது. இப்பதிப்பின் அருமையையும் புதுமையையும் என்னென்போம். ஸ்ரீமான் நமச்சிவாய முதலியாரவர்களின் கைப்பட்டதெல்லாம் நறுமணங் கமழ்வது கண்கூடு. பழய "ஜநவிநோதிநி"ப் பத்திரிகையை அழகுபடுத்திப் புதுப்பித்தார். இப்பொழுது தமிழ்க்கடலில் உதிக்கும் அமிர்தத்தை யாவருக்கும் பங்கிட முன் வந்துள்ளார். ஸ்ரீமான் முதலியாரவர்கள் "தமிழ்க்கடல்" வெளியீடு அனைத்தையும் பிரகடனப்படுத்திப் பூர்த்திசெய்து வெற்றி கொள்ளுமாறு இறைவன் அருள்புரிக. ஆசிரியர் இன்னும் ஐம்பது வருடங்கள் வாழ்க. மற்ற வெளியீடுகளையும் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றோம். தமிழ்மொழியின் கௌரவத்திற்கேற்றதான உன்னத பதிப்பு இது.

ஒரு தந்தையின் மொழி.

"அவனுக்கு வியாபாரப்பற்றுதல் சற்றுமில்லாததால் காலையில் எழுந்ததும் காபி சாப்பிட்டதும் எங்கேயாவது செல்வதும், மத்தியானம் வந்து சாப்பிடுவதும், மறுபடியும் வெளிச்செல்வதும், இரவு 8, 9, 10-மணிக்கு இஷ்டமானபோது வருவதுமாய் வெகு குஷாலாய்க் காலங்கழித்து வருகிறான். கொஞ்சமும் பொறுப்பு தெரியவில்லை. அவனுக்கு எவ்வளவு நல்ல புத்தி சொல்லவேண்டுமோ அவ்வளவும் சொல்லியாயிற்று" என்கிறார் ஒரு தந்தை.

தனது கற்பைக் கொடுத் திருக்கும்போது தன் பக்கமாகவே எஜமானர் பேசுவா ரென்று வேலைக்காரி நினைக்கப்போக, எஜமானரோ தமது மனைவியின் பக்கமே பேசுகிறார். கற்பை இழந்த காரிகையோ ஏங்கி வயிறு எரிகிறாள்.

பெண்கல்விக்குள்ள பிணி.



பெண் கல்வியின் விருத்தி தடைபடுதற்கு வீட்டிலேயே சில காரணங்கள் இருக்கின்றன. பெண்பிறவிக்கும் வீட்டுக் குடித்தனத்துக்கும் நெருங்கிய சம்பந்த மிருந்துகொண்டு ஒன்றைவிட்டொன்று பிரிவதற்கில்லாதபடியிருப்பது ஒரு விசத்திரம். பெண் சிறுமியாயினும் அவளையும் வீட்டுக் குடித்தன வேகம் பற்றி யிழுக்கின்றது. வீட்டுச் சில்லரை வேலைகளையும் செய்துகொண்டு, அதிலும் பயின்றுகொண்டு, அப்பால் கல்வியும் கற்றுக்கொண்டு, இடையில் விளையாடி மகிழவும் நேரம் தேடிக்கொள்ள வேண்டியிருக்கிறது. வீட்டில் தாயார் படுத்துவிட்டால், மாதத் தீட்டாகிவிட்டால், விருந்து வந்துவிட்டால்—குமார்த்தி பள்ளிக்கூடம் போவதற்கின்றி வீட்டு வேலைகள் செய்ய வேண்டி வருகிறது. அதுமட்டுமல்ல, கைக் குழந்தையைத் தூக்கிவைத்துத் திரிவதும் சிறுமியின் ஒரு முக்கிய வேலை. அதையும் செய்துகொண்டு படிப்பும் படிக்க வேண்டும். கடை வீதி செல்ல, வாங்கிவர ஓடவும் வேண்டும். இவ்வளவுக்கு இடையிலேதான் படிப்பு! அந்தப் படிப்பை வீட்டில் கவனிப்பாரும் சிலரே! இதன் நடுவில் வீட்டு வேலைகளால் பாடசாலைக்குச் செல்வதும் தடைபட, இத்தனை இடையூறுகளுக்கு மத்தியில் பெண்கல்வி விருத்திகொள்ளவேண்டியுளது. சிறுவர் கல்விக்கு இந்தத் தடைகளில்லை. தங்கையைத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பது பையனின் வேலையாகவும் இல்லை. அந்த வேலை சிறுமிக்கே விடப்பட்டிருக்கிறது. வீட்டுக் குடித்தனவேலைகளில் பழக்கமும் பெண்ணுக்கு வேண்டியதுதான். என் செய்வது?

பிறர் பணத்தில் பிறருக்குச் சாமான்கள் வாங்கிவந்து கொடுத்துவிட்டு, அந்த வகையில் கடைக்காரனுடன் பழகி, பத்து வரவு வைத்துக்கொண்டு, பெரிய தொகைக்கும் கடன் வாங்கி, அதைத் திரும்பக் கொடுத்து இவ்வாறாகத் தன்னைப் பெரிய மனிதனாகக் காட்டிக் கொள்வதும் உண்டு. இவ்விதமே சிலர் எந்த சங்கதியிலும் தங்களுக்கு ஒரு வகையில் லாபத்தைத் தேடிக் கொள்ளும் சுயநலஸ்தர்களாக இருக்கிறார்கள்.

ஒரு பெண்ணுக்கு ஆடவன் முக்கியமானவன். ஒரு பதார்த்தத்திற்கு உப்பைப் போன்றவன். உப்பின் குணம்போய் விட்டால் அந்தப் பதார்த்தத்திற்கு யோக்கியதை ஏது? இவ்விதமேதான் கணவனுக்கு மனைவியும்.

சில ஆடவரிடத்தில் பெண்கள் சாதாரணமாகப் பேசுகிறார்கள். அந்த ஆடவரும் களங்கமற்று வார்த்தையாடுகிறார்கள். ஆனால், மற்ற ஆடவர்கள் அந்தப் பெண்களுடன் பேச இந்த அன்னிய ஆடவரே ஒப்புவதில்லை. தங்களைப்போன்ற கபடற்ற வெள்ளை மனம் அந்த ஆடவர்கட்கு இல்லையென்று குற்றஞ் சாட்டுகிறார்கள். உன் சங்கதியும் அப்படியேதான் இருக்கிறது.



வாழிய நாளே!

[முன் குறிப்பு:—நாளே! நீ வாழி. இவ்வுலக இயல்பை நீ நன்கு அறிந்திருக்கிறாய். நீ எத்தகைய உன்னதநிலை பொருந்தியவனென்பதை எவரும் உணர்ந்துகொள்ளவில்லை. மாயாவியாகிய உன்னை இதுவேளை நான் என்னென்று எத்தனை எத்தனை வகையாக எண்ணுவதோ? உன்னை நலம் செய்பவனாக எண்ணலாமா? ஆ! நாளைக் கண்டோம், இது நல்ல நாளாகுமென்று நினைக்கையில் அது வேறுவிதமாகிவிடுகிறதே! உன்ளை ஒரு ஆபரணம்போற் கருதவோ? நீ அழகு தருவதுபோல் அழியவும் வைப்பதால் உன்னை ஆபரணமாகப் போற்றுவதெப்படி? உன்னை வழித்துணையாகவாவது நினைக்கலாமோவெனில் அதற்கும் நீ நிச்சயமற்றவனாய் மறைந்து மறைந்து எழுகின்றாய். உன்னை ஒரு தெப்பமாகக்கொண்டு துன்பக்கடலைப் கடக்கலாமெனில், துன்பவுருவாகவும் நீ அடிக்கடி மாறுவதால் உன்னைத் தெப்பமாகக்கொள்வதும் நலமில்லை. சுட்டெரிக்கும் நெருப்பாக உன்னைச் சொல்லலாமோவெனில் உன்னுடாகிய சூரிய காந்தி இல்லையாகில் உலகில் மகிழ்ச்சி என்பதும் அரிதே. ஆதலின் எரித்துவிடும் நெருப்பு என்று பேசுதற்கும் இல்லை—என்று இவ்வாறாக நாட்களின் அதிசயச் செயல்களையும், அவற்றின் அழகையும், அவை செய்யும் கோலத்தையும் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன. ப-ர்.]

வாழிய நாளே! வாழிய நாளே!
ஆழிசூழ் உலகினை அறிந்தனை வாழி!
உன்னிலை எவரும் உணர்ந்தவ ரிலையால்
என்னென் றுனையான் எண்ணுகேன் இதுகால்?
நலனென உரைப்பதும் நன்றோ நவில்வாய்;
[1]கலனெனக் கழறுதல் கண்ணிய முறையோ?
துணையென மொழிதல் தூய்மைத்தாமோ?
[2]புணையே என்பதும் பொருந்துமோ நின்பால்?
நிழல்நீ என்பதும் நன்றெனப்படுமோ?
[3]அழல்நீ என்பதும் அழகிய தாமோ?
அன்பே என்றுயான் அழைப்பதும் ஆமோ?
என்னிரு கண்ணே என்றுயான் மொழிபவோ?

ஃ

---

1. கலன்—ஆபரணம். 2. புணை—தெப்பம். 3. அழல்—நெருப்பு.

எல்லையில் இனிக்கும் இனியகற் கண்டோ ?
தொல்லைபல் தீர்க்கும் தோன்றாத் துணையோ ?
சாவா மருந்தெனும் சாகா வமுதோ ?
பூவாய்ப் பொலியும் பூந்தளிர் வனப்போ ?
அலது, நலனாய், நட்பாய் நலமாம் உயிராய்
உடலாய் உணர்வாய் திடந்தரு துணையாய்
கண்ணாய்க் கரும்பாய் மண்ணின் பொருளாய்
காலம் அளக்குங் கோலது வாகி
இன்றாய் நேற்றாய் நன்றே தோன்றாநற்
காலையாய் மாலையாய் கடும்பக லதுவாய்
நிலவாய் நிசியாய் நீளமாம் வாழ்வை
நொடியிற் போக்கும் கடியதோர் சக்தியால்
தோன்றுவ தாமோ தோன்றாநன் றாளே !

ஃ

அதான்றி,
உலகில் இதுவே உற்றவோர் நிதியாய்
பலகால் அன்பால் போற்றும் அன்னையின்
தனியிளங் குழவியைத் தாய்பாற் பிரித்தே
இனிய சுகத்தை இழக்கப் பண்ணியும்—
இகத்தில் இன்பம் இதுவாம் என்றே
நகமும் சதையுமாய் நாடியே வாழும்
காதலர் இருவர் கதறியே வீழ
வேதனை பலவும் வேணது இழைத்தும்—
ஈருடல் ஒருயிர் இவரென காணும்
ஆருயிர் நேயர் அவதியுற்றகலவும்—
அண்ணன் தம்பி அம்மான் மாமி
பெண்டு பிள்ளை அண்டை அயலார்
ஏனைய பெரியரும் ஏங்கித் தளர
ஆணை யீதென அவரவர் பிரித்தும்
காலன் கூற்று கழறுபல் பெயரொடு
கோலஞ் செய்யொரு கோலங் கொண்டனை—

ஃ

ஆயினும், அன்ப ஆருயிர் அனையாய் !
ஞாயம் நோக்கி நகருமுன் திறத்தை
அடியேன் அறிவகை அறைகுவன் சிலவே
படிமிசை வாழ்வில் பகருமெவ் வகையும்

ஒரு புஸ்தகமும் பணம் கொடுத்து வாங்காமலே இரவல் வாசிப்பில் நக்கி விட்டு, தாங்கள் எவ்வளவோ புஸ்தகங்களுக்குப் பணம் கொடுத்து வாங்கி யிருப்பதாக டம்பப் பேச்சுகளை அளக்கிறார்கள்.

அறவழி நடக்க அருந்துணை ஆனுய்———
என்றுதோன் றிடினும் அன்றும் புதிதாய்
இன்றுகாண் இயல்பாய் இலங்குபேர் அழகனே!
ஒன்றுநீ உலகில் இன்றெனி இருப்பின்
என்னும் மனிதர்(தம்) எண்ணுமிவ் வாழ்வும்
துக்கம் மறைத்துத் துயரைப் போக்கும்
பக்குவம் அறிந்தவன் பகருநீ யன்றோ?
"நாளாற் றுகிறது நல்லார் ஆற்ருர்"
என்றே உலகம் என்றும் உரைக்கும்.

(மற்றதில் முடிவு.) மு. துரைப் பிள்ளை.

எல்லோருக்கும் நல்லவனுகிவிடு.

நீ போகிற இடத்தில் உன் சௌகரியத்துக்கு வேண்டிய பக்ஷணமோ பாலோ பழமோ மற்றும் எதுவோ அங்கு கொடுக்கப்படாவிடில், நீ சிரித்துக்கொண்டே உன் செலவில் வாங்கி வைத்துக்கொள். இதில் எது சாமர்த்தியமென்ருல், அப்படி வாங்கியதில் பாதியை வீட்டிலுள்ளோருக்குப் பகிர்ந்து கொடுத்து நீயும் சாப்பிடுவதுதான் பெரிய மயக்கு வித்தை! அவர்கள் வாங்கித் தராதது அவர்கள் நெஞ்சிலும் குத்தும். அத்துடன் நீ வீட்டிலுள்ளோருக்குப் பங்கிட்டுத்தருவது இன்னும் அதிகமாகக் குத்தும். ஆனல், பாலமட்டும் பங்கிடாதே. அதைமட்டும் நீயே முற்றிலும் குடித்துவிடு. எந்த சண்டையிலும் சம்பந்தப்படாமல் ஒதுங்கி, உன்னிடம் வீட்டிலுள்ளவர்கள் மற்றவர் மீது புகார் கூறினல் தலையாட்டியபடியே வெகுசிரத்தையாய் அதைக் கேட்பதுபோல் நடித்துக்கொள். நீ நடிக்கும் திறுசு, உன்னைத் தங்கள் மனிதனுக நினைக்கும்படியும் இன்னும் அதிக சங்கதிகளை உன்னிடம் வாரிக் கொட்டும்படியும் இருக்கவேண்டும். அவர்கள் சொல்வதில் உனக்கு சிரத்தையில்லை யென்கிற உண்மை வெளிவராதபடி நட. எதையும் வணங்கியபடி ஒரு காதில் கேட்டு மறு காதின் வழியே விட்டுவிட்டு, அதைப்பற்றி எவரிடமும் ஒன்றும் கேளாமல்—எல்லோருக்கும் நல்லவனுகிவிடு. வீட்டிற்குள்ளே பத்து பகை விரோதங்கள் இருந்தால், ஒருவருக்கொருவர் பகைத்துக் கொண்டுள்ள அத்தனை பேரிடமும் நீ நேசமாய்ப் பொதுமனிதனுய் வெகு உறவுமாக நடந்துகொள்.

கூட்டுக்குடியிருந்த இருவர்.



ஒருகாலத்தில் ஒரு சூதனும் ஒரு மூடனும் கூட்டுக் குடியிருந்து வாழ்வதாக ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். மூடனிடம் ஒரு பை நிறையப் பணமும் துட்டும் இருந்தது. அதைக் கண்டு சூதன், நேசா! முதலில் உன்பையில் உள்ளது செலவாகட்டும், பிறகு என்னிடமுள்ள பையிலிருக்கும் பணத்தைச் செலவிட்டு இருவரும் புசிக்கலாமென்றான். மூடனும் அதற்கு ஒப்புக்கொள்ள, இருவரும் அந்தப் பையிலுள்ள பணத்தைச் செலவு செய்து புசித்துக்கொண்டு சிறிது காலம் சுகமாயிருந்தார்கள். சுகமாய்க் காலங் கழிக்க வழியிருந்தால் சச்சரவுக்கு இடமேது? ஃ

மூடனுடைய பண மெல்லாம் செலவானதும், சூதன் ஒரு வெறும் பையை மூடனிடம் காண்பித்து இதில் நிறையப் பணம்போட்டு வைத்திருந்தேன். எவரோ பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு வெறும் பையை மட்டும் போட்டுவிட்டார்கள். ஆனதால் என் பங்குக்குப் பணம் எப்படிக் கொடுப்பேன்?— நம்முடைய கூட்டுறவு இவ்வளவோடு முடிய வேண்டியதுதான் என்றான்.

ஃ

“வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை” என்கிறபடி மூடன் அதை உண்மையென்று நம்பி, எனக்கு வேறு வேலை எதுவும் தெரியாதே என்ன செய்கிறது என்றான். அதற்கு சூதன் வேலை நம்மைத் தேடி வருகிற வரையில் நடந்து போய்க்கொண்டே இருப்போம் என்றான். அதற்கு மூடனும் சம்மதிக்க, இருவரும் போகப் புறப்பட்டார்கள். வெகுதூரம் போன பிறகு ஒரு மலையடிவாரத்தில் ஒரு வர்த்தகன் இரண்டு மூட்டைகளுடன் இருந்ததைப் பார்த்தனர். அவன் தன் மூட்டைகளை தூக்கிவந்தால் இருவருக்கும் ஒரு ரூபாய் கொடுப்பதாகச் சொல்ல, அதற்கு இருவரும் சம்மதித்தனர். உடனே சூதன் மூடனைப் பார்த்து நீ முதலில் மலைமேல் இரு மூட்டைகளையும் தூக்கிப்போ, பிறகு மலையின் கீழ்ப்பக்கம் இறங்கும்போது நான் தூக்குகிறேன் என்றான். மலைமேல் ஏறுவதுதான் அதிக கடினமென்பதை மூடன் அறியாமல் அதற்கு ஒப்புக்கொண்டான். சூதனோ கீழ்ப்பக்கம் இறங்கும்போது எங்கேயோ மறைந்து போய்விட்டான். பிறகு கடைசியிடம் வந்தபோது சூதன் எதிரில் வந்து உன்னை எங்கெங்கு தேடுகிறது, நான் வழிதப்பிப் போய்விட்டேன். அதனால் மூட்டையை நான் தூக்கமுடியவில்லை என்றான். இதையும் மூடன் உண்மையென்று நம்பினான். பிறகு அந்த வர்த்தகன் ஒரு ரூபாய் தந்து அவர்களுக்கு உணவும் அளித்தான்.

ஃ

அவ்வர்த்தகனிடமே சிறுவேலைகள் செய்துகொண்டு நன்றாய்ப் புசித்திருந்தார்கள். பிழைப்பு எப்பொழு

பத்தாயிரத்துக்குச்சொத்தாளி யென்று பெயரே தவிர, நாலு காசு நல்ல விஷயத்தில் செலவிடக் கைநீட்டத்தைக் காணோம். வயிற்றுக்குப் போடவும் காணோம். வாய் நீட்டத்திற்கு மட்டும் குறைவில்லை.

தாம் நிச்சயமாக இருக்கிறதா? எத்தனை பிழைப்பு தப்பிப் போகிறது? திடீரென்று வேலை போய்விடுவதில்லையா? சூதன் ஒருநாள் அந்த வர்த்தகனின் பணப்பையைத் திருடிவிட, அதன்மேல் அவ்விருவரையும் அவன் அடித்துத் துரத்திவிட்டான். சூதன் திருடிய சங்கதி மூடனுக்குத் தெரியாவிடினும் அடிகளைமட்டும் வர்த்தகனிடம் நன்றாக வாங்கிக்கொண்டான். ஐயோ பாவம்! பிறகு மறுநாள் அதிகாலையில் இவ்விருவரும் ஒருவருக்கும் தெரியாமல், தாங்கள் அவ்வூரில் வாங்கிய கடனையும் தீர்க்காமல் புறப்பட்டுப் போய்விட்டார்கள். மூடனுக்குக் கடன் ஒன்றுமில்லை. எல்லாம் சூதன் வாங்கிய கடன்தான்.

ஃ

வழியிலே ஓரிடத்தில் ஒரு குடியானவன் கம்பங்கொல்லையில் ஆயாலோட்டிக் கொண்டிருந்தான். அவன் இவர்களைப் பார்த்து, நீங்கள் இங்கிருந்து பொழுதுபோமளவும் ஆயாலோட்டுவீர்களானால், உங்களுக்கு இராவுக்குச் சோறும், படுக்க இடமும் தருகிறேனென்று சொல்ல, அப்படியே அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். பின்பு சூதன் மூடனைப் பார்த்து, நேசனே, இப்புலத்திற்கு வெளியேபோய் நின்று அங்கிருந்து வருகிற பறவைகளையெல்லாம் அப்படியே துரத்திவிடுகிறேன்; நீ இங்கேயே நின்று இரண்டொரு பறவை என்னைவிட்டுத் தப்பிவருவதை மட்டும் ஓட்டிக்கொண்டிரு என்றுசொன்னான். நடுக்கொல்லையிலிருந்த மூடன் ஆ! ஈ! என்று தொண்டை கம்மும்படிக் கூவிக்கொண்டிருக்கையில், சூதன் வேலிக்கு அப்புறம் போய் ஒரு மரத்துநிழலில் சுகமாகத் தூங்கினான். தந்திரக்காரர்களுடைய சங்கதிகளெல்லாம் இப்படி மோசமாயும் வஞ்சகமாகவுமே இருக்கும். எஜமானன் மெச்சும்படி தந்திரமாக நடப்பவர்கள் பிறகு ஒருகாலம் அந்த எஜமானனையும் தந்திரமாகவே விழுங்கிவிடுவார்களென்பதை எஜமானன் உணருவதில்லை. எஜமானனுடைய கடையின் மர்மங்களை எதிர் கடைக்காரனுக்கு அறிவிப்பவர்களும், எஜமானனுக்கு எதிரிடையாகப் போட்டிக் கடை வைப்பவர்களும் முன்பு எஜமானனிடம் அவன் மெச்சும்படி வேலைக்கிருந்த தந்திரக்காரர்களே. தந்திரசாலிகள் நல்லதும் செய்வார்கள்; நடுவீட்டுக்குக் கொள்ளியும் வைப்பார்கள். இரண்டு வேலைகளும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஃ

இரவில் அவ்விருவருக்கும் திருப்தியாகப் போஜனம் பரிமாறப்பட்டது. மறுநாள் ஆடுகளை மேய்த்து வரும்படி அனுப்பப்

பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு வீட்டில் கல்வி கற்பிப்பதனால், அவர்கள் பள்ளிக்கூடத்தில் 2-வருஷம் கற்பதையெல்லாம் 6-மாதத்தில் அவர்களுக்குக் கற்பிக்கக்கூடும் என்பது ஒரு மேதாவியின் அபிப்பிராயம். வீட்டுப்படிப்பு இல்லாத பள்ளிப் படிப்பு பயன்படாது. பெற்றோர் கவனியாத கல்வி உருப்படாது. வீண் சம்பளம் தந்து பயனில்லை. பள்ளிக்கூடம் போயும் பயனில்லை. வீடுதான் பெரிய போதனைகளின் பள்ளிக்கூடம். வீட்டில் செய்கின்ற மனப்பாடமே அணிவேர்.

பிறருக்குக் கடிதங்கள் வரைகையில் அதனைப் பொன்போல் போற்றிப் பத்திரப்படுத்தும்படியான ருசிகரத்தை அதற்குள் புகட்டி பரிமளப்படுத்தப் பார்.

பட்டார்கள். இவர்களுடன் காவலாக ஒரு நாயும் வந்தது. சூதன் சில ஆடுகளை ஓட்டிக்கொண்டு இன்னொரு வழியாய்ச் சென்று ஒரு மரத்து நிழலில் தூங்கினான். மூடன் சாயங்கிரம் வரையில் ஆடுகளை மேய்த்துப் பசியின் களைப்பால் ஒருபக்கம் படுத்துத் தூங்கிவிட, ஆடுகள் பல பக்கங்களுக்கு ஓடிவிட்டன. சூதன் அங்கி எழுந்து ஆடுகளுடன் வருகையில் மூடன் எதிர்பட்டுத் தன் ஆடுகளைக் காணோமென்று வருந்தினான். சூதன் தான் தேடிப் பார்ப்பதாகச் சொல்லி சிறிது தூரம் போய் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு சிரித்தபடி யிருந்தான். ॐ

சிறிதுநேரத்தில் நாய் சிதறிப்போன ஆடுகளையெல்லாம் பத்திரமாய் அவ்விடம் கொண்டுவந்து சேர்த்தது. மூடன் எங்கும் சுற்றிப் பார்த்து ஆடுகள் அகப்படாமல் திரும்பி வந்தபோது, சூதன், இவற்றையெல்லாம் நான்தான் பிடித்துக் கொண்டு வந்தேனென்று நாயின் பெருமையைத் தன்மேல் ஏற்றிக் கொண்டான். நான் கொண்டுவந்தேனென்று சொல்ல நாய்க்கு வாயில்லையே! ॐ

அன்றிரவு இருவரும் புசித்த பிறகு சூதன் எல்லா வேலையிலும் பிச்சையெடுப்பதே சுகமான வேலையென்றும், "அக்ஷய பாத்திரம்" என்று நாமங்கள் போட்டுக்கொண்டு நல்ல பலசாலிகளெல்லாம் பிச்சையெடுத்துப் பெரிய மனிதர்களாயும் நல்ல வரும்படியுள்ளவர்களாகவும், கௌரவமானவர்களாயும் வாழ்கிறார்களென்றும், அவர்களின் உயர்ச்சியான வாழ்வு உழைத்து உண்ணுகிற கட்டைகளுக்குக் கிடையாதென்றும் சொன்னான். மூடனும் அதற்கு சம்மதிக்க, சூதன், நீ தெருப்புறத்திலே போய்ப் பிச்சையெடு, நான் கொல்லைப்புறமாய்ப் போகிறேன்; இந்த வேலைக்கு யஜமானனே கிடையாது; நம்மிஷ்டப்படியே நடந்து போகலாம்; ஒவ்வொரு வீட்டிலும் ஒரே பாட்டையே பாடிக்கொண்டு போகலாம்; வாய்திறந்து கேட்பது தவிர வேறெந்த வருத்தமுமில்லை என்றான். ॐ

மூடனுக்கு நல்ல பிச்சை கிடைக்கவில்லை. அவன் எளிய முகத்துக்கு இரக்கப்பட்டு சிலரே இரண்டொரு காசு கொடுத்தார்கள். கொல்லைப்புறமாய்ப் போன சூதனோ ஒருவருமில்லாத தருணம் பார்த்துக் கோழியோ, வாத்தோ, காயோ, கறியோ அகப்பட்ட வரையில் திருடிவந்து மூடனண்டை காட்டி, நீ இரண்டொரு காசுதானே கொண்டுவந்தாய் என்று திட்டினான். சூதன் தான் கொண்டுவந்ததைத் தானே புசித்து விட்டான். கோழி வாத்து இதை விற்று மதுவாங்கி யுண்டான். மூடனோ தன் காசுக்குப் பக்ஷணங்கள் வாங்கியுண்டான். ॐ

மறுதினம் இருவரும் இடம் மாற்றிக்கொண்டு மூடன் கொல்லைப் பக்கம் போனான். அங்கிருந்தவர்கள் மூடனை போபோ என்று துரத்தி விட்டார்கள். தெருப்பக்கம் போன

பத்திராசிரியர் வீட்டிற்கும் பலர்வந்து பணத்தைக் கொட்டுகிறார்கள். தாசி வீட்டிற்கும் பலர் வந்து பணத்தைக் கொட்டுகிறார்கள். பிறருடைய வருகையையே இவ்விருவரும் எதிர்நோக்கிப் பணமே கண்ணாகிறார்கள். இத்தகைய இருவரும் அதாவது பத்திராசிரியரும் தாசியும் ஒருவரை யொருவர் மயக்குதலென்பதும், மயக்கிப் பணம் பறிப்பதென்பதும் பணத்தின் அருமையை நன்றாகத் தெரிந்த அவர்களிடம் சாத்தியமில்லை. ஏமாற்றவும் இயலா.

சூதன் மெதுவாக ஒரு வீட்டுக்குள் நுழைந்து பணியாரக் கூடையைத் திருடிவந்து மூடனுக்குக் காண்பித்து அவ்வளவையும் தானே தின்றான். மூடன் பசியுடன் தூங்கினான்.

ஃ

அடுத்ததினம் மூடன் தெருப்பக்கம் போக, சூதன் கொல்லைப்பக்கம் போனான். மூடனுக்கு இரண்டு காலணாவே கிடைத்தது. சூதனோ கொல்லைப்பக்கம் போய் வாத்தும் பழங்களும் திருடிவந்து பழங்களைத் தானே தின்றுகொண் டிருக்கையில், தான் வாத்து திருடிய இடத்தில் கூச்சலாய் இருப்பதைக் கேட்டு மூடனைப் பார்த்து, நேசா! இந்த வாத்தை நீ எடுத்துக்கொள், இதை விற்று சாப்பிடு என்று கொடுக்க, மூடனும் ஆசையுடன் வாங்கிக்கொண்டான். உடனே ஆற்றுக்குப்போய் ஸ்நானம் செய்து வருகிறேனென்று ஓடிவிட்டான். வாத்தைத் தேடிவந்தவர்கள் மூடனிடம் வாத்து இருக்கவே அவனை அடித்து அதிகாரிகளிடம் ஒப்புவித்தனர். தந்திர புத்தியுள்ள சூதர்களோடு கூட்டுறவு பாராட்டுகிறவர்களுக்கெல்லாம் இந்த விதியே நேரிடும். அதிகாரிகள் சில தினங்களாக நடந்த திருட்டுகளை யெல்லாம் மூடனே செய்தானென்று அவனைச் சவுக்கடியடித்துத் தண்டிப்பதற்காக ஒரு அறையில் பூட்டிவைத்தார்கள். மூடன் தான் ஒன்றும் செய்யவில்லை யென்றும், சூதனே செய்ததென்றும் சொல்லியும் ஒருவரும் அதை நம்பவில்லை.

ஃ

இரவு வந்தது. பெருந்திருடனான சூதன் தந்திரமாய் மூடன் இருக்கும் அறைப்பக்கம் வந்து அவனுக்காக வருத்தப்படுவதுபோல்பேசி, அதிகாரிக்கு லஞ்சம் கொடுத்தால் விட்டு விடுவாரென்று சொல்லி, அவனிடம் இருந்த சொக்காய், பாதரக்ஷை, எட்டு அணா இவைகளை வாங்கிக் கொண்டு போகப் பார்த்தான். அந்த சமயம் அங்கு மறைந்திருந்த சேவகர்கள் சூதனைப் பிடித்துக் கொண்டார்கள். பிறகு மறுநாள் விசாரணையில் மூடன் தான் சூதனுடன் கூட்டுறவு செய்தது முதல் அதுவரையில் நடந்ததை யெல்லாம் சொன்னான். சூதன் அதை மறுக்க முடியவில்லை. அதிகாரி சூதனைத் தண்டித்துவிட்டு, மூடனை, அவன் மூடனானாலும் உண்மையான கபடமில்லாத மனிதன் என்று கச்சேரியில் ஒரு சேவகனாக நியமித்தார். மூடனும் அதுமுதல் சுகமாக வாழ்ந்திருந்தான். தந்திரசாலியான அறிவாளியைவிட கபடமற்ற சத்தியவந்தனான மூடனே மேலானவன். தாசிகளோடு திரியும் மடாதிபதி, பணப்பேய் பிடித்தலையும் குரு முதலியவர்களைவிட, மூடபக்தியுள்ள பாவத்துக்கு அஞ்சுகிற சாமான்னியர்களைச் சிலாக்கியமானவர்களாகச் சொல்லலாம்.

என்ன இருப்பினும் பழங்கால நண்பர்களது நட்பின் ருசிகரம், புதிதாய்த் தேடிக்கொண்ட புதிய நட்பில் இல்லை. எத்தனை வருடங்களானாலும் பழய நட்பினர் அந்தப் பழய புன்னகையுடன் வரவேற்கின்றனர். புதிய நட்பில் அந்தப் புன்னகையின் ஜோதியில்லை. அவ்வித வரவேற்புமில்லை.

ஒருவனுக்கு ஐந்து பெண்கள் பிறந்தால் அந்தக் குட்டிகளை ஐந்துபேர் எங்கெங்கிருந்தோ வந்து அப்பிக்கொண்டு ஓடி விடுகின்றனர். பிறகு இந்தப் பெண் குட்டிகள் தங்களின் உடன்பிறந்தோரைச் சந்தித்து மகிழ்வது எப்போதோ ஒரு காலத்தில் தான் அபூர்வமாய் நிகழ்கின்றது. இது பரிதாபம்.



பெரியாரின் மொழிகள்



(541-ம் பக்கத் தொடர்ச்சி.)

598. As his hero and heroine pass the matrimonial barrier, the novelist generally drops the curtain ; as if the drama were over them; the doubts and struggles of life ended, as if, once landed in the marriage couutry, all were green and plesant there and wife and husband had nothiug but to link each other's arms together, and wander gently downwards towards old age in happy and perfect fruition.

கதாநாயக, நாயகி மணத்திற்குரிய எல்லையில் வந்ததும், வாழ்க்கையின் சந்தேகமும், சச்சரவுகளும், முடிந்ததுபோலவும், கல்யாண உலகத்தில் அடிவைத்ததும் எல்லாம் பச்சையும் சந்தோஷமாக இருப்பதுபோலவும், மனைவியும் புருஷனும் இருவருமாக கைகளைக் கோர்த்துக்கொண்டு சந்தோஷமாகவும் பூர்ண அனுபவத்தோடும் தள்ளாமையை நோக்கி செல்வதைத் தவிர வேறொன்றும் (கவலை) இல்லாததுபோலவும், நாவல் எழுதுவோர் தங்கள் நாடகம் முடிந்ததுபோலத் திரையை விட்டுவிடுகிறார்கள்.   P. G. குலசேகரன்.

II

599. No news are good news.

ஒரு செய்தியும் வாராதிருப்பதே ஒரு நற்செய்தியாகும்.

600. Drink nothing without seeing it ; sign nothing without reading it.

குடிக்கும் பானத்தைப் பாராமல் குடியாதே ; எதையும் படியாமல் கையெழுத்துச் செய்யாதே.

601. Wounds heal—not ill words.

புண்கள் ஆறிவிடும் ; தீச்சொற்கள் ஆறா.

602. No great task was ever easy.

எந்த மகத்தான காரியமும் சுலபமாக இருந்ததில்லை.

603. Suspicion is the poison of friendship.

சந்தேகமே நட்பைக் கொல்லும் நஞ்சாகும்.

604. All is good that god sends us.

கடவுள் நமக்குத் தருவன யாவும் நல்லதேயாகும்.

605. The stone that lies not in your way need not offend you.

உன் வழியில் கிடக்காத கல்லினிடம் உனக்குக் கோபம் வேண்டாம்.

606. Do good, no matter to whom.

யாருக்காயினும் சரியே——நன்மையைச் செய்.

607. Poor liberty is better than rich slavery.

பணம் பெற்று அடிமையாயிருப் பதைவிட, சுதந்திரத்துடன் ஏழையா யிருப்பது மேலாகும்.

608. A multitude of books distracts the mind.

அளவுமிஞ்சிய புத்தகங்கள் மனதைக் கலைத்துவிடுகின்றன.

609. Every wise man wishes to be younger.

ஒவ்வொரு புத்திமானும் இன்னும் சிறு வயதை யடைய விரும்புகிறான்.

610. No education like Adversity.

கஷ்டத்தைப்போன்ற கல்வி கிடை யாது.

611. A good wife and health are a man's best wealth.

நல்ல மனைவியும் திடமான ஆரோக் கியமுமே ஒரு மனிதனுடைய மிகச் சிறந்த ஆஸ்தி,

612. Repentance is half reform.

(ஒரு தவறைக் குறித்து) வருந்து வதே பாதி திருந்தியது போலா கும்

613. God cures us, but the doct or gets the fee.

கடவுள் நம் நோய் தீர்க்கிறார்; வைத்தியர் நம் பணத்தைப் பெறுகி றார்.

614. To be deaf is often good; it saves you from the influence of wild vumours.

செவிடாயிருப்பது பலதடவைக ளில் நல்லதேயாகிறது; ஏனெனில் ஆதாரமற்ற வம்புச் செய்திகளைக் கேட்பதிலிருந்தும் அது நம்மை விடுவிக்கிறது.

R. இராமகிருஷ்ணன் M. A.

அநியாய நிந்தைகள்.

போடி வீட்டைவிட்டு, போடி போடி என்று மாமி தன் மருகியைப் பார்த்துக் கண்டபடி வைகிறாள். அன்றிரவு மருகிக்குப் பத்து இருபது தடவை வயிற்றுப்போக்கு உண் டாகிவிட, அதைக் கண்டு மாமி, "அவளுக்குப் பாடை கட்டி வைத்திருக்கு, தூக்கிக்கொண்டு போகப்போகிறார் கள்" என்கிறாள். இப்படிப்பட்ட அநியாயச் சொற்களை ஏன் உபயோகிக்க வேண்டுமோ? பாடைச்சவாரி எல்லோ ருக்குமேதான் உண்டு. சிரஞ்சீவியா யிருக்கப்போவது எவருமில்லை. மறுநாள் மருகி சுகமாகிவிட, அவளைத் திட் டிய மாமி கொடிய ஜ்வரம் கண்டு படுக்கை வசமாகிறாள். யார்தான் படுக்கையில் படுக்காதது? யார்தான் பச்சைப் பல்லாக்கு ஏறுதிருக்கப் போகிறவர்கள்? ஏன் இவ்விதம் வீணே ஒருவரையொருவர் தூஷித்துக் கொள்கிறார்களோ!

பிரபஞ்சதரிசனம்



பாஞ்சால தேசத்தில் லாகூர் பட்டணத்துக்குச் சுமார் முப்பத்திரண்டு மைல் தூரத்தில் ரவி விபாசை என்னும் இரண்டு நதிகளுக்கும் மத்தியில், சீக்கியர்களுக்குப் பிரதான பட்டணமாயும், அவர்களுடைய மதத்திற்குப் பிறப்பிடமாயும் அமிர்த்ஸர் அல்லது அமிர்த ஸாரஸ்ஸு என்ற ஒரு பட்டண மிருக்கின்றது. மோக்ஷ ஐசுவரிஸத்தைத் தரும் கேணியென்று அர்த்தமுள்ள அமிர்த ஸாரஸ்ஸு என்கிற தடாகத்தினாலே தான் அப்பட்டணத்துக்கு அப்பெயர் அமைந்தது. அந்தத் தடாகம் சீக்கியர்களுடைய குருக்களுள் ராமதாஸ னென்பவர் சுமார் முந்நூற்றைம்பது வருஷங்கட்கு முன்னே வெட்டிப் பிரதிஷ்டை செய்வித்ததாம். அதனால் அப்பட்டணத்திற்கு ராமதாஸபுரம் என்றும் பெயர் வழங்குவதுண்டு. அதன் பிறகு அது சிறந்த புண்ணிய ஸ்தலமாகி அநேகர் இவ்விடத்திற்கு யாத்திரைசெய்து வருகிறார்கள். ஃ

இருநூற்றைம்பது வருஷங்களுக்குமுன் ஆப்கன் தேசத்துத் தலைவனாயிருந்த ஆமத்ஷா என்பவன் சீக்கு ஜாதியார் மேன்மேலும் விருத்தியடைவதைக் கண்டு அஞ்சிக் கோபத்தினால் அவ்விடத்துக் கோவிலைக் குண்டுவைத்துச் சுட்டுவிட்டு அந்தத் தடாகத்தையும் மிக்க கோரமாய் அசுத்தப்படுத்தினான். அவன் அவ்விடத்தைவிட்டுப் போனபிறகு சீக்கியர்கள் மறுபடியும் அவைகளைச் சீர்ப்படுத்தினார்கள். இப்போது அமிர்தஸாரஸ்ஸு சுமார் 375-அடி சதுரமாய் மிகவும் தெளிவான ஜலம் நிரம்பப் பெற்றிருக்கின்றது. அதில் எப்போதும் நானா தேசத்து ஜனங்களும் வந்து ஸ்நானம் செய்துகொண்டேயிருப்பார்கள். அந்தக் கேணியின் நடுவில் சிறந்த விஷ்ணு கோயில் ஒன்று இருக்கின்றது. அந்தக் கோவிலின் வெளிப்புறமெல்லாம் பொன் வெள்ளி முதலியவைகளாலும், உட்புறமெல்லாம் சிறந்த ரத்நங்களாலும் வெகு விநோதமாய் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. சீக்கியர்களுடைய மதக் கோட்பாடுகளின்படியே அவ்விடத்து வியாபாரங்களெல்லாம் நடந்தேறி வருகின்றன. அமிர்தஸாரஸ்ஸின் கரையில் சிறிய கட்டடமொன்றுண்டு. அதிலேயே உட்கார்ந்திருந்து ராமதாஸனென்பவன் காலக்ஷேபஞ் செய்ததாகச் சொல்லுகிறார்கள்.

ஃ

மூன்று முக்கிய நதிகளை இங்கு குறிப்பிடுகிறோம். முதலாவது கங்கை. இது இமயமலையில் பிந்து ஸரஸ்ஸினின்றும் பெருகிவந்து கடல் நீர் மட்டத்துக்கு ஆயிரம் அடி உயரத்தில் ஹரித்துவாரத்தண்டை பூமியிற் பிரவேசித்து பிரயாகை, காசி, பாடலிபுரம், கல்கத்தா முதலிய பட்

டணங்களின் வழியாய்த் தென் கிழக்கு முகமாகச் சென்று வங்காளக் குடாக்கடலிற் சேருகின்றது. கங்கை பூமியிற் பிரவேசிக்கு மிடமான ஹரித்துவாரம், யமுனை நதியோடு சேருமிடமான அலகாபாத்து அல்லது பிரயாகை, சிறந்த புண்ணிய க்ஷேத்திரமான காசி, இப்படிப்பட்ட இடங்களில் கங்கை இன்னும் விசேஷமாகக் கொண்டாடப்படுகின்றது.

ஃ

இந்துக்கள் கங்கா நதியைக் கொண்டாடுவது போலவே, கிறிஸ்துவ மதாபிமானிகளெல்லாம் துருக்கி தேசத்திலுள்ள யோர்தான் என்னும் நதியைப் புண்ணியநதியாகக் கொண்டாடுகிறார்கள். அந்நதியண்டையிலே தான் கிறிஸ்துவுக்கு ஞானஸ்நாநம் கிடைத்தது. அந்த நதி மானிடருடைய பாவத்தை மட்டுமே போக்கடிப்பதில்லை; எவ்வகைத் துன்பமும் உண்டாக வொட்டாமல் மன்னுயிர்களைக் காப்பாற்றுகிறதென்றும் சிறப்பிக்கப்படுகிறது. ஃ

இவ்விதமே ஆப்பிரிக்கா தேசத்தார் நைல் என்னும் நதியைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். இந்த நதியின் உற்பத்திஸ்தானம் இன்னும் நன்கு தெரியவில்லை. ஒருநாளும் மழை பெய்யாத விசாலமான பூமியில் வருஷாவருஷம் ஒரே அளவாய்க் குறித்த காலம் தவறாது பெருக ஆரம்பித்துப் பலநாள் வரையில் வெள்ளம் பெருகி ஆற்றோரங்களில் மிகவும் செழிப்பான படுகைகளுண்டாக்கி அத்தேசங்களைப் பண்படுத்தி வெகு காலமாய் அத்தேசத்துக் குடிகளைக் காத்துவருவதனால் நைல் நதியைத் தெய்வமென்று கொண்டாடி வருகிறார்கள். உலகம் பலவிதம்.

குதிக்குமுன்னே பார்த்துக் குதி.

விவாகம் என்பது சாமான்னியமல்ல. நீடித்த வாழ்க்கையிது; நிர்வாகமோ பெரிது. மணமகளே மணமகனைத் தேர்ந்துஎடுத்துக்கொள்ளும் விவாகம்அஸ்திவாரபலமற்றது. மத்தியில் பிரிவையும் துக்கத்தையும் தருவது. உள்ளும் புறமும் ஒருமித்துச் சிலகாலமேனும் பழகாவிடில் எப்படி ஒருவருடைய குணத்தை யறிய முடியும்? ஆடவர் மோசம் உலகிற் பெரிது. ஒருவன் காண்பதற்குக் காக்ஷியா யிருக்கலாம்; குணமிருக்காது வித்தையில் தேர்ச்சி பெற்றிருக்கலாம்; வாக்கு நயமிருக்காது. பேச்சு அதிகமிருக்கலாம்; செய்கையிராது. இதுபோல் ஒன்றிருந்தால் ஒன்றில்லாமலிருப்பதுவே பெரும்பாலும் உலகத்தில் காணமுடிகிறது. அபிமானம் வைத்து ஒரு பொருளை நிதானித்தால் அதில் குற்றங்காண முடியாது. உன் எண்ணத்திற்கோ இப்போது கண் தெரியாது. மணமகனைத் தேர்ந்தெடுக்கும் சக்தி உன் தாய் தந்தையர்க்கே உண்டு. பெண்ணே! சற்று நிதானி. வீணாக வெளியழகைக் கண்டு மயங்கி ஏமாறிவிடாதே.

ஜான் ஹவர்டு.

ஒரு பரோபகாரி.

நீடூழிகாலம் நிலைநிற்கத்தக்க பெரும் புகழ் பெற்ற பரோபகாரிகளுள் ஜான்ஹவர்டு என்பவரும் ஒருவர். குழந்தைப் பருவத்திலேயே மாதா மடிய ஒரு தாதியின் கையில் வளர்ந்து, இளமையிலேயே ஜீவகாருண்யமுள்ளவராகி, பின் தந்தையின் ஆஸ்திக்கெல்லாம் எஜமானனாய் விசேஷ தனவானானார். தம்மை வளர்த்த தாதியிடம் அத்யந்த அன்பு உணர்த்தி, அவளுடைய அந்தியக் கிரியைகளை விசேஷ வைபவமாய் நடத்தினார். தமது தந்தைகால முதல் தோட்டக்காரனான கிழவனிடத்து அதிக வாத்ஸல்யம் கொண்டிருந்தார். அக்கிழவன் குடியிருந்த தோட்டத்தின் பக்கம் ஹவர்டு உலாத்திக் கொண்டிருப்பர். ரொட்டி அவ்வழியாய்ச்செல்லும் பொழுதெல்லாம் சில ரொட்டிகள் வாங்கி அவற்றைத் தோட்டத்துக்குள் எறிந்துவிட்டு, உடனே அத் தோட்டத்துக்குள் தானும் சென்று தோட்டக்காரக் கிழவனைப் பார்த்து, அப்பா! அந்த மூலையில் கீரைப் பாத்தியிலே பார், உன் குழந்தைகளுக்கு ஏதாவது தின்பண்டம் அகப்படும் என்று நயமாய்ச் சொல்லுவார். அவருக்கு வாய்த்த மனைவியும் அவரைப்போலவே பூததயை பச்சாதாப முதலிய நற்குணங்களும் ஈசுவரபக்தியும் உடையவளாயிருந்தாள். ஜான் ஹவர்டினுடைய வாழ்நாளில் அவருக்கு மிகவும் சௌக்கியமானகாலம் அவரது மனைவியோடு இருந்தபோதுதான். எந்த இடத்தில் கணவனும் மனைவியும் உயிரும் உடலுமாய்ப் பொருந்துகிறார்களோ அங்கு பிரிவு உண்டென்கிற அநுபவம்போல அந்த அருமை இல்லாளும் கண்மூடினாள். அந்த நிமிஷத்திலேயே அவருக்கு இல்வாழ்க்கையிலுண்டான சுகங்கள் யாவும் ஒழிந்துபோயின.

ஃ

இப்படி அந்தப் புண்ணியபுருஷருக்குப் பத்தினி வியோகம் நேரிடும்படிக் கடவுள் கட்டளையிட்டதை அநியாயமென்று நாம் நினைக்கலாமோ? கடவுளுடைய கட்டளை எப்படிப்பட்டதானாலும், அது உலகத்திற்கெல்லாம் உபகாரமாயிருக்குமேயொழிய வேறுவிதமாயிராது. ஹவர்டுக்கு மனைவியை மட்டும் கடவுள் உயிரோடு வைத்திருப்பாரானால், அவர் தன் வீட்டிலேயே மனையாளோடுகூடச் சுகமே அமைதியாய்க் காலங்கழித்திருப்பார். அவருக்கிருந்த ஜீவகாருண்யமெல்லாம் உலகத்திற்கு உபயோகப்படாமலே ஒழிந்துபோயிருக்கும். மனையாட்டி இறந்த துக்கத்தால் அவர் தேசயாத்திரை செய்யப் புறப்பட்டார். திரும்பி இங்கிலாந்துக்கு வருகையில், குற்றம் செய்தும் கடன்பட்டும் சிறையில் அகப்பட்டுக்கொண்டு பரிதவிப்பவர்களைப்

என் அந்த டப்பியை அந்த நண்பனிடமிருந்து மயக்கிக் கைப்பற்ற நினைக்கிறாய்? இன்னொரு நண்பனிடம் தான் அதை ஏமாற்றிக்கொண்டு வந்த சமர்த்தை வெளியிட்டுப் பெருமைபேசிக் கொள்வதற்கா? அல்லது அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போகிற தந்திரமா? தந்திரவாழ்வு ஒரு நிலையா?

பார்த்து, சிறையதிகாரிகள் அநியாய மாய்க் கொடுமை செய்து அவர்களை மிகவும் துன்பப்படுத்துகிறார்களென்று கண்டு, அப்படிப்பட்டவர்களை எப்படியாவது விடுவிக்க வேண்டுமென்று ஊக்கம் கொண்டார். அதுமுதல் தன் வாழ்நாள் முழுதும் நல்வழியிலேயே கழிக்கும்படியான சிறந்த ஏற்பாடு ஒன்று அப்பொழுதுதான் அவருடைய மனதில் உதித்தது. அவசியமாய்த் தோன்றி, ஏதாவது ஒரு காரியத்தை அவர் செய்யவேண்டுமென்று தீர்மானங் கொள்வாரானால், பின்பு எப்படிப்பட்ட இடையூறு உண்டானாலும் அந்த எண்ணம் மாற்றப்படுவதில்லை. தமது மனைவிக்குப் பிறகு அவர் துறவிபோலக் காலங்கழித்ததே அவரது மனோவுறுதியை விளக்கும்.

ஃ

எவ்விதத்திலாயினும் எளிய ஜனங்களுடைய வருத்தங்களைத் தீர்க்கவேண்டுமென்று சங்கற்பஞ் செய்துகொண்டு ஹவர்டு ஐரோப்பாவிலுள்ள நாநா தேசங்களுக்கும் யாத்திரைசெய்யப் புறப்பட்டார். அந்தக்கோரிக்கையே கடவுளுடைய திருவுள்ளத்திற்கும்உவப்பாயிருந்தது.லோகோபகாரமான அந்தச் சங்கற்பத்தை நிறைவேற்றும்பொருட்டு அவர் சுற்றின நாடுகளுக்குக் கணக்கில்லை. அக்காலத்தில் அவர் உழைத்த உழைப்பையும், அவர்க்கு நேர்ந்த அபாயம், நஷ்டம் முதலியவைகளையும் இவ்வுலகில் எக்காலத்திலும் எவரும் அனுபவித்திருக்க மாட்டார்கள்.

ஃ

ஐரோப்பாக் கண்டம் முழுமையுமுள்ள சிறைச்சாலைகளையும், வைத்தியசாலைகளையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு பதினேழு வருஷகாலம் யாத்திரை செய்தார். மேலும் அங்கங்கே தான் கண்ட அதிசயங்களை அவ்வப்போதே புத்தகமாக எழுதிப் பிரசித்தம் செய்து, அதுவரையில் அந்தச் சங்கதி யறியாத பல கனவான்களுக்குத் தெரியப்படுத்தினார். அவர் கண்டபோது அவ்வவ்விடத்துச் சிறைச்சாலைகளில் ஜனங்கள் அனுபவித்துக்கொண்டிருந்த துன்பங்களை இப்படிப்பட்டதென்று எடுத்துச் சொல்ல முடியாது. ஃ

நெடுநாளாய்க் குற்றவாளிகளாகப் பிடிக்கப்பட்டவர்களும், பாபச் செயல் செய்தவர்களாகப் பிடிக்கப்பட்டவர்களுமாகப் பல பேர்களைப் பகற்பொழுதெல்லாம் மிகவும் ஒடுக்கமான ஒரு சிற்றறையில் அடைத்து வைத்து, இரவில் மிகவும் குளிர்ச்சியான ஓரிடத்தில் மேலே எவ்விதமான மறைவுமில்லாமல் கீழே பரப்பிக்கொள்ள வைக்கோலுமில்லாமல் கிடக்கச் செய்வார்கள். சிறையான பெண்களை நடத்துவதும் இவ்விதமே. இரவில் படுக்குமிடங்களில் இரண்டு மூன்று அங்குலம் தண்ணீர்கூடத் தேங்கினாலும் தேங்கும். அவர்களுக்கு அளிக்கின்ற சோறோ வாயில் வைக்க வழங்காததாய், அதுவே கால் வயிற்றுக்குக்கூடப் போதும் போதாததாய் இருக்கும். அவ்விடங்களுக்கு விளக்கேற்றுவதே யில்லை. பூமிக்குள் பத்து பதினைந்து அடிகளுக்குக் கீழ் வெட்டப்படுகிற இருட்டறைகளென்னும் சிற்றறைகளுக்கும் அந்தச் சிறைச்சாலைகளுக்கும் சிறிதும் வேற்றுமை கிடையாது- அந்தச் சிறை

அரிப்பும் நமைச்சலும் தீர்த்துக்கொள்ள உலகில் மனிதர்கள் பல வகையிலும் முயன்று சாந்தி பெறுகின்றனர். கொடுத்துவைத்த புண்ணியர்கள் அந்த அரிப்பையும் நமைச்சலையும் தீர்க்கும் வஸ்துக்களை எப்போதும் தயாராய் வைத்துக்கொள்கின்றனர். இதில் முதலில் உதவுவது கைகளாகும்.

களில் அடைப்பட்டவர்கள் அநேக மாய் நோயாளிகளாகித் தீராவருத்த முற்றவர்களே யொழியப் பின்பு சுகப் பட்டவரில்லை. ஃ

ஹவர்டினுடைய உதாரகுணத் தால் பலவிடங்களிலும் பலவிதமான க்ஷேமங்களுண்டாயின. சிறையில் அடைபட்டுத் தவிப்பவர்களுடைய உயிர்கள் அநேகமாய்க் காப்பாற்றப் பட்டன; வருத்தங்களெல்லாம் தீர்க் கப்பட்டன. நோயில் அடிபட்டுத் தவிப்பவர்களுடைய வியாதிகளெல் லாம் வெகுவாய் விலக்கப்பட்டன. இப்படி உலகத்திற்குப் பலவிதமான நன்மைகளை விளைவிப்பதற்காகவே ஹவர்டு தமக்கு இல்வாழ்க்கையில் கிடைக்கத்தக்க இன்பங்கள் யாவற்றி லும் வெறுப்புற்றுச் சீமை சுற்றுவ தில் விருப்பங்கொண்டார். "நாம் கடவுளினிடத்தினின்றும் நன்மை களைமட்டும் எதிர்பார்க்கலாம்; தீமை கள் வந்தால்மட்டும் மனமழிகிறதா?" என்பது ஹவர்டின் வாக்கியமாகும். நம் காலத்திலேயே இயன்றவரை நாம் பரோபகாரிகளாவதே முக்கியம். அதுவே கடவுளுக்குப் பிரீதி.

சமைப்பதிலும் ஒரு அவசிய சிக்கனம்.

மனைவி பாய்வசமானபோது ஒரு ஆடவன் சமையல் செய்ததில் ரஸம் வைப்பதற்காக எடுத்து வைத்த மிளகு சீரகம் வெள்ளைப்பூண்டு முதலியவற்றை அப்போது அங்கு வந்த ஒரு பெண்மணி பார்த்து, ஆ! ஒருவேளை ரசத்திற்கு இவ்வளவா வைக்கிறது? இப்படிச் செய்தால் குடித்தனத் திற்குக் கட்டுமா? நான் இதை மூன்றுநாள் ரசம்வைக்க வைத்துக்கொள்வேனே என்றாள் சமையல் செய்வதிலும் வஸ்துக்களைச் சிக்கனமாய் உபயோகிக்க வேண்டிய படிப் பினையும் அத்துடன் இருக்கிறது. அதைத் தாய்மார்கள் தங் கள் குமாரத்திகட்குக் கற்பித்து வைப்பதையும் தங்கள் கடமையாக எண்ணி அவ்விதமே செய்வதால் பெண்களின் கை எங்கும் ஒரு கணக்காகவே இருக்கிறது. ஆடவர்கட்கு இந்தப் படிப்பினை இன்மையால் கண்டபடி அதிகமாய்ப் பதார்த்தங்களை உபயோகிப்பதுடன், ரஸம், குழம்பு இவை களையும் கெடுத்து, அரைப்படி யரிசிக்கு ஒருபடி அரிசி போட்டு, பானையின் அடியில் சாதம் பிடித்துக்கொள்ளும் படி செய்து, அலங்கோலமாக்கிவிட்டு, தங்களுக்கு மகா சமைக்கத் தெரிந்தது போலவும், 'ஓ! நான் சமையல் செய்ய வில்லையா' என்றும் கௌரவமாய் சொல்லிக்கொள்கிறார்கள்! இந்த சமையலைச் சிறுமிகள் பார்த்தாலும் சிரிக்கிறார்கள்!

குழந்தைகள் பக்கம்

மெழுக்குவர்த்தியும் கொழுப்புவர்த்தியும்.

1. முன் ஒரு காலத்தில் ஒரு பெரிய பட்டணத்தில் மெழுக்கு வர்த்தியொன்றிருந்தது. அதற்குத் தன் நிலைமை இவ்வளவென்று நன்றாய்த் தெரியும். "நான் பிறப்பிலேயே மெழுகு; பின்பு என்னை அச்சிலே வர்த்தியாக வார்த்தார்கள். என்னுடைய பிரகாசமோ மிகவும் அதிகம். மற்றவர்களைவிட நான் நெடுநேரம் நீடித்து எரிவேன். எனக்கு இருப்பிடமோ சிறந்த வெள்ளிப் பீடங்கள், கண்ணாடி விளக்குகள், லஸ்டர் முதலியவையாம்" என்று இப்படி ஒரு நாள் அந்த மெழுக்குவர்த்தி சொல்லிக்கொண்டிருந்தது.

2. அதுகேட்டு அதன் அருகில் இருந்த கொழுப்புவர்த்தி ஒன்று உன் நிலை மிகவும் ஏற்றமான நிலைதான்; வெகு அழகாயிருக்கிறது. நான் வெறுங் கொழுப்பேயொழிய வேறல்ல; கொழுப்பில் என்னைத் தோய்த்து வைத்திருக்கிறார்கள். ஆயினும், அப்போதைக்கப்போது எண்ணெய்விட்டு ஏற்றுகிற விளக்கைவிட, நம்முடைய நிலை சிறந்ததல்லவா வென்று நினைத்து அவ்வளவோடு நான் அகமகிழ்ந்து கொண்டிருக்கிறேன். எட்டுதரம் கொழுப்பிலே தோய்த்து என்னை உருவேற்படுத்தி யிருக்கின்றார்கள்.

> "தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
> அம்மா பெரிதென் றகமகிழ்க"

என்பது பெரியோர்களுடைய கொள்கையல்லவா? ஆனால், பிறப்பிலேயே மெழுக்காயிருப்பது மிகவும் உயர்ந்த நிலைதான். உலகத்தில் ஒரே பதவி யாவர்க்கும் கிடைக்குமா? உலகத்தில் எல்லோரும் ராஜாவாகவேண்டுமென்றால் எப்படியாகிறது? நீ சிறந்த மண்டபங்களுக்கும் சபைகளுக்கும் போவாயானால், நானோ இங்கே சமையற்கட்டில் கிடப்பேன். சமையற்கட்டும் அவ்வளவு தாழ்வான இட

ஒருவர் தமது வீட்டிலேயே தாது புஷ்டி லேகியம் செய்யும்படி ஒரு வெளியூராரை வேண்டினார். அதன் உள்நோக்கம் கவனித்தபோது, அவ்விதம் செய்கையில் தானும் இலவசத்திலேயே லேகியத்தை எடுத்துக் கொள்ளலாமென்று அவர் எண்ணினாரென்று தெரிந்தது. தங்களின் எண்ணத்தை வெளியிடாமலே ஒருசங்கதியைச் செய்யும்படிஏவுவோர் வெகு கபடப் பூனைகளாவர்.

மன்று. மலையிலே விளைந்தாலும் ஊரிலேயே மசியவேண்டும் என்கிறபடி, யாவரும் உயிர்வாழ்வதற்கு முக்கியாதாரமான உணவு பெறவேண்டிய இடம் இந்த சமையற்கட்டுதானே என்றது.

3 அதுகேட்டு மெழுக்குவர்த்தி, நீ சொல்வது சரிதான். ஆனல் உணவைப்பார்க்கிலும் சிறந்தது வேறென்று உண்டு. அதென்னவென்கிருயோ? விநோதமாய் நேயர்களோடு கூடிக் கலந்து பேசுதலே. அப்படிப்பட்ட இடங்களிலே போய்ப் பிரகாசிப்பது எவ்வளவு மேன்மையானது! இன்று ராத்திரி இங்கே பாட்டுக்கச்சேரி நடக்கப்போகிறது; அதற்காக என்னையும் என் இனத்தாரையும் விசேஷமாய் வரவழைப்பார்கள் என்றது.

4. பிறகு அந்த வீட்டு எஜமானி கொழுப்புவர்த்தியைத் தன் வேலைக்காரிக்கு இனமாகக் கொடுத்துவிட்டாள். அந்த வேலைக்காரி அதை எடுத்துப் போகும்போது, வழியில் அந்த வத்தி சிந்தித்ததாவது:—ஐயோ! துரதிஷ்டமே! இப்போது நான் எளிய வேலைக்காரி வீட்டுக்கல்லவா போகிறேன்! அங்கே நான் உட்கார ஒரு பித்தளைப் பீடங்கூட கிடைக்குமோ கிடைக்காதோ? மெழுகுவர்த்தியோ பொன் வெள்ளிகளாற் செய்த பீடங்களில் உட்கார்ந்து கொண்டு உயர்ந்தோர்களுடைய கூட்டத்தையெல்லாம் பார்க்குமே; அப்படிப்பட்ட கூட்டத்தின் நடுவே பிரகாசிப்பதென்ருல் எவ்வளவு பெருமையாயிருக்கும்! மெழுகாய்ப் பிறக்காமல் கொழுப்பாய்ப் பிறக்கும்படி நேர்ந்த என் தலைவிதியை அல்லவோ நான் இப்போது வெறுத்துக் கொள்ளவேண்டும் என்று இப்படி எண்ணமிட்டுக் கொண்டே போயிற்று.

5. அந்த வர்த்தி வேலைக்காரியின் வீடுபோய்ச் சேர்ந்தது. வேலைக்காரி அன்றிரவு ஒரு பழய துணியை எடுத்து நெருப்பிட்டு ஊதி அதைக்கொண்டு அந்த வத்தியைக் கொளுத்திவிட்டாள்.

6. சீ! சீ! இதென்ன துர்க்கந்தம்! ஐயோ இப்படிப்பட்ட நாற்றச் சீலையாலேயே எனக்கு ஒளி கொளுத்தவேண்டும்! நான் முன்பு இருந்த சீமானுடைய வீட்டில் இப்படியா இருக்கும்? சிறந்த நூல் வர்த்திகள் வாங்கித் தேங்காயெண்ணெயில் நனைத்து அதனலல்லவா மெழுக்கு வர்த்திகளுக்கு விளக்கேற்றுவார்கள்?

எந்த வேலைக்கும் நீயே போனல் அன்றே அந்த வேலை முடிந்துவிடும், மற்றவரை யனுப்பினல் தாமதத்தில் விழுந்து விடுவதுடன் நீ அதற்கென்று கொடுத்தனுப்பிய பணமும் செலவிடப்பட்டுப் போயிருக்கும். பிறகு பணமும் வராது. அவர்களுக்கும் உனக்கும் மனஸ்தாபமும் நேரலாம்.

என்று சொல்லி, தனக்கு ஒரு நாற்றச்சிலையால் ஒளி கொளுத்தக் கண்டு கொழுப்புவர்த்தி மிகவும் விசனப்பட்டது.

7. அந்த சீமானுடைய வீட்டிலும் மெழுக்குவத்திகளைக் கொளுத்திவிட்டார்கள். அங்கிருந்த மெழுகுவர்த்தி தன் கூட்டத்தாருடன் சேர்ந்துகொண்டு ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்தது. தன் பெருமை கொழுப்புவர்த்திக்கு வருமாவென்றும் சொல்லிக் கொண்டது. பல பிரபுக்கள் தகுந்த ஆடையாபரணங்கள் அணிந்து கொண்டு அவ்விடம் வந்து நிறைந்தார்கள். உடனே பாட்டுக் கச்சேரி ஆரம்பமாயிற்று.

8. அந்த சமயத்தில் எளிய வேலைக்காரி கொழுப்புவர்த்தியுடன் அங்குவந்து ஒரு சாமானை எடுக்கப்போனாள்! அப்பொழுது கொழுப்புவர்த்தியைப் பார்த்து மெழுகுவர்ததி என் மேன்மையான நிலையைப் பார்த்தாயா என்று கர்வத்துடன் கூறிற்று. அதற்குக் கொழுப்புவர்த்தி என் தலைவிதி இந்த வேலைக்காரியிடமிருந்து வாழும்படி அந்தப் பாழுந் தெய்வம் செய்துவிட்டது என்று அழுதுகொண்டே சொல்லிற்று. பிறகு வேலைக்காரி கொழுப்புவர்த்தியை எடுத்துக்கொண்டு தன் வீட்டிற்குப் போய்விட்டாள்.

9. இரவுமுழுதும் மெழுகுவர்த்தி எரிந்து கரைந்து மறைந்து போனதாகக் கொழுப்புவர்த்திக்குச் சங்கதி எட்டிற்று. அதைக் கேட்ட கொழுப்புவர்த்தி இந்த அல்ப வாழ்வுக்குத்தானா மெழுகுவர்த்தி அவ்வளவு பெருமைப்பட்டுக்கொண்டது! இப்போது அது இருந்த இடமே தெரியவில்லையே! இதுவும் ஒரு வாழ்வா? இந்தச் சின்ன வாழ்விலே நான் உயர்த்தி, நீ தாழ்த்தி, நான் பாப்பாத்தி, நீ பறச்சி என்கிற பேச்சுகளும் வேறேயா? நானுங்கூட என் உருவமெல்லாம் கரைந்து சொற்பநேரத்தில் முழுதும் எரிந்துபோக இருக்கிறேனே. இந்த வாழ்வுக்குத்தானா நான் அவ்வளவு துக்கப்பட்டேன்? ஏழையோ, பணக்காரனோ, மெழுகுவர்த்தியோ, கொழுப்புவர்த்தியோ எல்லோருமே கடைசியில் எரிந்து சாம்பலாகி மறையவேண்டியதுதானே! எல்லா மனிதரும் இப்பூமியில் ஒரு நாலடிக்குழியில் படுக்கப்போகிறவரே என்று சொல்லி முழுதும் எரிந்து அணைந்துபோய்விட்டது. பிறகு கொழுப்புவர்த்தியின் எரிந்த தாள்களையும், மெழுகுவர்த்தியின் எரிந்த தாள்களையும் ஒரே குப்பைத்தொட்டியில் கொட்டினார்கள். குழந்தைகளே! வாழ்வின் நிலையாமையைப்பற்றி இப்போது தெரிந்துகொண்டீர்களா?

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

அநுபவ மணிகள்

(480-ம் பக்கத் தொடர்ச்சி.)

37. ரயில்வே ஸ்டேஷனை அடைந்ததும் நமது ஊர் வந்துவிட்டதென்கிற சந்தோஷம். ரயிலைவிட்டு இறங்கியதும் நம்முடைய மனிதர்கள் வந்திருக்கிறார்களா வென்கிற பார்வை. அவர்களைக் கண்டபிறகோ சொல்லுதற்கியலாத ஆநந்தம்.

38. நம்மை யறியாது நடந்துவிடும் எந்தக் காரியத்திலும் பிறகு ஏதேனும் குற்றமோ குறைவோ ஏற்படின் அந்த உணர்ச்சி ஒரு தினுசாகிவிடுகிறது. நாம் அறிந்து தெரிந்து வேண்டுமென்று ஒரு காரியத்தைச் செய்துவிட்டு அதனால் உண்டாகும் துன்பத்தை அனுபவிப்பது சொல்லவியலாத சங்கடமாய் விடுகிறது.

39. ஆதியில் அளப்பரிய கஷ்டங்களை அனுபவித்தவர்கள் அந்தியத்திலேனும் சுகம் கிடைக்குமாவென்று எதிர்பார்க்கையில் அவர்களின் ஆயுளேனும் முடிந்துவிடுகிறது; அல்லது பெருத்த வியாதியேனும் வந்து படுக்கவைத்து விடுகிறது.

40. தன் பெண்ணைக் கொடுத்த இடத்திலோ மருமகனால்துக்கம். தன் குமாரனுக்குப் பெண்ணைக் கொண்ட பிறகோ சம்மந்தியினால் போராட்டம்.

41. அருமையாகப் பாடுகிற குழந்தைகளுக்கும் பெண்மணிகளுக்கும் எவ்விடத்திலும் அதிக பூஜ்யதை உண்டு.

42. ஒருமனமற்ற காதலரும், ஒருமனமற்ற சிநேகிதர்களும், ஒருமனமற்ற பெற்றோரும் என்றுமே உருப்படுவதில்லை. மனம் பிரிந்திருப்பதுபோல் யாவும் பிரிந்தவிடுகிறது. பசையற்ற தன்மையின் விசை இது.

43. தாய்வீடு செல்வதற்குமுன்னர் கணவனைவிட்டுப் பிரிவதற்கு வருந்திய பெண் தாய்வீடு சென்றதும் தினம் ஒரு கடிதமாக ஒரு வாரமும், வாரம் ஒரு கடிதமாக ஒரு மாதமும், மாதம் ஒரு கடிதமாக சில மாதங்களும், பிறகு கணவன் ரிப்ளை கார்டுபோட்டால்தான் பதில் தருவது என்ற நிலைமைக்கும் வந்துவிட்டாள். ஏன் அப்படி? ஆழ்ந்த அன்பின்மையே. (தொடரும்.)

வை. மு. கோதைநாயகி அம்மாள்.

நீதி மொழிகள்.

1. மனிதன், தன் வாயின் பலனால் நன்மையைப் புசிப்பான்; துரோகிகளின் ஆத்துமா கொடுமையைப் புசிக்கும்.

2. தன் வாயைக்காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்.

3. சோம்பேரியினுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்.

4. நீதிமான் பொய்ப் பேச்சை வெறுக்கிறான்; துன்மார்க்கனோ வெட்கமும் இலச்சையும் உண்டாக்குகிறான்.

5. நீதி உத்தம மார்க்கத்தானைத் தற்காக்கும்; துன்மார்க்கமோ பாவியைக் கவிழ்த்துப் போடும்.

6. ஒன்றுமில்லாதிருக்கத் தன்னைச் செல்வனாகப் பாராட்டுகிறவனும் உண்டு; மிகுந்த செல்வமிருக்கத் தன்னைத் தரித்திரனாகப் பாராட்டுகிறவனும் உண்டு.

சா. கா. அப்துல் ரெஜாக்.



இலியாஸின் கதை.

(479-ம் பக்கத் தொடர்ச்சி.)

மகம்மதுஷா இலியாஸுக்கும் அவன் மனைவிக்கும் பானங்களளித்தான். விருந்தாளிகளில் ஒருவன் அவனை நோக்கி, "நல்லது, கிழவனாரே, உமக்கு எங்களைப் பார்க்குங்கால உம்முடைய முற்கால செல்வத்தையும் தற்போதுள்ள வறுமையையும் குறித்து வருத்த முண்டாகிறதல்லவா?" என்றான். மற்றும் அவன், "அப்போது நீ இன்பத்துடனிருந்தாய், இப்போது வருத்தமும் கஷ்டமும் அனுபவிக்கிறாய், அல்லவா?" என்றான். இலியாஸ் அவர்களை நோக்கிச் சிரித்துக்கொண்டே, "நான் உங்களுக்கு என்னுடைய துக்கத்தையும், சந்தோஷத்தையும் பற்றிக் கூறின் நீங்கள் நம்பமாட்டீர்கள். இதோவிருக்கும் என் மனைவியைக் கேளுங்கள். அவள் ஓர் பெண் ஆதலால் அவளுக்கு மனதிலிருப்பதை வாயில் காக்கமுடியாது. உண்மையைச் சொல்லுவாள்" என்றான்.

விருந்தாளிகள் அதேபோல் அவளை அதே கேள்வியைக் கேட்டார்கள். அவள் அடியில் கண்டபடி பதில் புகன்றாள். "நாங்கள் ஐம்பது வருடகாலம் இன்பத்தையும் சந்தோஷத்தையும் அடையப் பார்த்தும் கிடைக்கவில்லை. ஆனால் நாங்கள் செல்வம் ஒன்றுமில்லாது எங்களுடைய சொந்த உழைப்பினால் ஜீவிப்பதால் இப்போதுதான் உண்மையான இன்பத்தை அடைந்தோம். எங்களுக்கு இனி வேறு யாதும் தேவையில்லை."

இதைக்கேட்ட விருந்தாளிகளும் மகம்மதுஷாவும் மிக்க ஆச்சரியமடைந்தார்கள். மகம்மதுஷா தன் ஆனந்தத்தில் அந்த கிழவியைப் பார்க்க விரும்பி இடையிலிருந்த படுதாவை நீக்கிவிட்டான். அங்குமிருந்த இன்பத்துடனும் களங்கமற்ற முகத்துடனும் தன் கணவனைப் பார்த்து சிரித்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கும் ஷாம்சிமாகியைக் கண்டார்கள். அவள் உடனே, "நான் விளையாட்டிற்காகச் சொல்லவில்லை. உண்மையாகவே சொல்கிறேன். அரைநூற்றாண்டுகளாகச் சந்தோஷத்தைத் தேடினோம். நாங்கள் செல்வந்தராயிருக்கும்வரை அதைக் கண்டு பிடிக்க இயலவில்லை. இப்போது நாங்கள் யாவற்றையு மிழந்துவிட்டு உழைத்துச் சாப்பிடுவதினால் எதற்கும் சமனும் நிகருமற்ற ஆனந்தத்தை

சிலர் எந்நாளும் பொய்யே பேசி விட்டு மெய்பேசும் பரம யோக்கியர்களைப்போல் நடிக்கிறார்கள். ஆயினும் சந்தர்ப்பங்கள் நேரும்பொழுதெல்லாம் அவர்களின் தொடர்ச்சியான அயோக்கியதையைக் காட்டாமலில்லை.

அனுபவிக்கிறோம்'' என்றான். "ஆனால் உங்களுடைய தற்போதைய சந்தோஷநிலைமையை எதனால் அடைகின்றீர்கள்?'' என்று கேட்டான் ஓர் விருந்தினன். அதற்கு அவள் பின்வருமாறு புகன்றாள்:

அப்போது—நாங்கள் பணக்காரராக இருந்தபோது—எங்களுக்கு ஒரு கணமேனும் அமைதியே கிடையாது. சேர்ந்து சம்பாஷிப்பதற்கும், ஆன்மாவைப்பற்றி நினைப்பதற்கு கடவுளைத் துதிப்பதற்கும், எதற்கும் நேரமே கிடையாது; அவ்வளவு வேலைகளும் விசாரங்களும் மிகுந்து கிடந்தன. முதலாவது இடைவிடாது விருந்தாளிகள் வந்துகொண்டேயிருந்தார்கள். பிறகு அவர்கள் நம்மைத் தூற்றாமலிருக்க வேண்டுமே என்னும் கவலையினால் அவர்களை மிகவும் அன்புடன் வரவேற்று அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் மிக்க ஜாக்கிரதையுடன் கவனித்துச் செய்யவேண்டியிருந்தது. அவர்களில்லாத நேரங்களிலும் கணக்கற்ற வேலைக்காரர்களிருந்தமையால் அவர்களைக் கவனிக்கவேண்டியிருந்தது. வேலைக்காரர்களோ வேலைகளைக் குறைவாகச் செய்வதிலும், ஊணும் உறக்கமும் அதிகமாகக் கொள்வதிலுமே கண்ணாயிருந்தனர். நாங்களோ அளவிற்கு மேல் அதிக வேலை வாங்க முயன்றோம். அதனால் நாங்கள் பாபம் செய்தவர்களானோம். பிறகு, கோழி ஆடுகளை ஓநாய் கொண்டுபோய்விடுமோ, குதிரைகளைக் கொள்ளைக் கூட்டத்தார் திருடிப் போய்விடுவார்களோ என்றும் கவலை. இரவிலோ ஆடுகள் திருட்டுப் போய்விடுமோ அல்லது பெரிய ஆடுகள் சிறிய குட்டிகளை நெருக்கிக் கொன்றுவிடுமோ என்ற பயத்தினால் அவைகளைச் சுற்றிப் பார்ப்போம். இவ்வாறு ஒன்றின்பின் ஒன்றாக வந்த கவலைகட்கே நாங்களிருப்பிடமானோம். அன்றியும் எனக்கும் என் புருடனுக்கும் ஒற்றுமையின்றி அடிக்கடி சண்டை வந்துவிடும். அவர், "இதை இப்படிச் செய்யவேண்டும்'' என்பார். நான் "அல்ல; அப்படித்தான் செய்யவேண்டும்'' என்பேன். இஃதேபோல் சதா கவலையிலும், பாபத்திலும், சச்சரவிலுமே வாழ்ந்து வந்தோம் நாங்கள். ஆனால்—

இப்போது—நாங்கள் வறுமை நிலைமையிலிருக்கும்போது—நாங்கள் காலையில் எழுந்திருந்து அன்புடனும் அமைதியுடனும் சம்பாஷிக்கிறோம். கவலைப்படுவதற்கோ அல்லது சச்சரவு செய்வதற்கோ ஒரு பொருளுமில்லை, காரணமுமில்லை. எங்கள் எஜமானருக்கு உண்மையாகவும் ஒழுங்காகவும் உழைக்க வேண்டியதொன்றே எங்கள் சிந்தனையும் வேலையும். எங்கள் சக்தியால் இயன்றவரையில் சிறிதும் வஞ்சகமின்றி எஜமானனின் லாபத்தைக் கோரி உழைக்கிறோம். எங்களால் எஜமானனுக்கு லாபமேயன்றி நஷ்டம் வராதபடி பார்த்துக் கொள்கிறோம். உழைத்துக் களைத்துவரும்போது ஆகாராதிகளும் தயாராக இருக்கின்றன. குளிர்காலத்திற்கு வேண்டிய உடைகளுமிருக்கின்றன.

எங்களுக்கு அன்புடனும் அமைதியுடனும் சம்பாஷிப்பதற்கும், ஆன்மாவைப்பற்

நண்பர்களிடம் சில சாமான்களைக் கொண்டுவந்து காண்பித்துச் சிலர் விற்க முயல்கிறார்கள். அவர்களைவிட அந்த நண்பர்கள் அதிக வறுமையில் இருப்பதால் அதை வெளியில் காண்பிக்காமல் கௌரவமாய் வேண்டாமென மறுத்து விடுகிறார்கள்.

றிச் சிந்திப்பதற்கும், நிர்மல மான மனதுடன் கடவுளைத் துதி செய்வதற்கும் வேண்டியவரை அவகாசம் இருக்கிறது. சென்ற ஐம்பது வருடங்களாய் அடைவதற்காக வீணே கஷ்டப்பட்ட ஆனந்தத்தை நாங்கள் இப்பொழுதுதான் அடைந்தோம்.''

இதைக்கேட்டு விருந்தினர்கள் நகைத்தார்கள். ஆனால் இலியாஸ் அவர்களை நோக்கி, ''சகோதரர்களே! சிரிக்காதீர்கள். இது வேடிக்கையல்ல; இதுவே உலகவாழ்க்கையின் உண்மை. நாங்களும் முதலில் மடமையினால் செல்வங்களெல்லாமழிந்தவுடன் மிகவும் அழுதோம். ஆனால், கடவுள் எங்களுக்கு உண்மையை அறிவித்துவிட்டார். நான் இதை உங்களுக்கு—திருப்திக்காகவல்ல—உங்களுடைய சௌக்கியத்திற்காகச் சொல்கிறேன்'' என்றான்.

அதைக்கேட்டு அங்கிருந்த கல்வியில் சிறந்த முல்லா, ''ஆம், அவன் சொல்வதே உண்மை. இவைகள் மிக்க ஆழ்ந்த அநுபவ அறிவின் அரிய வார்த்தைகள். ஏனெனில், சகல வேதங்களிலும் இவ்வாறே சொல்லப்பட்டிருக்கிறது'' என்றார். உடனே யாவரும் சிரிப்பதைவிடுத்துச் சிந்திக்கலானார்கள்.

> பெண்கள் பத்துமாதம் வயிற்றில் தாங்கி ஒரு குழந்தையைப் பெறுகிறார்களென்றால், நூலாசிரியர்கள் தங்கள் நெஞ்சில் எழுந்த ஒரு யோசனைக் கருவை அதைவிட அதிக மாதங்களோ வருஷங்களோ உள்ளே வைத்திருந்து உருவாக்கி ஒரு நூலாக எழுதி முடிக்கிறார்கள். 'காபிரைட்' உரிமையுள்ள நூல்கள், ஆண் குழந்தைக்கும், அவ்வுரிமையைப் பிறருக்கு விற்றுவிட்ட நூல்கள் பெண் குழந்தைக்கும் ஒப்பாகும்.

பிரஜாநுகூலன்

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு பத்திராசிரியர்.

இது நாவல்கள் நிறைந்த அநுபவக் களஞ்சியமான சிறந்த மாதப் பத்திரிகை. **1904**-ம் வருஷ முதல் **27**-வருஷங்களாக நடைபெற்று வருகின்றது. வெகு ருசிகரமான அநுபவங்களுடன் அதி சிலாக்கியமாயிருக்கும். பக்கங்கள் **32**.—''அமிர்த குணபோதினி'' நேயர்கள் அதன் ஆசிரியர் நடத்தும் பழமையான இப்பத்திரிகையையும் ஆதரிப்பது அவசியம். வருஷ சந்தா ரூபாய் **1**. மாதிரி விலை ஒரு அணா. ☞ ''பிரஜாநுகூலன்'' ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

எல்லோருக்கும் அடிக்கடி சலாம் கும்பிடு போட்டு நல்ல மனிதன்போல் காட்டுகிறவன் பஞ்சதந்திரம் பாஸ்செய்த பக்கா ஆசாமியாக இருக்கலாம்.



இன்று கூடிய நமது கடையில் ஆபிரகாம் தாமஸ் நாயுடுகாரு பெண்களுக்குள்ளிருக்கிற நேச—விரோதங்களின் கூர்மையைப்பற்றிப் பேசினார். "ஒரே வீட்டில் குடியிருப்பவர்களுக்குள் நேசம் முற்றினால் ஒருவருக்கொருவர் புளி, வெள்ளைப்பூண்டு, கடுகு முதலியவைகளை இரவல் கேட்பதில் மிஞ்சிக்கொள்வார்களாம்! இதில் இரவல் பெற்றதைத் திருப்பிக் கொடுக்கிற ஜாதியும், கொடாமல் விழுங்கி விடுகிற ஜாதியுமாக இரண்டு பிரிவு உண்டாம். ஒருத்தியின் புருஷனுக்கு இன்னொருத்தி சோறு போடவும் முதுகு சொறிந்துவிடவும்கூட அவ்வளவு நெருங்கி உறவாய்விடுவார்களாம். இவள் குழந்தை அவளிடமும், அவள் குழந்தை இவளிடமும் இருக்குமாம். அரிசி முதலியவற்றை ஒருத்திக்கொருத்தி விற்றுக்கொண்டு பணமும் சேர்ப்பார்களாம். சேர்த்த பணத்துக்கு ரவிக்கை, தாவணி, சில்லரைப் பித்தளை பாத்திரம், அலுமினியம் இவைகளும் வாங்குவார்களாம். இத்தனை ஒற்றுமையிலே உருண்டு கொண்டு கிடக்கையில், தெருவுக்கு சாணம் போடுகிற சங்கதியிலோ, நீ போடவில்லை, நான் போடவில்லை, அவள் போடவில்லை யென்பதிலோ, அல்லது ஒன்றை இரவல் கேட்டு மற்றொருத்தி சும்மா கொடுத்துக் கொடுத்துச்சோர்ந்துபோய் "இல்லை" யென்பதினாலேயே, பிள்ளைகளுக்குள் உண்டாகும் சண்டையின் மூலமாகவோ வருத்தமோ கலகமோ சண்டையோ வாய்வாதமோ வளர்ந்து கொண்டுவிட்டதானால், அதுமுதல் இருவரும் ஜென்மப்பகையாகிப் பிரிந்துவிடுவார்களாம்"—என்றார்.

ஃ

உடனே தென்னாப்பிரிக்கா டேவிட்நாயுடு பெரிய ஏப்பம் விட்டுக் கொண்டு எழுந்து முன்னதைத் தொடர்ந்து பேசலானார். 'இப்படி விரோதச் சுவற்றில் முட்டிக்கொண்ட பெண்கள் ஒருத்திமேல் ஒருத்தி எடுத்ததற்கெல்லாம் குற்றஞ்சொல்லுவார்களாம். அவள் மாமியிடம் இவள் போய் கோள்மூட்டுவாளாம்! அதை இன்னொருத்தி கேட்டுக்கொண்டிருந்து அவளுக்குச் சொல்லுவாளாம். உடனே அவள் ஏழு சுவர் எழும்பிக் குதித்து எப்படியடி சொல்லலாம், நாறுகிற மீனு தின்கிறவளே என்று வசைபாட ஆரம்பித்துக்கொள்வாளாம். இதிலே மாமி கோள் சொன்னவள் பக்கமே இருந்துகொண்டு தன் மருகியை அன்னியக்காரியாக வைத்துப் பேசுவாளாம். கடைசியில் இது மாமி மருகி சண்டையிலும் புகுந்து

குடும்பத்தின் ஜீவிய ஒளி (எலக்ட்ரிக் பவர்) தனித்த ஒரு மனிதனிடம் இருக்கின்றது. அந்த மனிதன் உள்ளவரை எங்கும் மங்காத கீர்த்தியும் அதிகார ஆட்சியும் செல்லுகின்றது. அந்த மனிதன் மறைந்துவிட்டால் அவனோடு அந்த எலெக்ட்ரிக் பவர் (—ஜீவிய ஒளி—) நீங்கிகுடும்பத்தின் ஜோதி—ஒளி— குன்றிவிடுகின்றது. அதற்குப் பின் அந்தக் குடும்பம் முன்னுக்கு ஓங்குவதில்லை.

கொள்ளுமாம்! உடனே மாமி குதி குதித்துத் தன் குமாரனிடம் போய்ச் சொல்ல, இவ்வளவையும் ஆதிமுதல் பார்த்துக்கொண்டே இருக்கிற அவன் எந்தப்பக்கம் பேசுவதென்று தெரியாமல் திகைப்பானும். தன் தாயார் அந்த அன்னியப் பெண் பக்கமாகப் பேசித் தன் மனைவியைக் கேவலப்படுத்துவதைத்தான் எடுத்துச் சொன்னால், உடனே தாயார் என்னடா உன் மனைவிக்கு சிபாரிசு பேசவந்தாயோ என்று ஆரம்பித்துக்கொள்வாள். தன் மனைவியைக் கண்டிக்கப்போனாலோ, அவர்கள் எவ்வளவு பேசுகிறார்கள், அதையெல்லாம் கேட்டு அடக்கப் போகாமல், என்னை மடக்குவதற்கு வந்தீர்களே, எனக்கு இந்த வீட்டில் என்ன வேலை—நான் இங்கே இருக்க முடியாது—இதோ போகிறேன் என்று மிக முறைத்துக்கொள்வாள். இதிலே எந்தப் பக்கம் பேசுவதென்று வாய்மூடிக்கிடக்க நேருமாம்" என்று இயம்பினார். ஃ

மொட்டைக் கடிதம் எழுதும் மொட்டை அதன்பின் பேசியதாவது:—இவ்விதம் மூண்டுகொள்ளுகிற சண்டையிலே பெண்கள் கொலைப்பாதகிகளாகவும் இரக்கமற்றவர்களாகவும்கூடப் போய்விடுவதுண்டென்றார். இரவில் ஒருத்தியின் குழந்தை அழுதால் அதனால் மற்றொருத்தியின் நித்திரைக்குப் பழுதே வாராதாம். அவள் ஹாயியாகத் தூங்கிக்கொண்டிருப்பாளாம். எவ்வளவுதான் அந்தக் குழந்தை அழுது கதறினாலும் அக்கமயக்கத்திலிருப்பவளுக்கு அது ஒரு துன்பமாகவே படாதாம். அவள் காது அக்குழந்தையின் அழுகைச் சத்தத்தைக் கேளாத அத்தனை பலத்த பீரங்கிச் செவிடாகிவிடுமாம். தொட்டிலிலிருந்து குழந்தை கீழேவிழுந்தாலும், பாதி வெளியிலும் பாதி உள்ளுமாகத் தொட்டியில் தொங்கினாலும் கண்கள் கவனியாத குருடாகிவிடுமாம். ஆனால், என்ன கடும் நித்திரையிலிருந்தாலுங்கூட, தன் குழந்தை சற்று அழுதாலும் உடனே விழித்துக்கொண்டு அதைச் சமாதானம் செய்யவோ—பால் கொடுக்கவோ தொடங்கிக்கொள்வாளாம். பரப்பிரம்ம ஸ்வரூபமாய், உலகத்திலிருந்தும் உலகஆபாஸங்களோடு பற்றுதலற்று விளங்கும் பச்சைக் குழந்தையானாலுங்கூட, பெண்களுக்குள் தன் குழந்தையென்றும், இன்னொருத்தியின் குழந்தையென்றும் எப்போதும் பேதம் இருக்கத்தான் செய்யுமாம். அதிலும் ஒருத்திக்கொருத்தி விரோதம் முற்றிக்கொண்டிருந்தால் பட்டப்பகலில்கூட குழந்தை தவழ்ந்துகொண்டு கண்ணீருடன் கதறினாலும் அதைக் கவனியாமல் இன்னொரு பக்கமாய் ஒதுங்கி வெளியில் போய்விடுவாளாம். பெண்கள் விரோதப்படுவதிலும் மகாராணிகள்; சிநேகப்படுவதிலும் ஒத்துக் குலாவுவதிலும் நிகரில்லாத ஒய்யாரக்காரிகள். பெண்களிலும் பெரிய விஷமிகள் உலகில் வேறில்லை. அவர்களைவிட அமிர்தகுண ஸம்பன்னைகளும் தெய்வ உருவங்களும் வேறில்லையென்று காவிரிக்கரை மொட்டையார் பேசினார். ஃ

இதிலே இன்னொரு வேடிக்கையையும் சொல்லுகிறேன்" என்று கரிவேப்பிலைப் பண்டாரம் எழுந்தார்.

ஒரு காதலன்மொழி:—அடுக்கு மல்லிகைத் தெளித்த பஞ்சணை
யடுத்துறங்கு கிடுவாய் மயிலே!
திடுக்கு மன்மதன் தொடுக்கும் சரத்தை
யடக்க வழியும் கிடைத்ததின்று (அடுக்கு மல்லிகை)

இவ்விதம் பெண்கள் எவர்கள்மீது விரோதப் படுகிருர்களோ, அங்கு அவர்களின் புருஷர்களும் விரோதப் படுகிருர்கள். எவர்களிடம் பெண்கள் அபிமானம் வைச்கிருர்களோ அங்கு அவர்களின் புருஷர்களும் அன்பாய் ஒட்டிக்கொண்டு நிற்கிருர்கள். ஒரு பெண் ஒரு சிலரிடம் அபிமானம் கொண்டு நிற்கையில் அந்தப் பெண்ணின் கணவன் அவர்களிடம் வெகு விஸ்வாசமும் பக்ஷமும் காட்டித் தாளம் கொட்டுவானும். அதுமட்டுமல்ல, அப்பெண்ணின் மக்களும் அப்படியே நெருங்கிக் குலாவி நாதசுரம் வாசிப்பார்களாம். பிறகு இந்தப் பெண் முகம் கோணி வேருகிவிட்டால், இவளுடைய கணவனும் மக்களும் அன்னிய மனுஷர்கள்போல் வேருகிவிடுவார்களாம். எல்லா சங்கதியும் பெண்களின் கையில் ஏறிக்கொண்டிருக்கிறது. அவர்கள் எந்தப் பக்கம் வண்டியைத் திருப்பி ஓட்டுகிருர்களோ அந்தப் பக்கம் மாடும் வண்டியும், அதில் ஏறிக் குந்தியுள்ள கொழுக்கட்டைகளும் திரும்பி ராகம் பாடுகின்றன. பெண்கள் நல்லதுக்கு நல்லவர்கள்—கெட்டதுக்கும் கெட்டவர்கள்என்று பெண்ணுலகைப்பற்றிப் பிரசங்கித்தார். இத்துடன் நமது கடையும் பூர்த்திபெற்றது.

'பகதூர்' பொன்வண்டு செட்டியார்.

குறிப்பு:—நமது கடைக்கு ஒரு மொட்டைக்கடிதம் வந்திருக்கிறது. கையெழுத்தும் விலாஸமும் இல்லை. தபால் முத்திரையால் ஊர்மட்டும் காவிரி நதியோரம் என்று தெரிகிறது. இந்த மொட்டைக் கடிதப் பிரசண்டம் தனது விலாஸத்தைத் தெரிவிக்குமானுல் சுடச்சுட சரியான பதில் கொடுக்கத் தயாராக இருக்கிரேம். மொட்டைக் கடிதங்கள் குப்பைத் தொட்டிக்கே போகும்.

பொன்வண்டு.

விலாசம் மாற்றுவோருக்கு முக்கிய அறிவிப்பு.

நமது 'அமிர்த குணபோதினி' பிரதிமாதமும் சந்தாதாரருக்குச் சரிவரக் கணக்கிட்டுக் குறித்த தேதியில் தபாலுக்கு அனுப்பப்பட்டுவந்தும், சிலர் சஞ்சிகை வந்து சேரவில்லையெனத் தெரிவிக்கின்றனர். இந்த நண்பர்கள் நமக்கு அறிவிப்பதோடுமன்றி, அவரவர்கள் ஊர் போஸ்ட் மாஸ்டருக்கும் தெரிவித்தால் சஞ்சிகைகள் ஒழுங்காகக் கிடைக்கக்கூடும். இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்களுக்கு சஞ்சிகை புதிய விலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் முதலில் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு, நமக்குப் புது விலாசத்தைப் பிரதிமாதம் 14-ந்தேதிக்குள் அறிவிக்கவேண்டும். நமக்கு எழுதும் கடிதங்களில் தங்களின் இவ்வருடத்திய சந்தா நேம்பரையும் அவசியம் குறிப்பிட்டு எழுதக் கோருகிறேம். மானேஜர்.

மனவருத்தமே இல்லாத உறவும், நட்பும், அயல்வீடும் மிக்க அபூர்வம்.

பழமொழிக் குறிப்புகள்

3. இல்லறம்.

(536-ம் பக்கத் தொடர்ச்சி.)

"காக்கனுக்கும் மூக்கனுக்கும் பூத்தாயோ புன்னை ;
கண்ணாளன் வருந்தனையும் பொறுக்காயோ புன்னை."

இது ஓர் அழகிய பழமொழி. ஒரு பதிவிரதாங்கனையின் உள்ளத்து இயல்பை உள்ளவாறு விளக்கிக் காட்டும் பழமொழி. அவளுடைய பிராணபதி வெளியூர் சென்றிருக்குங் காலத்தில் புன்னை பூத்ததைக் கண்டு, அவர் இல்லாதபோது என் பூத்தாய் என்று வருந்துகிறாள். தன் பிராண காந்தனைத் தவிர மற்றவர்களைப்பற்றி அவளுக்குச் சிந்தையில்லை; அவர்கள் காக்கன் மூக்கன்போல அன்னியர்களாகவே அவள் மனதிற்குப் படுகிறது. வீட்டில் எத்தனை பேர் இருந்தாலும் தன் ஆருயிர்க்கு இன்பம் நல்கி இகபர கதி தரும் தனது பிராணநாயகன் இல்லாவிடத்து அவ்வில்லமும் அங்குள்ளவரும் வெறும் இடமாகவே தான் அவளுக்குத் தோன்றும். இவ்விதம் தோற்றுகையானது அவளது நற்குணத்தின் இயல்பையும் பதிபக்தியையும் அதிகப்படுத்திக் காட்டுகின்றது. இல்லறவாழ்வில் பெரும்பாலும் காக்கனுக்கும் மூக்கனுக்குமே செலவிடப்பட்டும் ஆக்கிக் கொட்டியும் வியர்த்தமாகிறதேயன்றி கண்ணுக்குக் கண்ணானவர்களுக்குச் செய்வதற்கு முடிகிறதில்லை. வெறும் உடம்பாக நிற்கும் குழந்தைக்கு ஒரு நகை செய்யலாமென்று நான்கு காசுகளை மிச்சப்படுத்தினால், அந்த சமயம் எவரேனும் பந்துக்களோ பந்துக்களல்லாதவர்களோ வந்து குந்திக்கொண்டு அந்தக் காசைக் கரைத்து விடுகிறார்கள். ஐயோ காசே! நீ இவர்களுக்குச் செலவிடவா சேர்ந்தாய், நகை செய்வதற்குச் சேர்ந்து ஒரு நகையாக ஆகக்கூடாதா? இந்த சமயத்தில் இவர்கள் வந்து சேர்ந்தார்களே யென்று வருந்தும்படி ஆகிறது. மேலும், நமக்கென்று நம்மீது பிரியமுள்ளவர்கள் நமது அருகிலிருந்து நம்மோடு உண்பதற்கில்லாமல் வெகு தொலைவில் கிடக்க, நம்மீது எவ்வித அன்புமில்லாத—சமயம் வந்தால் நம்மீது தானே குதிரை ஏறக்கூடியவர்களே அடிக்கடி நம் வீட்டிற்கு வந்து தங்கி நாமும் அவர்களுக்குச் செலவிடவேண்டி வருகிறபோது, ஆ! அவர்கள் வந்து ஒரு கவளமும் உண்ணக் காணோமே, நாளைக்குக் குத்திப் பேசிச் சீறுகிறவர்களாகிய இவர்களுக்கே செய்யவேண்டி யிருக்கிறதே யென்று நெஞ்சு வேகவேண்டி வரு

எதிர்பார்த்த ஆவலான அருமைக் கடிதம் வருகிறதில்லை; வரவேண்டுமென்று ஒருசிறிதும்வைக்காத கடிதம்தான் அடிக்கடி வந்துதொலைகிறது.

கிறது. சாப்பாட்டினுடைய ஒரு ரகசியம் என்னவென்றால் ஒரு கூட்டத்துக்குக் காலமுழுதும் அன்ன வஸ்திரம் தந்து ஆதரித்திருந்தாலும், கடைசியில் அதை ஒரு சொல்லாகச் சொல்லமுடியாதிருப்பதுதான். நான் அவர்கள் வீட்டில் புசித்ததுண்டா, எப்போதோ வருஷத்திற்கு ஒருதரம் இருக்கலாம்; அவர்கள்தான் காலமுழுதும் அடிக்கடி வந்து தங்கி உண்டுவிட்டுப் போயிருக்கிறார்கள் என்று ஒருவன் ஒரு சச்சரவு சமயத்தில் வாய் திறந்து சொல்லி விடுவானாகில், உடனே அவனிடம் உண்டவர்கள் நாலு பேருக்கு நடுவில் தங்கள் வாயைத் திறந்துகொண்டு, 'அட ஈனக்கார மனுஷனே! பிச்சைக்காரப் பூதமே! அல்பனாயே! என்னவோ ஒரு நாள் (?) இத்தனை பழய சாதம் (?) போட்டுவிட்டதற்கும், ஒன்றிரண்டு நாள் (?) கவனித்துப் பார்த்ததற்கும் அதை ஒரு பேச்சாகப் பேசவந்தாயே ?—என்னவோ இவ்வளவு சோறு! அந்த நாற்றச் சோற்றை ஒரு கணக்காக எண்ணிப் பேசிவிட்டாயே?—உன்வீடு இல்லாவிட்டால் ஊரில் தங்க மடங்கள்—சத்திரங்கள் இல்லையா?—இந்த நாற்றச் சோறு அங்கு கிடைக்காதா?—நாலு காசு வீசி எறிந்தால் நாய்போல் தானே ஓடிவருகிறது—இந்த அல்பத்தை ஒரு பேச்சாகச் சொல்லிக் காட்டுகிற அல்பனென்று தெரிந்திருந்தால் ஆதி காலத்திலிருந்தே உன் வீட்டிற்கு அடிஎடுத்து வைத்திருக்க மாட்டோமே,-இந்தச் சோற்றைத்தவிர்த்து நீ என்ன வாரிக் கொடுத்துவிட்டது-- வண்டி வாகனங்கள் வாங்கித் தந்துவிட்டது—எங்கள் பொருட்டாக ஒரு காசு செலவிட்டிருப்பாயா?—எல்லாம் நான் அல்லவா செய்து கொண்டேன்'' என்று குதித்துப் பேசத்தொடங்கிக் கொள்கிறார்கள். அவர்களோடு அவர்களின் மக்களும் சேர்ந்துகொண்டு தா—தை—தோம்-- என்று ஆடுகிறார்கள். இவர்கட்கு செய்தும் செலவிட்டும் என்ன பலனாயிற்று? இந்தத் திட்டுகள்தான் கடைசியில் மிச்சம்! இதிலே இத்தகையோருக்காக ஒரு விஷயத்தை அவர்களின் முகத்தில் அறைந்தாற்போல இங்கு குறிப்பிட வேண்டியதிருக்கிறது. நாற்றச்சோறு என்று இவர்கள் பழித்துக்காட்டுகிற அந்த சோறு சும்மா சும்மா வரவில்லை. ரூபாய் கொடுத்து அரிசி வாங்கித்தான் அந்தச் சோறு தயாராயிற்று; சோறுடன் மட்டுமல்ல, அதற்கு வேண்டிய குழம்பு முதலிய பதார்த்தங்களும் காசு தந்தே வருகிறது. பணத்தை அவிழ்த்தாலன்றி இவைகள் வரா. இதை உட்கார்ந்து இலவசத்தில் நக்குவோர் கவனித்துக் கொள்ள வேண்டியது அவசியம்; அப்பொழுதுதான் அவர்களும் நன்றியுடையோராக நடந்துகொள்ள முடியும். எஜமானனின் வீட்டில் மூன்றுநாளோ மூன்று மாதமோ உண்டுவிட்டு தன் சம்பளத்தில் ஒரு காசுங் குறையாமல் பெற்றுக் கொள்ளுகிறபோது, அந்த நாற்றச் சோற்றின் கணக்கையும் விரல்விட்டு எண்ணிப் பார்த்து மொத்தம் கூடுதலான சாப்பாட்டு விலையின் தொகையைத் தனக்குத் தன் எஜமானன் இனமாகத் தந்தாரென்று நினைத்துக் கொண்டால்

லைப் இன்சூரன்ஸ் கம்பெனிகளுக்கு சந்தா சேர்க்கும் ஏஜண்டுகள் எந்த சங்கதியாக எவரைச் சந்தித்தாலும் அந்தப் பேச்சோடு பேச்சாக இன்ஸூரன்ஸ் சங்கதியையும் மெதுவாக நீட்டி—"நீங்கள் சேருகிறது தானே" என்கிறார்கள். கேட்பவர்கள் அதற்குப் பதில் ஒன்றும் சொல்லா விட்டாலும் அடிக்கடி எடுத்துச் சொல்லி மகா நன்மை செய்பவர்கள்போல் நடிக்கிறார்கள்.

தான் நன்றிவிசுவாசத்துடன் நடந்து கொள்ள நல்ல புத்தியுண்டாகும். இவ்விதம் நற்புத்தி பெற்றுக் கொள்கிறவர்கள் சுருங்கின தொகையாகவே காணப்படுவார்கள். சாதாரணமாக இல்லறவாழ்வில்நடப்பது யாதெனில், நமக்குப் பிரியமானவர்கள் கண் மூடிக்கொண்டு போய்விட, அவர்களுக்குச் செலவுகள் செய்தும் ஆதரித்தும் சந்தோஷப்படுவதற் கில்லாமற் போய், எவரெவரோ புது உறவுக் கட்டைகளான வெட்டிப் பேர்வழிகளுக்கு ஆக்கிக் கொட்டித் தொலைத்து அழவேண்டியிருக்கிறது. அவ்வாறாக நேர்ந்துகொள்ளுகிற சமயங்களிலெல்லாம் காக்கனுக்கும் மூக்கனுக்கும் பூத்தாயோ பணமே என்று நெஞ்சுக்குள்ளே கதறவேண்டி வருகிறது. இதில் இன்னொரு விசித்திரம். நமக்கு வேண்டியவர்களுக்குச் செலவிட நினைத்த காரியத்தில் நமது கையில் காசு இல்லாமற் போய்விடுகிறது. நமக்கு வேண்டாக் கட்டைகளான தடியர்களுக்கும் அநுகூல சத்துருக்களுக்கும் புது உறவுக்காரர்களுக்கும் செலவிடமட்டும் எங்கிருந்தோ பணம் வந்துவிடுகிறது. விஸ்வாசமுள்ள பழய உறவினர்க்கும், பழய முதல் மனைவிக்கும் செலவிடப் பணம் இல்லாதுபோய், இப்போதுள்ள இரண்டாவது மனைவிக்கும் புது உறவுக்கட்டைகளுக்கும் பணம் செலவிடக் கிடைப்பது மனதால் தாள முடியாததாகி, இவர்களுக்காகவா கிடைத்தாய் பணமே, அவர்களுக்குச் செலவிட வராமற்போனையே என்று,—புன்னையைப் பார்த்து நொந்த உத்தமியைப்போல,—பணத்தைப் பார்த்து நோகவேண்டியிருக்கிறது. இன்னொரு விஷயம் யாதெனில், காலமுழுதும் நம்மைச் சுற்றி நிற்பவர்கள் நம்மிடம் பிடுங்கித் தின்னவும் சுறண்டவும் காத்திருப்பவர்களேயன்றி நம்மீது உண்மையான பற்றுதல் கொண்டோரல்லர்; சிறுபான்மையோரே நமக்காக உயிர்விடக்கூடியவர்கள்; நமது கைவிரலைப்போல் நமக்கு உதவக்கூடியவர்கள். அத்தகையோருக்குச் செலவிட நம்மிடம் பணம் அகப்படாது; நாம் செலவிடவும் சமயம் எதிர்படாது; எதிர்படினும் தடைபட்டுவிடும். எங்கோ அபூர்வமாகவே சில சமயங்களில் நமமீது அன்புவைத்தவர்களுக்கு நாம் உதவிசெய்ய முடிகிறது. பெரும்பாலும் காக்கனுக்கும் மூக்கனுக்குமே நாம் வீணுக்கு உழைத்து வரத்தலைவிதி வாய்க்கின்றது. என் செய்ய?

வயோதிகனை விவாகம் செய்துகொண்ட பெண்ணை, வயசுக்காரனைக் கல்யாணம் செய்து கொண்ட பெண்கள் சிரித்துக் கேலி செய்கிறார்கள். வயோதிகன் நெடுநாள் வாழவும் நேரலாம். நல்ல வாலிபன் நடுவில் மரணமாகலாம். தாலி பாக்கியம் வயதைப் பொறுத்ததல்ல; விதியைப் பொறுத்தது. இன்று பழிக்கிற நமக்கு நாளை என்ன நேர இருக்கிறதோ? நாளை நாம் நொண்டியோ யாரோ!

இங்கிலாந்தில் பார்லிமெண்டு மெம்பர்களோ பிரபலஸ்தர்களோ இந்தியாவில் உள்ள நிலைமையை அறிந்து கொள்ளவில்லை யென்று கூறுவது உண்மையல்ல. அவர்களுக்குக் கூடிய வரையில் விஷயங்கள் தெரிந்திருக்கின்றன. ஆனால் அவற்றைக் கொண்டு கிரமமான முடிவுக்கு வரத்தான் இஷ்டப்படவில்லை. இஷ்டப்படாததற்கு அவர்களின் உலக ஆசை காரணம்.

மூளைக்கு வேலை

1. "விகடகவி" என்ற பதத்தைப்போல் ஒரு பெயரை வலப்பக்கமோ அல்லது இடப்பக்கமிருந்தோ வாசித்தாலும் ஒரே பெயர் வரும். இதன்படி ஒன்பது எழுதுக.

2. முதன்முதற் கற்றோம் என்று சொல்லும் பொருளை முடிவிலுங்கூட அதைச் சரியாய் இன்னும் அறிகிலோம் என்பர். முதலிற் கற்றது எது ?

3. பெற்றோர்க்கு ஆனியுண்டாக்கும் துற்புத்திரர் நால்வர் யார் ?
4. உலகத்தில் ஒரே இடத்தில் இருக்கும் ஜெந்து எது ?
5. பாரினில் சீக்கிரம் பலன் கொடுக்கும் மரம் எது ?
6. நாட்டின் நடுவு நிலைமையுடையது எது ?
7. குதிரைக்கு ஒன்று இல்லை, அது எது ?
8. பூமியில் சாகாத மிருகங்களுமுண்டோ ?

சு. க. பிச்சைமுத்து ராஜ்.

[நடுவெழுத்து வினா, மூன்று ஒன்பது எழுத்துகள் சேரும் பெயர்களின் வினா இவைபோன்றவைகட்குப் பத்திரிகையில் இடமில்லை.—ப-ர்.]

II

9. ஒரு மளிகைக்கடையில் 4-படிக்கற்கள் இருந்தன. அதன் மொத்த நிறை 40-பலம். அந்தக் கற்களினுதவியால், 40-பலங்களுக்குட்பட்டதும் 1 பலத்திற்கு மேற்பட்டதுமான எந்த நிறைக்கும், ஒரேதடவையில் சாமான் நிறுத்துப்போடலாம். தராசுத்தட்டு இரண்டிலும் படிக்கற்களை மாற்றிப் போட்டு நிறுத்துக்கொள்ளலாம். அப்படியானால் ஒவ்வொரு படிக்கற்களின் நிறையென்ன ?

10. ஒரு குடியானவனுக்கு மூன்று குமாரர்கள் இருந்தனர். அவனிடம், 2-படி பால் கறக்கக்கூடிய பசுக்கள் பத்தும், $\frac{3}{4}$-படி பால் கறக்கக்கூடிய பசுக்கள் பத்தும், $\frac{1}{4}$படி பால் கறக்கக்கூடிய பசுக்கள் பத்தும், ஆக முப்பது பசுக்களும் முப்பது படி பால் கறக்கக்கூடியதாயிருந்தன. அவைகளை அவனுடைய குமாரர்களுக்குப் பாகம் செய்துகொடுக்க எண்ணினான். பாகம் ஒன்றுக்குப் பத்து படி பால் கரக்கக்கூடிய பசுக்கள் பத்து வரும்படி பாகம் செய்ய வேண்டும். எப்படிப் பாகித்தால் சரியாகும் ? ப. சுருளிவேல்.

[அன்பர்கள் வியாசங்கள் எழுத எடுத்துக்கொள்ளும் சிரமம் தேவையில்லை. அதைவிட நூதன கையொப்பங்களைச் சேர்ப்பது சிலாக்கியம் தரும். ஒருமுறை எழுதியவர்கள் மறுமுறை வரைய இரண்டு மூன்று மாதங்களாவது போகட்டும். அனுப்பும் விஷயங்கள் யாவுமே பிரசுரமாகிவிடமாட்டா. ப-ர்.]

III

விடுவிப்பு :—

மார்கழிமாத ஸஞ்சிகையின் 545-ம் பக்கத்திலுள்ளதற்கு விடை :—

1-வது விடுகதைக்கு விடை :—(1) கால்களில் பாதக்குறடுகளுடன் கையில் விசிறியை யேந்திய வண்ணமாய்ச் சென்றான். (2) கோபு. (3)

'கார்' செய்யும்படியான கொல்லன் வீட்டிற்கும், 'கலப்பை' செய்யும்படியான தச்சன் வீட்டிற்கும் மத்தியில் உள்ளது. (4) பகற்பொழுதிற்கு அரசனாகிய சூரியன் மறைந்து, இரவிற்கு அரசனாகிய சந்திரன் தோன்றி, குளம்போன்ற தீபத்திலுள்ள எண்ணெய் முழுதும் எரிந்து வற்றி, கோபுரம்போன்று உயர்ந்து எரியும்படியான சுடரும் அணைந்து, உலர்ந்த மரமாகிய கதவானது உலர்ந்த மரமாகிய வாசற்படியுடன் முற்றிலும் நெருங்கிப்படும் சமயம் அதாவது தாளிடும்சமயம் வந்தால் காணலாம் என்றான். அதாவது இரவில் வருக என்றான்.

2-வது விடுகதை :—சீட்டாடும் காகிதங்கள். (Playing Cards.)

3-வது விடுகதை :—தேங்காய்.

நமது சந்தா நேயர்களுக்கு அறிக்கை.

1931-ம் வருஷம் ஜனவரி௴ முதல் தேதியிலிருந்து, வி. பி. யில் அனுப்பப்படும் கடிதங்கள், பார்சல்கள், புத்தக பத்திரிகைகள், அவை அனுப்பப்பட்ட அல்லது அவற்றைத் தருவித்தவர்களுக்கு அனுப்பப்பட்ட அல்லது அவற்றைத் தருவித்தவர்களுக்கு அறிவிக்கப்பட்ட பின் மூன்று நாட்களுக்குமேல் தபாலாபீஸின் இருப்பில் வைத்திருக்க முடியாதென்றும், அப்படி வைத்திருக்க விரும்புவோர் எத்தனை நாள் அவ்வாறு வைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அதற்கு நாள் ஒன்றுக்கு இரண்டு அணு வீதம் ஸ்டாம்பு வாங்கி ஒட்டி மனுச்செய்து கொள்ள வேண்டுமென்றும், 10—நாட்களுக்குமேல் வைத்திருக்க முடியாதென்றும், மனுச்செய்து கொள்ளாவிட்டால் சாமான்களை நான்காவது தினமே அனுப்பியவருக்கே திருப்பியனுப்பிவிடப்படுமென்றும் தபால் இலாகா டைரெக்டர் ஜனரல் அறிவித்திருக்கிறார்கள்.

ஆகையால் நமது சந்தாதாரர்களும், நமது கம்பெனியிலிருந்து பலவித சாமான்களை வி. பி. மூலம் வாங்கும் இதர நேயர்களும் இவ்வுத்திரவை ஞாபகத்திற்கொண்டு தங்களுக்கு இன்டிமேஷன் (தபால்) வி. பி. வந்திருக்கிறதென்னும் தகவல் கிடைத்ததினமே, அல்லது மூன்று நாட்களுக்குள்தானே வி.பி.யைப் பெற்றுக்கொண்டுவிட வேண்டுமென இதனால் ஞாபகமூட்டுகிறோம். மானேஜர்.

தங்களை உண்மையாகவே மதித்துப் புகழ்வோரை நூலாசிரியர்கள் காணும்போது அவர்கள்பட்ட உழைப்புக்கு ஒருவித ஆறுதல் உண்டாகிறதாம்.



விகடனின் புது வருட வந்தனம்!



பிறந்துவிட்டதப்பா புது வருடம்! முன்னாலே ஒரு கொம்பும், பின்னாலே ஒரு கொம்புமாய் (1931) இருகொம்பு பூண்ட இன்பமான வருடம்!—இப்படியே இது இனிதாக முடிந்தால் மகா ஆநந்தம் தான்!! விகடன் இந்தப் புதுவருஷத்திலே என் நஞ்சான் குஞ்சான் குட்டிகளுக்கும், மற்றும் ஊராருக்கெல்லாம் என் புதுவருட வந்தனங்களை—வந்தன மிதோ தந்தேன்—என்று என் பெத்தப் பெரிய தொப்பை தொந்தி குலுங்க என் கோணத்தடியைத் தூக்கிக் கொண்டு தெரிவித்துக் கொள்கிறேன்!

ஃ

முரட்டுக்காரனுக்குத் தகுந்தபடி அடக்கமான பெண்ணும், சாந்தகுணக்காரனுக்குத் தக்கபடி அவனை ஏறி மிதிக்கத்தக்க ஒரு மூர்க்கப் பெண்ணும் அகப்படுவதும் அதிசயந்தான்! முரடன் எவ்வளவோ கொடுமையாயும், சொத்துகளை யழித்தும், குடித்து வெறித்தும், ஸர்வ நாசம் செய்து தீர்த்தும், கண்டபடி ஹிம்ஸித்தாலும் அந்த அடக்கமான பெண்ணும் அவனையே கண்ணுக்குக் கண்ணாக நினைத்து பதிபக்தி செய்கிற பொற்றொடியா யிருக்கிறாள்! இது ஒரு கொடுத்துவைத்த பெண்டாட்டி பாக்கியமல்லவோ! இந்த அதிர்ஷ்டவானான முரடனுக்கும், அந்தக் கற்புக்கரசியான மகா லக்ஷ்மிக்கும் விகடன் என் புது வருஷ வந்தனங்களைச் சொல்லுகிறேன்!

ஃ

இனி, சாந்தகுணபூஷணனான அந்த உத்தம மனிதனுக்கு வந்து விட்ட வல்லாளகண்டியின் சங்கதி கேட்கிறீர்களா? அவன் அடங்கின ஸாத்மீகப் பேர்வழி என்று கண்டு கொண்ட பெண்டாட்டியாத்தான் பெரிய ஆத்தாளாகி அவனை எய்த்து விடப் பார்க்கிறாள்! அவள் அதிகாரம் தலைமீறிப்போகவே, கூட இருப்பவர்களும் அவள் பக்கமாய்ப்பேச மூளைத்துக்கொள்கிறார்கள். உங்கள் பெண் மீறி நிற்கிறாள் என்று அவன்புருஷன் அந்தப் பெண்ணைப் பெற்றவர்களிடம் சொல்லப்போனால், அதற்கு அவர்கள்–"அவன்தான் அப்படித் துஷ்டத்தனமாகக் கிடக்கிறாளே, நீ ஜாடையாய்ப் போய்விடுகிறது தானே, அதையெல்லாம்கவனித்துக்கொண்டு நில்லாதே" என்று அவன் மூஞ்சிக்கே சமாதானம் சொல்லவருவதுபோல் வந்து சொல்லுகிறார்கள்! இந்த சமாதானம்

வெந்த புண்ணில் வேலுருவியது போல் இருக்கிறது! இங்கே அவனுக்கு இவ்விதம்சொல்லி ஒரு இறக்கு இறக்கிவிட்டு, அந்தப் பக்கம் அவளையும் தூண்டிவிட்டு, "நீ செய்கிறது சரிதாண்டி, அப்படி நடந்தால்தான் அந்தப் பயல் அடங்கி உன் காலில் விழுவான்; வேறு திக்குதிசை அவனுக்கு உன்னையல்லாமல் எங்கிருக்கிறது; நீ இட்ட பிச்சைதானே அவனுக்கு; என்னவோ துள்ளுகிறான்; எல்லாத் துள்ளலும் சீக்கிரம் அடங்கிவிடும் என்று தட்டிக்கொடுத்து உபதேசம் ஓதுகிறார்கள். இதன்மேல் வீட்டுக்குவந்த பெட்டைநாரியோ இன்னும் அதிகமாக ஒரு துள்ளு துள்ளி எழும்பிக் குதிக்கிறாள்! இவ்வளவும் எப்போது—எந்த வேளையிலே என்கிறீர்களோ?——ஒரு விசேஷ நாளிலே—எவ்வளவோ செலவுசெய்து கூடை கூடையாய்க் காய் கறிகள் கொண்டுவந்து போட்டிருக்கிறபொழுதிலே--ஒரு விரதகாலத்திலே, வராத விருந்துகள் வந்திருக்கிற சமயத்திலே—தான் மூண்டு கொள்கின்றன! ஃ

வந்த விருந்தாளிகள் வீடு இருக்கிற ஜாடையையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுகிறார்கள்! புருஷன் பக்கமும் மனைவி பக்கமுமாக இரு பக்கமும் இதமாகப் பேசிவிட்டு தங்கள் போஜனகாரியத்தைப் பார்த்துக் கொள்கிறார்கள்! அதிலும், வீட்டுக்கார புருஷன் சமையலறையில் இலைபோடு என்றால், அந்த வெள்ளாட்டி வெளிக் கூடத்தில் கொண்டுவந்து போடுகிறாள். சரி, வந்தவர்களின் முன்பு சண்டை வேண்டாமென்று பல்லைக் கடித்துக்கொண்டு ஆத்திரத்தையெல்லாம் அடக்கியபடி உர் என்றிருக்கிறான்! இப்படியாக வாதுக்கு நிற்கிற வீட்டு ராணிக்கும்—ஏண்டா அப்பா இந்தப் பேயைக் கொண்டோம் என்று ஏங்குகிற அந்த ஐயாவுக்கும்—இவர்களைத் தூண்டிவிட்டுத் தூபம் போடுகிற அம்மன்களுக்கும் ஐயன்களுக்கும்—கடைசியாக, நடுவில் விழுங்கிவிட்டுப் போகிற விருந்தாளிகளுக்கும்—விகடன் என் தொப்பை குலுங்க விழுந்து விழுந்து விழுந்து புதுவருட வந்தனம் சொல்லுகிறேன்!

ஃ

இனி, இரண்டு பக்கத்திலும் மேளமடிக்கிற கொள்ளிக்கட்டைகளின் சங்கதி வெகு வேடிக்கை! அந்தக்கொள்ளிக்கட்டை வீட்டுக்காரனுக்கும் வேண்டியதுபோல நடக்கும்! வீட்டுக்காரிக்கும் வேண்டியதுபோல இருக்கும்! வீட்டுக்காரி முறைத்துக்கொண்டு அந்தக் கொள்ளிக்கட்டையிடம் நான் இன்ன இடத்தில் கோயிலிலே குழந்தையுடன் போய் இருந்து கொள்ளுகிறேன். அந்த ஆளுக்குச் சொல்லாதேயென்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறாள்! நெடுநேரமாகிறது! வீட்டுக்குள் பெண்டாட்டியின் சத்தம் காணாததால் மெதுவாக அடுப்பங்கரைப்பக்கம் வந்து பார்க்கிறான். கொள்ளிக்கட்டை சமைத்துக்கொண்டிருக்கிறது! அப்பால் கொல்லை, மாடி, அந்த அறை, இந்த அறை, "இருந்த" அறையெல்லாம் தேடி விட்டுக் காணாது தன் பாட்டில் உட்காருகிறான்! இதற்குப் பிறகு கொள்ளிக்கட்டை மெதுவாக இவனிடம் வருகிறது! எங்கேயப்பா! அவளைக் காணோம்! தேடிப் பாரப்பா! எந்தக் குளம் குட்டையில் விழப்போனாளோ,

---

சந்தோஷமாகப் பேசும் சங்கதியிலோ, ஆநந்தமாக இருப்பதற்குப்போன இடத்திலோ—எவ்விதமோ ஒரு சச்சரவு சங்கதி எதிர்பட்டுக் கொண்டு வார்த்தை முற்றிப் பெரிய மனஸ்தாபம் மூண்டு கொள்கிறது.

ஆற்றுப்பக்கம் போனளோ என்னவோ, அவள்தான் முறடாச்சுதே; நீ விட்டுக் கொடுத்துப் போகிறது தானே, என்னவோ உன் தலையெழுத்து, அவளைக் கொண்டுவந்து கட்டித் தொலைத்தார்கள், அப்பொழுதே நான் அந்தப் பெண் என் மனதுக்குப் பிடிக்கவில்லை, சரியாயில்லையென்று எவ்வளவோ தடுத்தேன். உன் ஆத்தாள் கேட்டாளா! அருமை அருமை என்று கொண்டுவா அது எருமை ஆச்சுது! நீ போய் தேடிப் பாரப்பா என்று ஒரு பெரிய பிரசங்கம் வாய்ஓயாமற் செய்கிறுள்! இவனே வாய்க்கால்புறம், ஆற்றுப்புறம், அந்தத்தெருவு, இந்தத்தெருவு, மூக்காயி வீடு, முருகாயிவீடு, மூசுண்டைவீடு, மொச்சைக்கொட்டைப் பாளையம், மோர் தயிர் பால் விற்கிறவள் வீடு எல்லாம் தேடி யலுத்துவிட்டு கால் நோவுடன் வீடு வருகிறுன்! ஐயோ! அப்பா! அவளைக் காணுேமா! எந்தத் தண்ணியிலே விழுந்தாளோ எப்படியானளோ! கோயிலிலே போய்ப் பார்த்தாயா, போய்ப்பாரு என்கிறுள்! கடைசியில் கோயிலில் தேடப்போக அங்கு அவள் இருக்க, அவளைச் சமாதானப்படுத்தி வீடு கொண்டுவந்து சேர்க்கிறுன்! இந்தக் கொள்ளிக் கட்டை இங்கே எவ்வளவு வேலை செய்துவிட்டது பாருங்கள்! இவ்வளவும் செய்துவிட்டு வீட்டுக்காரனுக்கும் வேண்டியவளாகச் சாம்பிராணி புகை போடுகிறதே! எவ்வளவு சாமர்த்திய வித்தையப்பா இது! விகடன் இந்தக் கொள்ளிக்கட்டைக்கும் இரு கொம்பூண்ட புதுவருடத்தின் வந்தனத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஃ

விகடன் சில வேதாந்திகளை இங்கே கொண்டுவருகிறேன். பிச்சைக்காரன்கூட ஞானப்பாட்டு பாடியல்லவோ இந்த நாட்டிலே பிச்சையெடுக்கிறுன்! அத்தகைய அருமையான பூமியில் சகிப்புக்கார வேதாந்த ஆண்டிகள் இல்லாமலா இருப்பார்கள்? வேதாந்தம் என்ன சொல்லுகிறது?—"எந்தக் காரியத்தைச் செய்கிருயோ, அந்தக் காரியத்தில் அதே வேளையில் பற்றில்லாமலிரு" என்று சொல்லுகிறது. அப்படியாக, வெளியே கோபம் கொதித்தாலும் உள்ளுக்கு அந்தக் கோபத்தின் பசையே இல்லாமல் பல வேதாந்த ஆண்டிகள் இருக்கிறுர்கள். இவர்கள் யாரப்பா? அவர்கள் ஒரு வகையில் புத்திமான்களே. தாயாரின்மனம் திருப்திபடும் படியாக மனைவியைத் திட்டுகிறவர்களும், இளையாள் திருப்திபடும்படிமூத்தாளின் குமாரர்களை வைகிறவர்களுமான இப்படிப்பட்ட விவேகிகள் பிறர் மனத்திருப்திக்காக வெளியில் கோபமும் உள்ளுக்குள் அன்புமாக இருக்கிறுர்கள்! இதிலே கபடவேதாந்திகள் என்கிற வகுப்பு வேறேயுண்டு. அவர்களும் வேதாந்த வசனப்படி தாங்கள் செய்கிற காரியத்தில் அதே சமயமே பற்றில்லாத மனதுடன் நிற்பார்கள். ஒருவர்மீது எவ்வளவோ விசுவாசமும் அன்புமாய்ப் பேசுவார்கள். அதே நிமிஷம் உள்ளுக்கு சற்

பத்திராசிரியராக யோக்கியதை இல்லாதவர்களே மானேஜரின் ஸ்தானத்தை யடைய விரும்புகிறுர்கள். பத்திராசிரியராக இருப்பவருக்கோ மானேஜர் வேலையையும் மற்றவைகளையும் பார்த்துக்கொள்ளத் தெரியும்.

மற்றவர்களைப் பற்றி உதாரணங்கள் கொடுத்துப் பேசினல் அவர்கள் தூர இருப்பதில் வருத்தம் ஏற்படாது. எதிரிலிருப்பவனையே உதாரணமாக எடுத்துக்கொண்டு நீயும் அப்படித்தான் என்று ஆரம்பித்தாலோ வந்தது சண்டை.

நம் அன்பு விசுவாசங்களே இல்லாமல் இந்தச் சனியன்கள் எங்கிருந்து வந்தார்களோ என்று வைதுகொள்வார்கள்! வெளிக்கு எவ்வளவோ பாயசவிருந்து படைத்துப் பரிமளம் காட்டுவார்கள். உள்ளுக்கோ எப்போது இந்தமூதேவிகள் தொலைவார்களோ என்று சபித்தபடி இருப்பார்கள். வெளியிலே செய்கிற காரியத்திலே உள்ளுக்கும் பற்றுதல் வைத்து விடாமல் விலகி நிற்கிற இந்த ஆண்டியஹூா சந்நிதானங்களை விகடன் இலகுவில் மறக்க முடியுமோ? அவர்களுக்கும் புது வருட வந்தனங்கள் தந்தேனென்று சொல்லி வணங்கிக் கொள்கிறேன்! ஃ

போனவருஷத்திலே கொஞ்சிக் குலாவியிருந்தவர்களை யெல்லாம் ஒரு கணக்கெடுத்து, எவரெவர்கள் நய வஞ்சகப்புலிகள், போலி நண்பர்கள் ஒப்பாரி உறவுக்கட்டைகள் என்று தெரிந்துகொள்வதை மற்றவர்களின் வேலையாக விட்டுவிட்டு, இவர்களுக்கெல்லாம் புதுவருட வந்தனங்கள் சொல்வதைமட்டும் விகடன் என் வேலையாக வைத்துக்கொள்கிறேன்!

ஃ

பேர்—ஊர்—கையெழுத்து எதுமில்லாமல் மொட்டைக் கடிதங்கள் போடுகிற மொட்டைகளுக்கும் விகடன் புதுவருட வந்தனம் சொல்லுகிறேன்! சோம்பேரி அன்னத்தையாய் ஊர் சுற்றிவிட்டுப் பிண்டம் விழுங்குகிற வேளைக்குமட்டும் இலையில் தயாராய்க் குந்துகிற கொடுத்து வைத்த ஆசாமிகளுக்கும் விகடன் புதுவருட வந்தனம் சொல்லிக் கொள்ளுகிறேன்! பழைய சோம்பல் மூஞ்சியையும், சோர்ந்த முகத்தையும், வாடிப்போன வயிற்றையும் விட்டு விட்டுப் புதுவருஷத்தில் புதுமூஞ்சிகளாய் நின்று உழைக்கும் தைரியசாலிகளுக்கும் விகடன் புதுவருட வந்தனம் வழங்குகிறேன்! புது வருஷத்திலே புது நகைகளைப் போட்டுக் கொள்ளப்போகிற சீமாட்டிகளுக்கும், அவ்விதம் போடப்போகிற சீமான்களுக்கும் விகடனுடைய புதுவருட வர்தனங்கள் வேண்டிய வரையிலுண்டு! ஃ

அவன் ஏழைக்கு மனமெத்தை உப்பரிக்கையிலே வாழ்கிறனென்று நீ அவன் முன்பு தாழ்த்திக்கொள்ளக் கூடாது. நீயும் ஒரு மனுஷன்தான் என்ற திமிருடன் பெருமைப்படுத்திக் கொண்டு அதற்குத் தகுந்தபடி முழம் போட்டுக்கொண்டு நில்லு! அந்த ஏழைக்கு மெத்தை உன்னிடம் ஒரு சங்கதியைச் செய்யும்படி சொன்னால், ஆகா! என்று தலையசைத்துவிட்டுப் பிறகு பலநாள் வரைக்கும் அதைத் தள்ளிப் போட்டுவிடு! இதனால் ஏழைகளைப் பிடித்து இலவசத்தில் வேலை வாங்கிக்கொள்ளுகிற அந்தப் பிரபுக் கட்டை, ஓ! இவன் நம்மை மதிக்கிறவனாகக் காணோமே! இலகுவிலே தலை வணங்குகிற மனிதனாக இல்லையே யென்று உன்னைப்பற்றி ஒரு குறிப்பாக எண்ணிக்கொள்ளும்! அது முதல் அங்கே உனக்கும் ஒரு மதிப்பு உண்டாய்விடும்! நீயும் பிறகு அங்கே ஒரு தன்மதிப்புடன் உறுமிக்கொண்டு போ! உன் வயிற்றுக்கு இல்லாவிடினும் உன் தன்மதிப்புத் தன்மையை விட்டுவிடாதே. அதைப் புதுவருஷத்

ஒரு கைத்தொழிலை இரண்டு மூன்று வருஷத்தில் பழகி அனுபவம் பெற்றுவிடலாம். ஆனால், மட மடவென்று ஆற்றின் வெள்ளத்து வேகம்போல் எழுதும் ஆசிரியத்துவத் தொழிலையும் கவித்வத் தொழிலையும் பிறவியிலேயே அமைப்பாகப் பெற்றிருந்தா லன்றி இரண்டு மூன்று வருஷங்களில் வாராது.

இல் புதுப்பித்துக்கொள். விகடன் இத்தகைய தலைவணங்காத தன்மதிப் புசாலிகட்கும் என் புதுவருட வந்தனங்கள் சொல்லிக் கொள்கிறேன்!

ஃ

புது அறைவீடு புதுமாப்பிள்ளைக்குத் தான்! பழய மாப்பிள்ளைக்குப் படுக்கை வெளித் திண்ணையிலே! ஒருத்தனும் ஒருத்தியுமாகத் தனித்திருக்கிறவரையில் தான் புதிய கட்டில்! பிறகு குஞ்சு குழந்தைகள் உண்டாகிவிட்டால் அத்தனை பேரையும் கட்டில் கொள்ளுமா? அதில் உப்பு மூட்டை, மிளகாய் மூட்டை, கத்தரிக்கா வற்றல் மூட்டைகளை ஏற்றி விட்டுத் தரையிலே பாயிலே உருள வேண்டியதுதானே! அல்லது ஒருவருக்குக் கட்டிலும் மற்றவர்களுக்குத் தரையிலுமாக மாறும்படியும் ஆகும். அல்லது ஐயா ஓரிடத்திலே, அம்மா குஞ்சு குழந்தைகளுடன் இன்னோரிடத்திலே தான்! எப்படியாவது கலந்து குஞ்சு குழந்தைகளைக் கண்ணாலே பார்த்துக் கொண்டார்களல்லவா! அதுதானே கண்ணாலத்தின்நோக்கமும்! அந்தப் பாக்கியம் கண்டபிறகு கட்டிலில் படுத்தாலென்ன! எங்கு படுத்தாலென்ன! இப்படியாகப் பிள்ளை குட்டிகளுட னுள்ளவர்களுக்கும் விகடன் புதுவருட வந்தனம் சொல்லிக் கொள்ளுகிறேன்!

ஃ

புதிய சிரிப்பிலே ஒரு சங்கதி இருக்கும்! புதிய நேசத்திலே ஏதாவது ஆகவேண்டிய காரியம் இருக்கும்! புதிய காதலிலே ஏதாவது ஒரு நோக்கம் ஏற்பட்டிருக்கும்! புதிய சரசத்திலே ஒரு மயக்குச் சங்கதி மறைந்திருக்கலாம்! புதிய விரோதம் ஒரு சுயநல நோக்குடன் பிரிகிற உத்தேசத்தைக் காட்டிக்கொள்ளும்! புதிதாக வீட்டுக்குள் வந்து பல்லிளிப்பவன் பிறகு நமது பல்லை யுடைக்கிறவனாகவும் ஆகலாம்! தன் கைவிரலைத் தூக்கித் தூக்கிக் காட்டுவது புதிதாக மோதிரம் போட்டுக்கொண்டவன் வேலை! அடிக்கடி தொட்டுப் பார்ப்பது புதுவருட டயிரியையும், புதிய புஸ்தகத்தையும், புதிதாக வந்தவளையும் தான்! விகடன் இத்தனை பேர்களுக்கு என் புதுவருட வந்தனம் வழங்குகிறேன்!

ஃ

இனி, இங்கே கொஞ்சம் புதுமைகளை அடுக்குகிறேன்! முதன் முதலாக நம்பி ஏமாறி மோசம்போகிற சங்கதியிலே அது அவனுக்குப் புதிதாகப் படும்! படாதஇடத்தில் பட்ட அவமானமும் அந்த முதல் தடவைக்குப் புதிதாகப் படும்! தனக்கு மருமகளாக, மனைவியாகக் கொள்ளாதவரையில் எந்தப் பெண்ணும் புதிதாகவே படுவாள்! சோபனதினத்துக்கு முந்தியே ஜதை கூடிக்கொண்டு ருசித்துவிட்ட பெண்ணும் பயலும் சோபன நாளில் அதைப் பழயதாக நினைத்தாலும், இந்த உள்விவா மறியாத வெளியிலிருப்போருக்கு அது புதிதாகவே தோற்றும்! தினமும் கண்ட நாளானாலும் மறுதினத்தின் அதிகாலையில் அது புதிதாகத்தான் இருக்கும். எவ்வளவு தான் மதனதாகம் தீர்த்துக் கொண்டாலும் மறுபடியும் அது புதுவிதமாகவே தோன்றும்! எவ்வளவு உறவி ருந்தாலும்

மருகியும் தன் மூடத்தனமான புத்தியை விட்டு விட்டு மாமிக்குப் பணியக் காணோம். மாமியும் தன் துவேஷ புத்தியை விட்டு மருகியை வாடி மருமகளே! என்று அழைத்து அணைக்கக் காணோம். வருஷங்களும் பதினொன்று ஆனது. குழந்தைகளும் நால்வர் பிறந்து விட்டனர். என்ன மௌடிகமிது!


ஆபீஸ் அதிகார உடுப்புகள் போட்டுக் கொண்ட பிறகு அவர்கள் புது மனிதர்களாகவே தோன்றுவார்கள்! விவாகம் செய்துகொள்ளப் பெண் தயாராக இருந்தால் நம்ம தொந்தி தாத்தாவும் புது மாப்பிள்ளையாகவே தோன்றிவிடுவார்! எந்தத்தேசம்சுற்றினாலும், எங்கெங்கு திரிந்தாலும், எத்தனை வைபோகம் அனுபவித்தாலும் தன் ஊர் திரும்பி தன் குச்சு குடிசையான வீட்டைக் காண்கையில் அதுதான் தேவேந்திரலோகமாகப் புதுமையாய்ப் படும்! நேற்று இடித்து முட்டிச் சண்டைகள் நடந்த வீடு இரவு கழிந்து இன்று பார்க்கும்போதோ சமாதான வீடாய் புதுக்குடித்தனமாகவே காணும்! நேற்று கண்ட ஆலய தரிசனம் இன்றும்புதிதாகவேபடும்!போன வாரம் வந்துபோன புதன்கிழமை இந்த வாரமும் புதிதாகவே இருக்கும்! தொலைதூரத்தில் வேறு குடித்தனமா யிருந்து கொண்டு அவ்வப்போது வந்து விட்டுப் போகிறவன் என்றைக்கும் புதியவனாகவே படுவான்! இந்தப் புதுமைக்காரர்களுக்கெல்லாம் விகடன் புதுவருஷ வந்தனங்கள் சொல்லிக் கொண்டு, கடைசியாக எனக்கு ஒரு வந்தனமும் போட்டுக் கொள்ளுகிறேன்! புதுவருஷம் விகடனின் குஞ்சுகளெல்லோருக்கும் நன்மையாக விளங்கட்டும். ராம்! ராம்! சுபம்! ஞு! சுவாஹா !!

காவிவஸ்திரம் அணிவோர் அதைப் பிரியத்துடனே ஏற்றுக் கொள்கின்றனர். அதுபோலவே வெள்ளை வஸ்திரம் தரிக்கத் தலைவிதி வாய்த்த பெண்கள் அதைப் பிரியத்துடன் ஏற்றுக்கொள்கின்றனரா? பரம்பரை வழக்கத்தையொட்டித் தலைகுனிந்து ஒப்புக்கொள்கின்றனர். எவ்வளவு கீழ்த்தரமான செய்கையையும் ஒரு அவமானமாய் எண்ணாதிருக்கப் பரம்பரை வழக்கமானது செய்து மிகமயக்கி விடுகிறது.

இந்த இங்கிலீஷ் புஸ்தகத்தைப் படித்து விட்டால் உடனே ஒரு நாவல் எழுதி விடலா மென்கிறார்கள். அதிலுள்ள விஷயங்களைத் திருடி எழுதிவிடுவதென்பது இவர்களின் உத்தேசமோ ? ஐயோ ! சொந்த மூளை யில்லையே !

பொறுமையைப்பற்றி உபதேசம் செய்ய முடியுமே தவிர, தான் அனுஷ்டிப்ப தென்பது எல்லா சமயத்திலும் சாத்தியமல்ல. நம்மைப் பிறர் அவமதிக்கையில் சகித்துக்கொள்ள முடிகிறதில்லை. ஆனால் அடுத்தடுத்து அவமானப் படுகையில் அது நம் தலைவிதி யென்று சாந்தப்படுதலும் ஒரு சமயம் கூடும்.

சிலர் மற்றவர் எழுதிய நூல்களை மோட்டார் வண்டி வேகத்தில் படித்து என்னவோ ஒரு மாதிரியாக இருக்கிறது என்று தங்களின் அபிப்பிராயத்தை வெகு சீக்கிரத்தில் கொடுத்து விடுகிறார்கள். ஆனால் தாங்களே ஒரு வியாசம் எழுதுவ தென்றால் அது சரிவர வாமல் முழிக்கிறார்கள்.



சீக்காய்த்தூளில் தவிடும், காப்பித் தூளில் மூக்குத்தூளும் கலந்து இரவல் கேட்டவருக்குத் தந்தால் மறுபடி இரவல்கேட்க வரமாட்டார்களாம்! ஃ

மோதிமுட்டிக்கொண்ட புருஷனும் மனைவியும் மோகம் மீறி முத்தமிட்டுக்கொண்டால் சண்டை பறந்து போகுமாம்! ஃ

காலைக் கல்வி குடும்பச் செலவுக்கு யோசிப்பு. பகல் கல்வி உழைப்பும், பணம் தேடலும். மாலைக் கல்வி ஆயாச நிவர்த்தி. இராக்கல்வி எல்லார்க்குந் தெரிந்ததே யென்கிறார் விகட சித்தர்! ஃ

ஸம்சார ஜெயிலின் புதிய கைதிக்கே கல்யாணமாப்பிள்ளை யென்று பெயராம்! ஃ

கடிதாசி யின்றால் எல்லா உறவும் நேசமும் அன்பும் பறந்து மறந்து மறைந்துவிடுமாம்! ஃ

பொங்கலுக்கு அழைத்த மாமி வீடுகளையும், அழையாத மாமி வீடுகளையும் விகடன் கணக்கெடுக்கப் போகிறானாம்! ஃ

மார்கழிமாதமுழுதும் ராமாநுஜ கூடச் சத்திரங்களிலே இலவசத்தில் விழுங்கிய பாகவத பக்தர்களெல்லாம் தைமாதத்திலும் இப்படித் தின்ன விடக்கூடாதாவென்ற வருத்தத்துடனும் ஊருக்குப்போக மூட்டை கட்டுகிறார்களாம்! ஃ

மூக்குத்தூள் போடாதவர்கட்கு மோக்ஷமே கிடைக்காதாம்! மோசமே போவார்களாம்! ஃ

மன்மதபூஜையில் மங்கை சினந்து உதைக்கினும், அதை ஒரு உதையாக எண்ணாமல் இன்பமாக ஏற்பராம்!

ஃ

தேவாரம்:—மலையே, மதிற் சுவரே, மாளிகையே, கூடமே, அலையே, அளவுபடா ஆழமே, ஆறு குளமே, தலையே, இருசெவியே, தளிர் மூக்கே, கைகாலே, கலையே, யுனைக் கண்டு களிப்படைவ தென்னாளோ!

ஃ

சூதுக்கு உதவாத் துட்டு, ஜோக்குக்கு உதவா ஆடை, வாதுக்கு உதவா வாக்கு, வழக்குக்கு உதவா வக்கீல் இவை உலகினில் பலன் பெறாவாம்!

ஃ

ஊருஞ்சதமல்ல, உற்றார் சதமல்ல; உற்றுப்பெற்ற பேருஞ் சதமல்ல, பெண்டிர் பிள்ளைகளுஞ் சதமல்ல, நாறுங் குடுவைக்கள்ளே நமக்குச் சதமென்று மதுரைவீரர் கூறுகிறாராம்! ஃ

ஊரையடித்து உலைவாயிலே போட்டுக் காரை வீடு கட்டிக் கனம் பெறுவதெக்காலம்!

கையில் பொருளிருக்க கண்ணில் கொழுப்பிருக்க, பொய்யில் கிடந்து புரளுவ தெக்காலம்!

குத்துலக்கைபோல குவலயத்திலே திரிந்து, சத்திவந்துநித்தம்சோறுண்ப தெக்காலம்! ஃ

நரியில்லாக் காடு, எலியில்லா வீடு; குதிரையில்லா வண்டி, பலி கேட்காத தெய்வம், மோடார் ஓடாத வீதி, வரியில்லா நாடு வாழ்க்கைக்கு உதவாதாம்! ஃ

தைமாதம் பிறந்துவிட்டதால் கலியாண மில்லாதவர்களுக்கெல்லாம் இனி கல்யாணம்தானாம்!

பிரிந்த தோழர்கள்.

காலதேவதையே! காலதேவதையே !!
ஏலுமோ உன்றன் ஏற்றம் உரைக்கவே!
நிலைமையை மாற்றி நேர்மாறாக
தலைகீழ்ப் புரட்டும் தன்மையை நீயே!
அன்போடு தலைவி அகம் மகிழ்ந்திருந்த
இன்ப நிலையினை ஏகிவிட்டதனை
எண்ணி எண்ணி ஏங்கிக் கிடக்கப்
பண்ணுவை நீயே! பற்பலர் உன்னால்
உயர்ந்தோர் தாழ்ந்தோர் உரைக்கவும் படுமோ!
அயர்ந்திலை சிறிதும்! அளவிலா வேகம்
கொண்டுழல்கின்ற நின் கோலம் என்னென்கோ!
பண்டு பள்ளியில் பயின்ற காலத்தில்
என்னுடன் எழுதி என்னுடன் ஆழ
என்றும் எவ்வேளையும் எனைப் பிரியாது
நின்று இன்பூட்டிய நேயர்கள் சிலரே.

ஃ

படிக்கும் வேளையிலும் படித்ததினின்றும்
எடுத்த குறிப்புகள் எண்ணும் வேளையிலும்
ஐயம் நீங்கிட அறிவு விவாதம்
செய்யும் வேளைகளிலும் சீர் ஆராய்ச்சி
புரியும்போதும் பொழுதாம் அந்தியில்
திரியும்போதும் சிறுமை பேதமையைக்
கவனியாதருகில் களிப்போடும் இருந்து
தவறுமிடத்தில் தக்க(து) உரைத்து
உயரிய அன்பின் உரிமை கொண்டு என்றன்
மயலது மறைய மகிழ்வோடும் அன்புச்
சண்டைகள் செய்து தக்கன உணர்த்தி
அண்டிடும் பிழைகளை அகன்றிடச் செய்து
விளங்கிய தோழ வீரர்கள் சிலரே. (தொடர்ந்து வரும்.)

ஆரியூர் — வ. பதுமநாப பிள்ளை.

நன்று நன்று நமக்குச் செயந்தான்
ஒன்றுங்கவலை உளத்தில் வேண்டாம்
தேவரீர் இப்படித் தியங்கிட லாமோ
ஆவலின்படி வுண் டனுகூலமே.

சிறுமணித்திரள்

("பன்னிரு மரகதங்களின் மர்மம்" என்ற நாவலினின்றும் திரட்டியது.)

(562-ம் பக்கத் தொடர்ச்சி.)

775. குழந்தைகள் உள்ளவன் தன் புத்திரபாக்கியப் பேற்றினைப் பெரிதாய் எண்ணுமல் தன் கொடிய வறுமையையே பெரிய துர்ப்பாக்கியமாகக் கருதி வாடுகிறான். (26)

776. தன் இஷ்டத்தின்படி நடக்கும் கணவன், விவேகசாலிகளான புத்திர புத்திரிகள், அருமையான மருமகள் யாவும் தனக்குப் பிராப்தமாயிருந்தும் அதில் அந்தப் பெண் திருப்திகொள்ளாமல் தான் காலமுழுவதும் கஷ்டமேபடுவதாய் எண்ணி அங்கலாய்க்கின்றாள். பக்கம் (26)

777. பொறாமை நோய்க்கு யாரென்ன செய்வார்? அதற்கு மருந்து தான் எது? அதற்கு எந்த நாளிலாவது திருப்தியும் மனோ சமாதானமும உண்டா? (27)

778. பலரிடத்தில் அன்பு ஊன்றியிருந்தாலும் பிரதானமாக இரண்டொருவர்மீதே அதிகமான பற்றுதலும் பாசமும் உறுதியாகத் தோன்றி நிற்பது இயற்கை. (27)

779. ஒரு வீட்டில் தனக்கு வேண்டிய அன்புள்ளவர்கள் சிலர் இருந்தால், அன்பற்ற கரிக்கட்டைகளும்கூட இருப்பது சகஜமே. (28)

780. வீட்டுக்குள் நடக்கும் பெண் அரசாக்ஷியைப்பற்றி ஆடவர்களுக்கு என்ன தெரியப் போகிறது? நடக்கும் செலவையும் நிர்வகிப்பையும் தாங்கிச் சமாளிக்கும் வேலையைத் தவிர்த்து அவர்களுக்கு இந்தத் திருக்கூட்டத்திலே அடியாராகச் சேர்ந்து கொள்ளச் சமயம் கிடைப்பது ஏது? வீட்டுத் தலைவர்கள் உள்கட்டுக்கு வரும் நேரங்களில் எங்கும் நிசப்தமாய் யாவரும் கிரமமாகவே நடப்பதாகத்தான் காண்பித்துக் கொள்வார்கள். அவர்கள் புசித்துவிட்டு அப்பாற் சென்றவுடனே அங்கு பெண்ணரசாட்சிதொடங்கிக்கொண்டுதாண்டவமாடும். இதுவே உலக இயல்பு. (28)

781. கர்ப்பிணிகளுடைய கஷ்டமும், தம் வயிற்றுக்குள் சிசுவை வைத்துக்கொண்டு உலக விருத்திக்காக அவர்கள் படும்பாடும் அனுபவித்தவர்களுக்கே தெரியும். (29)

782. இப்போது பேசிக்கொண்டிருப்பவர்கள் தன் செயல் மறந்து, நினைவு ஒழிந்து, பிரக்ஞையற்றுப் போகும் காலமும் ஒன்று பின்னுக்கு இருக்கவே இருக்கிறது.

783. முதல் பிரஸவத்தில் பெண்களுடைய அச்சமும் கவலையும் 'என்னவாகுமோ—எப்படித் தப்பிப் பிழைப்போமோ' — என்ற விசாரமும் பிடித்து அவர்களை வாட்டாதவிதமாக வெல்லாம் வாட்டும். (29)

784. பெண்களுக்குள் பெண்கள் ஒன்றுகூடிக்கொள்வது வெகு சீக்கிரத்தில் ஆகும் காரியம்.

வீட்டில் வேலை அதிகமென்றால் கூட்டமாய்ப் பலர்வந்து தங்கிக் கொண்டதால்தான். கூட்டம் நீங்கியதும் வேலையும் சமையலும் குறைந்து விடுகிறது.

785. செல்வம் சேர்ந்தளவிலேயே ஆநந்த பூர்த்தியும் கலந்துகொள்கின்றதா வென்பது பெரிய கேள்வி. (39)

786. நமது வயிற்றில் பிறந்த பிள்ளை நமக்கு சொந்தமாகுமே தவிர, ஸ்வீகார புத்திரன் நமக்குச் சொந்தக் குழந்தையாய் நிற்பதும் நடந்து கொள்வதும் அபூர்வம். (46)

787. புத்திசாலிகள் தங்களின் அந்தரங்க இச்சைதயை அது நிறைவேறுமளவும் வெளிக்குக் காட்டிக்கொள்ள மாட்டார்கள். (47)

788. தன்னைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு கெட்டவர்களானாலும் பாசம் என்பது தனி விஷயமல்லவா? அது எவர்களையும் விடாதன்றோ? (50)

789. ஒருவர் முகத்தைக் காண்பதும், கையெழுத்தைக் காண்பதும் இரண்டும் ஒன்றே; முகத்தைப் பார்த்தளவில் இன்னாரென்று எவரும் சொல்லக்கூடும்; அதுபோலவே கையெழுத்தைப் பார்த்துவிட்டு அவர்கள் இன்னார் என்று சொல்வதும் சுலபமே. (58)

790. முதல் மனைவிக்கு ஈடான தங்க விக்கிரகம் ஒரு மனுஷ்யனுடைய ஜீவிய காலத்தில் அவனுக்கு எப்போதுமே கிடைக்கப் போவதில்லை. (59)

791. முதன் முதலாக "என் மனைவி" என்று ஒரு பெண்மணியைக் கைபிடித்து ஆசையோடும் அன்போடும் அவளை ஸ்பரிசித்து அவள் முகத்தைக் கண்டு மகிழ்ந்த ஒரு பூரிப்பை ஒருவன் எந்த இடத்திலும் எந்த நாளிலும் காண்பது அரிதாம். (60)

792. மோகம், காமம் என்பனவெல்லாம் தேகதர்ம அவஸ்தையால் உண்டாகிற சித்தமயக்குகள். (60)

P. G. குலசேகரன்.

மற்றவர் ஏதாவது நியாயமாகவே சொல்லுகையிலுங்கூட, அவர்களைப் பகைக்கிற நெஞ்சுக்கு உடனே அதை எதிர்த்துப் பதில் சொல்லத்தான் புத்தி போகிறதே யன்றி வேறில்லை.

ஸ்ரீரங்கத்தில் அரையணா காசு செல்ல வில்லை. கடைக்காரன் தன்னிடமுள்ள அந்த அந்த அரையணாவை நன்றாகச் செல்லு மென்று கூறி மற்றவரிடம் கொடுக்கிறான். மற்றவர் அந்த அரையணாவைத் தந்தாலோ இது செல்லாதென்கிறான். இதற்குத் தான் செட்டியார் வியாபார மென்பது.

எவ்வளவு ஆப்த நண்பர்களானாலும் அவர்கள் தங்களிடம் அவசரமாய் வேண்டிக்கொண்ட வேலையை அப்பால் போட்டு விட்டுத் தங்கள் வேலையை முந்திச் செய்துகொள்வது சிலரது ஜென்ம சுபாவமாயிருக்கிறது. நாமும் அப்படியே அவர்களிடம் நடந்து அவர்களுக்குப் புத்திவரும்படி செய்யவேண்டும்.

Industrial Education & Its Necessity

By Mr. K. P. Seshadri Aiyangar,
Teacher, Orr's Assisted Industries School, Madras.

தொழிற்கல்வியும்—அதன் அவசியமும்

[கி. பி. சேஷாத்திரி அய்யங்கார்.]
ஆசிரியர், ஆர்ஸ் உதவி கைத்தொழிற் பள்ளிக்கூடம், சென்னை.

பண்டைக் காலத்தில் இந்தியா கல்விகேள்விகளில் சிறந்துவிளங்கியிருந்ததைப்போலவே கைத்தொழிலிலும், சித்திரத்திலும் பலபல சாஸ்திரங்களிலும் புகழ் பெற்றிருந்ததென்பதை எவரும் மறுக்க மாட்டார் என்பது வெள்ளிடை மலையே.

பதினைந்தாம் நூற்றாண்டில் விஜய நகர வேந்தர்கள் இராஜ்ய பரிபாலனஞ்செய்து வந்த காலத்தில் பிரஜைகள் எல்லோரும் தொழிற் கல்வியில் சிறந்து நல்ல ஞானம் பெற்றிருந்தார்கள். அதற்கு முக்கிய காரணம் ஒன்றுண்டு. அது யாதெனில் அக்காலத்து அரச சிரேஷ்டர்கள் தொழிலின் சிறப்பை வியந்து தொழிலாளிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார்கள். தொழிலாளிகளின் க்ஷேமத்தைத் தங்களது க்ஷேமமாக எண்ணி அதன்படி அவ்வேந்தர்கள் நடந்து வந்தார்கள்.

விஜய நகரத்தின் பெருமைகளைக் கண்ணால் நேரிடக் காணவேண்டுமென்று விரும்புவோர்கள் சென்னை பொருட் காட்சி சாலை (Museum)-க்குச் சென்று காணலாம். அங்கு விஜய நகரத்திலிருந்து இரண்டொரு கல் நிலைகள் கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் மேலிருக்கும் சிற்ப வேலையை ஒரு வருஷ காலம் முழுமையும் பார்த்தாலும் நமது கண்ணின் ஆத்திரம் குறையாது; மனமும் சோர்வடையாது. ஒரு விரல் நீளத்தில் புருஷ உருவம் செதுக்கப்பட்டு அதற்குத் தக்கபடி கைகால்முதலிய உறுப்புக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரே நிலையில் இராமாயண கதையில் வருகிற சகல சங்கதிகளும் சித்திர ரூபமாய்ச் செதுக்கிக் காட்டப் பட்டிருக்கின்றன. "ஆஹா! இம்மாதிரி சிற்ப வேலையை எப்படி முடித்தார்கள்? இவ்வேலையை முடிக்க எத்தனை நாட்கள் பிடித்திருக்கும்? யாரால் இச்சிற்ப வேலை செய்தவர்களுக்குக் கூலி கொடுத்து நிர்வாகஞ் செய்யப்பட்டது?" என்ற பல கேள்விகள் ஒவ்வொருவர் மனத்திலிருந்தும் எழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இம்மாதிரியே ஓர் ஆங்கில சிற்ப சாஸ்திரியின் மனத்தில் பல கேள்விகள் எழுந்தன. அவன், இச்சித்திர வேலைகள் கூலிக்குச் செய்யப்பட்டனவல்லவென்றும்; எந்த அரசன் காலத்திலோ அல்லது அரசர்களின் காலங்களிலோ தங்கள் திறமையை அந்நாட்டுச் சிற்பிகள் காட்டச் செய்த சிற்ப வேலையாகவிருக்க வேண்டுமேயல்லாது கூலிக்குச் செய்யப்பட்டவையாகத் தோற்றவில்லையென்றும் சொல்லியிருக்கின்றான். மேலும், தற்காலத்திய கூலி நிர்ணயத்தை வைத்துக் கணக்கிட்டுப் பார்ப்போமானால் ஒவ்வொரு கற்றூணுக்கும் அதன்மேல் செதுக்கப் பட்டிருக்கும் சிற்ப வேலைக்குச் சுமார் ஒரு லக்ஷம் ரூபாய் கொடுத்தே தீரவேண்டும் என்றும் அவ்வாங்கில சிற்ப சாஸ்திரி அபிப் பிராயப் படுகின்றான். பாழாய்க் கிடக்கும் காலத்திலேயே அதன் அழகையும் வேலைப் பாட்டையும் புகழ்கின்ற நாம் அது செவ்வையாகவிருந்த

காலத்தில் எப்படிப் புகழ்வோம் என்பதை நாம் ஊகித்து அறிந்துகொள்ள வேண்டும்.

வேலூர்க் கோட்டையி லுள்ளிருக்கும் கலியாண மண்டபத்தில் நாட்டப் பட்டிருக்கும் கற்றூண்களிலுள்ள சித்திரங்கள் கண் கொண்டு பார்க்கக் கூடிய அவ்வளவு அழகும், வேலைப் பாடும் பொருந்தி யிருக்கின்றன. இதைப்போலவே மதுரையி லுள்ள திருமலை நாயக்கன் மஹால் என்பதும் இந்தியர்கள் தொன்றுதொட்டே சிற்ப சாஸ்திர ஞானத்தையும் தொழிற் கல்வியையும் பெற்றிருந்தார்கள் என்னும் விஷயத்தை, மேன்மேல் ஆதாரங்களுடன் நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். மொகலாய அரசாங்கத்திலும் தொழிற் கல்வி ஞானம் இந்தியர்களுக்கு அதிகமாக விருந்தது என்பதற்குப் போதிய ஆதாரங்களும், சாட்சியங்களும் கிடைத்திருக்கின்றன. உலகம் புகழும் "தாஜ்மஹால்" ஒன்றே இந்தியர்களின் சிற்ப சாமர்த்தியத்தையும், தொழில் வல்லமையையும், அக்காலத்தில் தொழிலாளிகளை எவ்விதம் மொகலாய அரசர்கள் பராமரித்து வந்தார்களென்பதையும், தொழிலாளிகளின் ஊக்கத்தையும் இயன்றவரையில் எடுத்துக் காட்டக்கூடிய நிலைமையிலிருக்கின்றது.

சிற்பத் தொழிலில் இந்தியர்கள் எவ்வளவு பிரக்கியாதியும் மேன்மையும் பெற்றிருந்தார்களோ அவ்வளவுக்கு அதிகமான கீர்த்தியையும் செல்வாக்கையும் ஆபரணங்கள் செய்யும் தொழிலில் இன்றைக்கும் நாளைக்கும் அவர்கள் பெற்றிருக்கின்றார்கள். ஷாஜஹான் என்னும் மொகலாய சக்ரவர்த்தி அமர்ந்திருந்த மயிலாசனம் ஒன்றே இந்தியர்களின் கைத்திறமையை வெளிப்படுத்தப் போதுமான சாட்சியாகும்.

நெசவுத் தொழிலில் இன்றைக்கும் கூட இந்தியர்கள் பெயர் பெற்றிருக்கின்றார்கள். புராதன காலத்தில் மேனாட்டு மன்னர்கள் நம் நாட்டுப் பட்டுத் துணிகளையும், துப்பட்டாக்களையும் சரிஎடைக்குப் பொன் கொடுத்து வாங்கியதே அவைகளின் மேன்மைக்குச் சாட்சி பகரும். 'கீழ்த் தேசத்துப் பட்டு' 'கீழ்நாட்டு முத்து' என்ற பதப்பிரயோகங்கள் மேலை நாட்டு அந்தப்புரங்களில் தினமும் வழங்கப்படுவதனாலே அவர்கள் அவைகள்மீது எத்துணை ஆர்வங் கொண்டிருக்கின்றார்கள் என்பது நன்கு விளங்கும்.

அத்தகைய சிறந்த, கொண்டாடப் பட்ட தொழிற்கல்வியின் ஞானம் இப்பொழுது எங்குஒளிந்து விட்டது. அப்படி அது மறைந்து விட்டதற்குக் காரணம் உண்டா? என்ற இம்மாதிரியான கேள்விகள் மனத்திடை எழும். அக்கல்வியின் ஞானம் அறவே நம்மவரிடத்தில் மறைந்து ஒழிந்து போகவில்லை. ஜன்மாந்திர வாஸனையினால் ஒவ்வொருவனிடத்தில் தானாக உண்டாகி இன்றைக்கும் நற்பெயரெடுத்திருக்கின்றது.

நமது இளவரசர் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது, அவரைத் தரிசனஞ்செய்ய, செங்கற்பட்டிலிருக்கும் ஓர் ஆபரணம் செய்யும் ஆச்சாரி ஒருவர், இளவரசருடைய அழகிய உருவத்தைக் கண்ணால் கண்டு மனதில் பதிய வைத்துக்கொண்டு ஒரே ஒரு அரிசியில் அவரது உருவத்தைத் தீட்டி அவ்வரிசிச் சிலையை மாட்சிமை பொருந்திய சக்கரவர்த்தியாரின் திவ்விய சமுகத்திற்கு அனுப்பித் தம் கைத்திறமையையும், தொழிற் கல்வியின் மேன்மையையும் தமது ராஜபக்தியின் சிரேஷ்டத்தையும் வெளியிட்டுப் பரிசு பெற்றார். அந்த ஆச்சரிய உரு

வச்சிலையைக் கண்டு, வியந்து இந்தியர்களின் அபூர்வ சக்தியையும், சித்திரத்தின் ஆற்றலையும் புகழ்ந்திருக்கின்ற நாசப் பத்திரிகைகளின் மூலமாகத் தெரிய வருகின்றது. இவ்விஷயம் ஒன்றே இன்னும் நம்மவர்கள் தொழிற் கல்வியில் உலகத்தவர்களைக் காட்டிலும் விஞ்சியிருக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துமல்லவா?

இதைப்போலவே பாஷாஞானத்திலும், மற்ற சாஸ்திர ஞானங்களிலும் இந்தியர்கள் விசேஷ கௌரவத்தையும் பாண்டித்தியத்தையும் பெற்றிருக்கின்றார்கள் என்பதற்குப் பல அத்தாட்சிகள் அபரிமிதமாக இருக்கின்றன. தூக்குத் தொகையாக ஒன்று அல்லது இரண்டு அத்தாட்சிகளைக் கூறிச் செல்லோம். பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படியாமலும், முதிர்ந்தவயதில் ஆங்கிலங்கற்று மிகப் புலமைவாய்ந்துமுள்ள ஸர் ரவீந்திரநாத் டாகூர் என்னும் வித்தியா நிபுணா ஆங்கிலத்தில் பெரும்பரிசு பெற்றிருக்கின்றார். ஆங்கிலேயர்கள் யாவரும் அவரது பாஷாஞானத்துக்கு வணங்குகின்றார்கள். அம்மகானைப் போலவே ஆங்கில பாஷையில் பாண்டித்தியம் பெற்ற அம்மையார் ஸ்ரீமதி சரோஜனி தேவியாவர். ஆங்கிலத்தில் இனிய பாட்டுகள் அமைப்பதில் அவ்வம்மையார் பெருங் கீர்த்திவாய்ந்தவர். கணித சாஸ்திரத்தில் நம் இந்தியர்கள் பெயர் பெற்றவர்கள் என்பதையும் நிரூபிக்கக்கூடும் சில வருஷங்களுக்கு முன்னர் சென்னை துறைமுக ஆபீஸில் குமாஸ்தாவாயிருந்த எஸ். ராமாநுஜம் என்பவர் கணித சாஸ்திரத்தில் தேர்ந்தவர் என்று அறிந்து கணித சர்வகலாசாலை எனப் பெயர்வகித்த இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் வித்தியா சபையினரின் வேண்டுகோட் கிணங்கிச் சென்றார். அங்கு ராமாநுஜம் தமது கல்வியின் அபாரத்தை வாரி இறைத்துப் புதுபுது விதிகளையும், நூதன முறைகளையும், இதுவரையிலும் ஒருவரும் கண்டுபிடிக்காத விஷயங்களையும் கண்டுபிடித்திருப்பதை ஆங்கிலேயர்கள் கொண்டாடிப் புகழ்ந்தார்கள். அவர் கலாசாலைப் படிப்பைப் பெறுதவராயிருந்தபோதிலும் அவ்வித்தியா சபையினர், அவரது சாஸ்திரஞான விசேஷத்தைக் கருதித் தாமாகவே கௌரவப்பட்டங் கொடுத்து அதை அவர் ஏற்கச் செய்தார்கள். அவர் சென்னைக்குத் திரும்பி வந்த பின்னர், சென்னைச் சர்வகலாசாலையினரும் அவரது அபாரஞானத்துக்குப் பெரிதும் கொண்டாடித் தாமாக எம். ஏ. பட்டத்தையும் கொடுத்தனர். அதன்பிறகு அவருக்கு புரொபஸர் ராமாநுஜம் எம். ஏ. என்ற பெயர் உண்டாயிற்று. யாருடைய துர்ப்பாக்கியமோ என்னமோ சென்னை சேர்ந்து நீண்டகாலம் உயிரோடிருக்க முடியாமற் போய்விட்டது. அவர் காலகதி யடைந்துவிட்டார். இருந்தபோதிலும் அவரது தேகம் மட்டும் மறைந்து ஒழிந்து போய் விட்டதேயல்லாமல் அவரது புகழுடம்பு இப்பூவுலகில் கணித சாஸ்திரம் நிலைத்திருக்கும்வரையில், அழியாமல் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

இன்னும் பூதபௌதிக சாஸ்திர ஞானத்திலும் இந்தியர்கள் சிறந்தவர்கள் என்ற பெயரெடுத்திருக்கின்றார்கள். ஒளியின்தன்மையை நன்கு உணர்ந்து அதன் விஷயங்களை விவரமாக உலகத்திற்கு எடுத்து ஓதி கௌரவம் வாய்ந்தவர் ஸர் ஸி. வி. ராமன் அவர்கள். உலகம் போற்றும் பெரிய நோபல் பரிசை இவ்வருஷம் அவரது அபார ஞானத்துக்கு வியந்து கொடுத்துள்ளார்கள். அப்பரிசைஅவர் நேரில் சென்று அங்கீகாரம் செய்து

கொண்டதாகவும் பத்திரிகையில் படிக்க மிக்க மகிழ்வெய்துகின்றோம். இவ்வண்ணமே நாம் ஒவ்வொன்றிற்கும் அத்தாட்சியுடன் கூறிக் கொண்டே போகலாம்.

தற்காலக் கல்விமுறையில் எல்லோரும் திருப்திபடும்படியான வழி இருப்பதாகத் தெரியவில்லை. கலாசாலைப் பட்டங்கள் பெற்றபோதிலும் ஒரு மாணவன் தன் ஜீவனத்திற்கு மற்றவனையே நாடவேண்டியிருக்கிறது. சம்பாதிக்க ஒரு வழியுமில்லாது தயங்கித் தயங்கித் தன்னைத்தான் வெறுத்துப் பரிதாப நிலையில் நிற்க நேரிடுகின்றது. கல்லைத்தான் மண்ணைத்தான், காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்றுக்கொடுத்தானா என்று தன்னைப் படைத்த கடவுளை நிந்திக்கவும் தலைப்படுகின்றான். ஆகவே ஒருவனைத் தன் காலால் நிற்கவைக்க முடியாமல் தற்கால கல்வி செய்துவிடுகின்றது. பெற்றோர்க்கு முதுமையில் மாணவன் உதவாமல் தன் செலவுக்கு சேங்கன்றை விற்றுச் செலவுக்கு அனுப்பும்படிஎழுதுகின்றார்கள். இது தான் தற்காலக் கல்வியின் லக்ஷணம்.

ஒரு மாணவன் விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டிப் போதுமான ஆங்கில பாஷா ஞானம் பெற்றதும் அவன் மனதுக்குகந்த தொழிற் கல்வியைப்பெற முயற்சி செய்தால் சில வருஷ காலங்களுக் குள்ளாகத் தேர்ச்சிபெற்று தன் பெற்றோர்க்கும் தன் குடும்பத்துக்கும் பெரிய ஆதாரவாக யிருந்து சுகஜீவனம் செய்து தன்னைப் படைத்த பரம்பொருளைப் பெரிதும் பாராட்டும் பாக்கியம் பெற்றிருப்பான் என்பதில் ஒரு சிறிதும் சந்தேகமில்லை.

பார்வைக்கு அழகும் நாசிக்கு நன்மணமும் தருகின்ற ரோஜா புஷ்பத்தின் காம்பில் முட்களிருப்பதைப் போலவும், விஷம் கக்கும் சர்ப்பத்தினிடத்தில் நல்ல மாணிக்கம் இருப்பது போலவும், நடந்த பெரும் போரினால் ஒரு நற்பலனும் உண்டாயிருக்கின்றது. சண்டைக்குப் பின்னர் இந்தியக் கைத்தொழில் பிறைச்சந்திரன் உதயமாகி சுக்லபக்ஷத்து மதியைப் போல கொஞ்சம் கொஞ்சமாக விருத்தியடைந்து வருகின்றது.

நமது காருண்ய கவர்ன்மெண்டாரும், தொழில் அபிவிருத்தியில் சிரத்தைகொண்டு லக்ஷக்கணக்கில் பணமுதல் செய்துவருகின்றார்கள். தொழிற்கல்வியின் தாகம் அதிகரித்து விட்டது; கைத்தொழில் என்ற கூக்குரல் கேட்கத் தலைப்பட்டது. இஃதுணர்ந்து துரைத்தனத்தார் நம் மாகாணத்தில் பல கைத்தொழிற் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி மாணவர்களுக்கு இலவசமாகத் தொழில் ஞானம் புகட்டி வருகின்றார்கள். அம்முயற்சி வீண்போகாமல் நிறைவேறும்படி எல்லாம் வல்ல ஈசன் அனுக்கிரகம் செய்வாராக.

ஒவ்வொரு மாதமும், இனிமேல், நமது அமிர்த குணபோதினியில் கைத்தொழில் விஷயங்களைக் குறித்து வியாசங்களும், பொருள் செய் வகைகளும்; செய் முறைகளும் அன்னோரன்ன விஷயங்களும் தொடர்ந்து எழுதப்பட்டுப் பிரசுரமாகும். நமது சஞ்சிகை இத்துறையில் இறங்கியிருப்பது சந்தா தாரர்கள் தெரிவித்துக் கொண்டமைக்கு இணங்கியதேயாகும். ஆகவே சந்தாதாரர்கள் தமதுசஞ்சிகைகளைப் பத்திரப்படுத்தி வைக்க வேண்டியிருப்ப தாலும், மற்றவர்கட்கு இரவல்கொடுத்துப் பின் வங்கி நிற்கா திருக்கவும் வேண்டி புதுசந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கத்தான் வேண்டும். புது வருஷத்தில் நமது அன்பர்கள் இதைக் கவனித்து அதன்படி நடந்து கொள்ள விரும்புகின்றோம்.

கி. பி. சே.

The Evil of Horse Racing
OR
The Burglar's Lie
A Drama in one Scene
By K. P. SESHADRI AIYANGAR.

குதிரைப் பந்தயத்தின் கேடு
அல்லது
திருடனின் பொய்
ஒரே ஸீனில் ஒரு நாடகம்
[கீ. பி. சேஷாத்திரி அய்யங்கார்.]

நாடக பாத்திரங்கள்.

சிங்கப்பூர்-சின்னப்ப முதலியார்	... ஒரு படாடோபப் பிரபு.
தையனாயகி ...	... அவரது மனைவி.
வனஜாக்ஷி ...	... தோழி.
ஆனந்தன் ...	... சேவகன்.
டாக்டர் ...	... திருட்டுவைத்தியர்.

இடம் :—"சிங்கப்பூர் வில்லா"வின் பள்ளி அறை.

காலம் :—முன்னிரவு.

முன்னுரை :—சின்னப்பமுதலியார் வசிக்கும் "சிங்கப்பூர் வில்லா" என்னும் பங்களாவின் பள்ளியறையில் எலக்டிரிக் பங்காக்களும், விளக்குகளும் அமைக்கப்பட்டிருந்தாலும் அவைகளுக்காகப் பிரதி மாதமும் செலுத்தப்பட வேண்டிய பணம் செலுத்தப்படாமையினாலே கர்ரண்ட் சப்ளைக்காரர் அவ்வீட்டுக்குக் கர்ரண்ட் சப்ளை செய்வதை நிறுத்திவிட்டார்கள். ஆகவே, சாதா எண்ணெய் விளக்கு மங்கலாய் எரிந்துகொண்டிருந்தது. தாசிவீட்டில் ஆண் குழந்தை பிறந்தபோது ஏற்றப்படும் விளக்கைப்போல் மங்கலாய் அழுது வடிந்துகொண்டிருந்தது. அவ்வறையில் போடப்பட்டிருந்த மரச்சாமான்கள் அழகைக் கொடுப்பதற்குப் பதிலாக அழுகையைக் கொடுத்துக் கொண்டிருந்தன. அவ்வறைக்கு மூன்று வாசற்படிகள் இருந்தன. முதல் வாசற்படி வழியாய் பங்களாவிற்கு வெளியே செல்லலாம்; மற்ற இரண்டு வாயற்படிகளின் மூலமாய் பங்களாவின் உட்புறம் செல்லலாம். அவ்வறைக்கு இரண்டு பெரிய ஜன்னல்களிருக்கின்றன. அவைகளினின்றும் பக்கத்திலுள்ள கவனிக்கப்படாத பூந்காவனத்தைப் பார்க்கலாம். அறையின் வலதுபுற மூலையில் பழைய இரும்புப் பெட்டி நிற்கின்றது. அறையின் இடது பக்கத்தில் சற்று தூரத்தில் ஒரு சோபாவில் தையனாயகி படுத்துக் கொண்டிருக்கின்றாள். அவளுக்குப் பின்னால் ஒரு மெழுகுவர்த்தி விளக்கு எரிந்து

கொண்டிருக்கிறது. அவளுக்கு அருகில் ஒரு சிறிய டீபாய் நிற்கின்றது. அதன்மேல் ஒரு கண்ணாடி டம்ளரும், ஆங்கில ஆசான், மங்கையின் முத்தம் என்னும் புத்தகங்களும் இருக்கின்றன. அவளது கண்கள் மூடப்பட்டும் அவளது ஒரு கை சோபாவி னின்றும் கீழே தொங்கிக்கொண்டு மிருக்கின்றது. அவளது அழகுவழிந்த வதனம் அழுகையோடு பொலிவழிந்திருந்தது. தேய்பிறைச் சந்திரனைப் போல் தேய்ந்தும், பரிதாபகரமாயும், வருத்த மேற்கொண்டதாயும் அவளது முகம் இருந்தது. தேய்ந்து மாய்ந்திருந்த போதிலும் சுந்தர முடையதாகவே காணப்பட்டது. வனஜா சந்தடி செய்யாமல் கட்டை விரலால் நடந்துவந்து அவளது யஜமானியின் வதனத்தை உற்றுப் பார்த்துச் சுவரில் மாட்டப்பெற்றிருந்த கடியாரத்தையும் உற்று நோக்கினள்.]

வனஜா :—அம்மா !

தைய :—என்ன விசேஷம். வனஜா?

வன :—ஐயா வருவதற்கு நேரம் செல்லும் போலிருக்குது.

தைய :—அதற்கு என்ன?

வன :—தங்களுக்கு இலை போடட்டுமா ?

தைய :—வேண்டாம். நான் இன்றைய ராத்திரி சாப்பிடமாட்டேன். பட்டினி கிடக்கப்போகிறேன்.

வன :—உடம்புக்கு அசௌகரியத்தை உண்டாக்குமே.

தைய :--தலைவிதி; ஆனந்தன் திரும்பி வந்துவிட்டானு ?

வன :—இல்லை? உமக்குத் தலைவலி எப்படி இருக்கிறது அம்மா! கொஞ்சமும் குறையவில்லையா ?

தைய :— கொஞ்சம் சுமார்தான். இன்னும் கொஞ்சம் வெந்நீர் கொடுக்கிறுயா ?

வன :—அம்மா! கொஞ்சம் கஞ்சியாவது உட்கொள்ள மாட்டீரா?

தைய :—வேண்டாம்; வேண்டாம். நீ சிரமப்படுத்திக் கொள்ளாதே.

வன :—இதோ ஆனந்தன் வந்துவிட்டான். அம்மா ?

(ஆனந்தன் பிரவேசிக்கிறுன். அவன் முகம் பிரகாசமின்றி மூன்றும் பேஸ்த் வைத்தவன் போலிருந்தது.)

ஆன :—அம்மா ! விரைந்தோடியும் வைத்தியர் வீட்டி லிருக்கவில்லையே. இவ்வளவு நாழிகைக் காத்துமிருந்தேன். காத்துக்காத்துப் பார்த்து என் கண்ணும் பூத்துப் போயிற்று. என்செய்வேன் ? ஏதோ ஓர் அவசர அபாயகேஸாம். யாரோ அழைத்துப் போனுர்களாம். ஆபரேஷன் என்று சொல்லுகிருர்கள். வீட்டுக்குத் திரும்பி வர வெகுநேரம் செல்லுமாம். அம்மாவுக்குத் தலைவலி எப்படியிருக்குது இப்போ.

தைய :—(பெருமூச்சுவிட்டு) கொஞ்சம்கூட குறையவில்லையே. (ஆனந்தனும் வனஜாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கின்றனர். அவ்விருவர்களது பார்வைகளும் ஒருகூடை வார்த்தைகளைப் பேசிக் கொள்ளுகின்றன. அவர்கள் ஒரே விதமான எண்ணங்களையே எண்ணுகின்ருர்கள் போலும்.)

ஆன :—அம்மா! நம்ம பக்கத்துவீட்டு டாக்டரை அழைத்து வரட்டுமா?

தைய:—அவர் புதியவரல்லவா. உன்னுடைய யஜமானர் என்ன சொல்லுவார்? வேண்டாம்.

வன :—இந்த டாக்டருக்கு நம்ம அம்மான் தேகஸ்திதியைப்பற்றி என்ன தெரியும்? மறுபடியும் நீ நம்ம குடும்ப வைத்தியரிடம் சென்று அவரை அழைத்து வருவதுதான் நலம்.

தைய :—இத்தனை நேரமாகி விட்டபடியால் இப்பொழுது அவர் வரப் பிரியப்பட மாட்டார். பல வருஷங்களாகியும் அவருடைய பில்களுக்கு நாம் பணம் செலுத்தாதிருந்தபோதிலும் என் விஷயத்தில் அவர் அன்புடையவர். ஹா!

(சாய்ந்துகொண்டு வலி பொறுக்காமல் பிரலாபிக்கின்றுள்.)

ஆன:—இந்தப் புதிய டாக்டரை அழைத்து வருகின்றேன்.

வன:—ஐயா வேண்டாம். தயவு செய்து அவரை அழைக்கவேண்டாம். எனக்கு அவரைக் கண்ணுல் காணவும் பிடிக்கவில்லை.

தைய:—வனஜா! என்ன விசேஷம் அவரைப்பற்றி?

வன:—அம்மா! அதையும் கேட்கப் பிரியப் படுகின்றீர்களோ? அந்த டாக்டரைப் பற்றி என்னென்னமோ சொல்லிக் கொள்ளுகின்றுர்கள். அவர் இவ்வூருக்குப் புதியவர். அவருக்குத் தொழிலில் அவ்வளவு அனுபவம் இருப்பதாகத் தெரியவில்லை. வைத்தியத்திற்காக நோயாளிகளும் அவரிடம் வருவதை நான் பார்க்கவில்லை. இப்படி இருந்தும்கூட அவர் ஒரு பெரிய பிரபுவைப்போல் அட்டகாச மாகத்தான் இருக்கின்றுர். போலீஸ் இலாகாவிலுள்ள எனது மாமன் அவரைக் குறித்துப் போலீஸ்காரர்கள் சந்தேகங் கொள்ளுகின்றுர்கள் என்றும், அவர் களவுப் பொருள்களை வாங்குவதாகவும் சொல்லி யிருக்கின்றுர். என்றைக்கோ ஆசாமி அகப்பட்டுக் கொள்ளப் போகிறுர்.

தைய:—சே! சே! அப்படிச் சொல்லாதே. அவர்மீது உனக்கென்னடி அவ்வளவு வெறுப்பு.

வன:—நான் அவரைப் பார்த்திருக்கிறேன் அம்மா. நீங்கள் பார்த்தது கிடையாது. முதன் முதலில் நான் பார்த்த போதே அவரைப் பற்றி ஒரு மதிப்பு ஏற்படுத்திக் கொண்டு விட்டேன். என் மனத்திற் குள்ளேயே 'இந்தப் பேர்வழியை நம்பக்கூடாது' என்று சொல்லிக் கொண்டேன்.

தைய:—என் நம்பக்கூடாது அவரை? தயவு செய்து சொல் கேட்போம்.

வன:—என்னமோ அம்மா! காரணம் சொல்லத் தெரியாது. அந்த மதிப்பு பசுமரத்தாணிபோல என் மனத்தில் ஆழ்ந்து பதிந்து விட்டது. அதை மாற்றிக் கொள்ளவும் முடியாது.

தைய:—போடி அசடே! அதைப் பற்றி என் தொந்தரவு. எனக்காக ஒரு டாக்டரும் இப்பொழுது வரத் தேவையில்லை. சற்று படுத்து அயர்ந்து நித்திரை புரிந்தேனுனல் இந்தத் தலைவலி குணப்படும். இதை மறந்தும் போய்விடுவேன். இந்த வாழ்க்கையையும்—ஆனந்தா! அன்றைக்கு வைத்தியர் கொடுத்தாரே தூங்குவதற்கு மருந்து, அது எங்கே?

ஆன:—அம்மா! அதைக் கொண்டு வருகின்றேன். (செல்கின்றுன்.)

தைய:—வனஜா! ஐயா இன்று எங்கே போயிருக்கின்றார்? இவ்வளவு நேரமாகியும் வரவில்லையே? உனக்குத் தெரியுமா?

வன:—எங்கே போயிருப்பார். குதிரைப் பந்தயத்துக்குத்தான் என்று நம்புகிறேன்.

தைய:—ஹூம்! பால்காரனுக்குப் பணம் கொடுத்து விட்டாயா?

வன:—நேற்று அவன் கண்டபடி நம்மைத் திட்டியதற்கு இன்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். மிகவும் வருத்தப்பட்டுத் தான் வருத்தப் படுவதைத் தங்களிடம் தெரிவிக்கும் படிக்கும் வேண்டிக் கொண்டான்.

தைய:—பாவம்! அவனை நாம் நிந்திப்பதில் ஒரு பிரயோஜனமு மில்லை. மாதம் முடியப் பால்வார்த்து முப்பது நாளுங் கடந்து அதற்குப் பின்னும் இரண்டு மூன்று நாட் கழித்துப் பணங்கேட்க அப்பொழுதும் கொடாமற் போனால் அவனுக்குக் கோபம் வருமா வராதா? ஐயோ! (தன் தலையை இரண்டு கைகளாலும் அழுத்திப் பிடித்துக் கொள்ளுகிறாள்.)

(ஆனந்தன் தன் கையில் ஒரு காகிதத் துண்டைப் பிடித்துக் கொண்டு வருகிறான்.)

வன:—அம்மா!

தைய:—ஒன்றுமில்லை வனஜா! இந்தத் தலை மண்டையிடி இருக்கிறதே சாத்தியப்படவில்லை. அப்பா! அப்பா!!

வன:—எனக்குச் சொன்னவர்கள் தப்பாய்ச் சொல்லியிருக்கலாம். ஆனந்த, பக்கத்து வீட்டு டாக்டரை விரைவில் அழைத்து வா.

ஆன:—அம்மா அழைத்து வரவா?

தைய:—ஆம் போய் அழைத்துவா சீக்கிரம். (ஆனந்தன் செல்கை) வனஜா? சமையலறையில் உன் வேலையை முடித்துவிட்டு வா. யஜமானரது ஆகாரத்தைச் சூடாயிருக்கச் செய். இன்றைக்கு எனக்குப் பாலும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். நம்முடைய வாசலிலா மோட்டார்கார் வருகின்றது.

வன:—ஆம் அம்மா. நம்ம யஜமானர் தான் வருகிறார் போலும். சில நண்பர்கள் பகலில் வந்து அவரை மோட்டாரில் ஏற்றிச் சென்றார்கள். அதுதான்போலிருக்கிறது.

(தட்டுத் தடுமாறிய குரலில் ஆனந்தா என்று கூப்பிடுகிறார்.)

தைய:—வனஜா! நீ போகலாம். (வனஜா தயங்கித் தயங்கிச் செல்லுகிறாள். சின்னப்ப முதலியார் பிரவேசிக்கிறார். முகம் உப்பிக் கண்கள் கலங்கிச் செக்கச் செவேலென்று இருக்கின்றன. அவர் உள்ளே நுழையும்போதே குப்பென்று சாராய நாற்றம் வீசிக் கொண்டிருந்தது.) ஆனந்தன் வெளியே போயிருக்கிறான்.

சின்னப்பன்:—எங்கே போனான் அவன்? (தலைப்பாகையை எடுத்துத் தரையின்மீது வீசி எறிகிறார்.)

தைய:—அடுத்த வீட்டுக்குப் போயிருக்கிறான்.

சின்:—(சுற்றிப் பார்த்து) பக்கத்து வீடா? எதற்காக?

தைய:—டாக்டரை அழைத்து வருவதற்கு.

சின்:—டாக்டரை அழைக்க. என்ன சொல்கிறாய்.

(சொக்காயைக் கழற்றி டை, காலர் இவைகளையும் வீசி எறிகின்றார்.)

தைய :—நம்ம டாக்டருக்கு ஆளை அனுப்பினேன்———

சின் :—வரமாட்டே னென்றாரோ? அவருக்குப் பில் பணம் செலுத்த வில்லையே நாம்.

(நாற்காலியிலமர்ந்து தன் கால்களை நீட்டிக்கொள்ளுகின்றார்.)

தைய :-இல்லை அவர் வீட்டில் இல்லையாம். ஏதோ அவசரமான அபாயமான ஆபரேஷன் கேஸுக்குச் சென்றிருப்பதாகத் தெரிகிறது.

சின் :—அது சுத்தப் பொய். உனக்கு இப்போது டாக்டர் எதற்காக?

தைய:-எனக்குத்தேக அசௌக்கியம்.

சின் :—என்றைக்காவது நீ சௌக்கியமாக இருந்த நாள் உண்டோ?

தைய :—அது என்னுடைய தௌர்ப்பாக்கியம்.

சின் :—அதிகப்பிரசங்கி. வாய்ப்பதட்டமாகிவிட்டதோ? அடக்கு வாயை.

தைய :—நான் ஒன்றும் சொல்லவில்லையே. இவ்வளவு கோபம் வரக் காரணமே யில்லையே.

சின் :—நம்முடைய குடும்ப வைத்தியரிருக்கும்போது கண்ட காலாடிப் பயல்களை வரவழைப்பதற்கு உனக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது?

தைய :—அது எனக்குத் தெரியாது' தெரியாமற் செய்துவிட்டேன். மன்னிக்க வேண்டுகிறேன்.

(வணங்குகிறாள்.)

சின் :—(உறுமிக்கொண்டு) ஒருவேளை அவனிடம் நேசங்கொண்டனை போலும்.

தைய :—என்ன உங்களுக்கு ஒன்றுந் தெரியவில்லை போலும். நான் போகிறேன்.

சின் :—போ.! எங்கேயாகிலும் என் பணம் போனமாதிரி—திரும்பி வாராமல் போனமாதிரி—நீயும் திரும்பிவாராமல் போய்விடு—போ என் கண் பார்வையை விட்டு—என் வாழ்க்கையை அறவே ஒழித்துவிட்டுப்—போய்விடு.

தைய:—ஹா! (தன் கைகளால் முகத்தை மூடிக் கதறி யழுகின்றாள்.)

சின் :—அழாதே. அழாதே. (தையலாயகி செல்ல யத்தனிக்கிறாள்.) இந்த அறையைவிட்டு ஓடியும் எடுத்து வைக்காதே.

தைய:—ஹா! ஈசா! ஈசா! ஜகதீசா!

சின் :—மூடு வாயை! இன்று குதிரைப் பந்தயத்தில் 2000 ரூபாய் இழந்தேன். அதை அழுது திரும்பி வீட்டுக்கு வந்தால் இங்கே இந்த இழவா? நல்ல வரவேற்பு. நாளைக்கு உன் கெம்பு அட்டிகை எனக்கு வேண்டும்.

தைய:—அது என்னிடமில்லையே.

சின்:—என்ன?

தைய:—கெம்பு அட்டிகையை விற்றுவிட்டேனே.

சின்:—(எழுந்திருந்து அவளெதிரில் நின்று பயமுறுத்தும் பார்வை பார்க்கின்றார்) எப்பொழுது? ஏன்? எதற்காக அதை விற்றுவிட்டாய்.

தைய:-அதைமுந்தாநாள் விற்றுப்பால்காரனுக்கும், மளிகைக் கடைக்கார

னுக்கும், எலெக்டிரிக் சப்ளை ஆபீசுக்கும் கொடுக்கவேண்டிய பாக்கிகளைக் கொடுத்துத் தீர்த்தேன்.

சின் :—பெரும்பேயே! படுபாவி!

[தன் முஷ்டியினுல் அவளது தலையில் ஓங்கி ஒரு குட்டு குட்டுகிருன். கிறுகிறு என்று சுழன்று கீழே விழுஞ் சமயத்தில் பக்கத்திலிருந்த நாற்காலியைப் பற்றிக் கொண்டு சமாளித்துக் கொள்ளுகிருள். அவளது இடது புருவம் வீங்குகின்றது. ரத்தம் பீறிடுகின்றது. ரத்தத்தைக் கண்டதும் சின்னப்பன் மயங்கிப்போய் வெட்டிய பனைமரம்போல் சாய்ந்து விடுகின்றுன். அவசா அவசரமாய்வனஜா வருகின்றுள்.]

தைய :—வனஜா! ஓடு ஓடிப்போய் எந்த டாக்டரையாவது கூட்டிக் கொண்டு ஓடிவா! ஓடுஓடு (வனஜா செல்கை. தையனுயகி தன் பிராண நாதனது தேகத்தைத் தூக்கி தலையணையின்மீது தலையை வைக்கின்ருள். தன் காதை அவனது மார்பகத்தில் வைத்து இருதயம் அடிக்கின்றதா என்று கவனித்தாள். தன் கைகளைப் பிசைந்து கொண்டிருக்கின்ருள். வனஜாவும், ஆனந்தனும் டாக்டரும் பிரவேசிக்கின்ருர்கள். டாக்டர் பொறுமையாயும் தணிவாயும், காம்பீரமாயும் இருக்கின்ருர். மருந்துகள் வைத்திருக்கும் ஒரு பெரிய தோற்பெட்டியுடன் வந்தார். தரைமீது பெட்டியை வைத்தார்—அறையைச் சுற்றிலும் ஒருதரம் சுற்றிப் பார்த்தார்-தையனுயகியைக் கண்டு தலை வணங்குகின்ருர். அவருடைய நடிப்புகள் நாடக மேடைக்குப் பொருத்தமானதா யிருக்கின்றன. வனஜாவும் ஆனந்தனும் சின்னப்ப முதலியாரின் தேகத்தைத் தூக்கிச் சோபாவின்மேல் படுக்க வைக்கின்றனர்.)

டாக்டர்:—(தையனுயகியை நோக்கி) என்னை மன்னிக்கவேண்டும். என் வரவிற்காக உன் வேலையாள் அதிகநேரம் என் வீட்டண்டை காத்துக்கொண்டிருக்க நேர்ந்ததைப்பற்றி நான் வருந்துகின்றேன். வே—றே ஒரு வே—லையாக நான் போயிருந்து இப்போதுதான் திரும்பி வந்தேன். என் வீட்டு வாயற்படியண்டையிலேயே இவனைக் கண்டு ஒரு க்ஷணமும் தாமதிக்காமல் நேராக இங்கே வந்துகொண் டிருக்கின்றேன்.

தைய :—நீங்கள் வெகு தயாளமுடையவர் (சோபாவிலிருக்கும் உருவத்தைக் காட்டி) இதோ படுத்திருப்பவர் என் புருஷர். சிலநிமிஷ நேரத்துக்குமுன்தான் திடீரென்று அசௌக்கியமடைந் திருக்கின்ருர். இதற்குமுன் அவருக்கு இருதய சம்பந்தமான வியாதி அடிக்கடி காண்பதுண்டு. ஒவ்வொரு சமயங்களில் அந்த வியாதி மிக்க அபாயகாமாயுமிருந்திருக்கின்றது.

டாக்டர் :—(நோயாளியைக் குனிந்து பார்க்கும்போது குப்பென்றுசாராய நாற்றம் வீசுவதை உணர்கின்ருர்.) அவர் வெளியில் சென்றிருந்தாரா? அல்லது மதுபானம் செய்துவிட்டு வந்திருக்கின்ருரா? (தன் பையிலுள்ள செதாஸ்கோப்பை எடுத்து இருதய அடிப்பைச் சோதிக்கின்ருர். முகத்தைச் சுளித்துக்கொண்

ளுகிறார், உதடுகளைக் கடித்துக் கொள்ளுகிறார்)—அம்மா! தாங்கள் இவ்விடத்தைவிட்டுக் கொஞ்ச நேரம் வெளியில் சென்றிருக்க வேண்டும். மனித யத்தனத்தால் என்னென்ன செய்யக்கூடுமோ அவ்வளவையும் செய்து பார்த்து விடுகின்றேன். தாங்கள் அதைரியப் படவேண்டாம். (ஆனந்தனைப் பார்த்து) தயவுசெய்து கொஞ்சம் தண்ணீர் கொண்டுவருவாய்.

தைய :—நானிங்குஇருக்கக்கூடாதா?

டாக் :—இருக்கக்கூடாதம்மணி.

தைய :—மறுபடியும் வரலாமோ இவ் விடத்திற்கு.

டாக்:—தங்களுக்குச் சொல்லி அனுப் புகின்றேன்.

தைய :—அவரது நிலைமை கவலைக் கிடமாக இருக்கின்றதா ?

டாக் :—அப்படி நாம் கோரவேண் டாமே.

(வனஜா தையனாயகியை அழைத் துச் செல்கின்றாள். வாயற் படியண்டை செல்லும் போது கால் இடறி விழு கின்றாள்.)

டாக் :—அந்த அம்மாளை அப்படியே படுக்க வை—சீக்கிரம்—என்ன அலங்கோலம். என்ன பரிதாபம். (வனஜா தையனாயகியைத் தூக்க எத்தனம் செய்கின்றாள். டாக்டரும் அவளுக்கு உதவிபுரியச் செல் கின்றார்.) அவளுடைய நெற்றியில் காயம் எப்படி உண்டாயிற்று?

வன :—(கோபாவேசத்தோடு) அவர் தான் குட்டினர்.

(ஆனந்தன் டம்ளரில் ஜலம் கொண்டு வருகின்றான். டாக்டர் அதைப்பெற் றுக் கொள்ளுகிறார். வனஜாவும் ஆனந்தனும் மெதுவாகத் தையனா யகியைத் தூக்கிச்செல்கின்றார்கள். டாக்டர் ஜலத்தைக் கையில் எடுத்து நோயாளியின் முகத்தில் தெளிக்கின்றார். அவன் தன் வாயை அசைத்து ஏதோ சொல்லு கின்றான். டாக்டர் அந்த வார்த்தை களைக் கேட்டுக் குனிகின்றார்.

சின்:—பணம் : பணம்.

டாக் :—நான் சொல்வது உனக்கு காது கேட்கின்றதா (நோயாளி தலையை அசைக்கிறார்) உங்களது பக்கத்து வீட்டிலிருக்கும் டாக்டர் தான் நான். உங்களுடைய மனைவி யார் என்னைத் தருவித்தார்கள். தாங்கள் விபரீதமாய் நோயுற்றிருக் கின்றீர்கள். தாங்கள் அலட்டிக் கொள்ளக்கூடாது. அதைரியப் படக்கூடாது. சாந்தமாய் இருக்க வேண்டும்.

சின்:—பணம்! பணம்!

டாக்:—பணம் எங்கே? பாங்கியிலா!

சின்:—அவளிடம் சொல்லு. பணம் 40000 ரூபாய்.

(டாக்டரின் கண்கள் அந்த அறை யைச் சுற்றி வட்டமிடுகின்றன.)

டாக்:—தாங்கள் அந்தப் பணத்தை எங்கேயோ வைத்து விட்டீர்கள் அல்லவா ?

(நோயாளி மூர்ச்சை யடைகின்றார். டாக்டர் சற்றுநேரம் ஆழ்ந்த யோசனையில் அமருகின்றான். பிறகு எழுந்திருந்து சன்னல்

களையும், கதவுகளையும் இழுத்து மூடி விடுகின்றான். அவன் தன் மருந்து தோற்பையைத் திறக்கின்றான். நோயாளியின் பக்கம் தன் முதுகைத் திருப்பிக் கொண்டு உட்காருகின்றான். அந்தப் பையிலிருந்து ஒரு சிறு இரும்பு கட்டபாறையையும், ஒரு வில்முடுக்கியையும், ஒரு சூடு விளக்கையும், இன்னும் சில சில்லரைப் பொருள்களையும் வெளியி லெடுக்கின்றான். கடைசியாக ஒரு சிறிய வெள்ளிப் பெட்டியை எடுத்துக் கொண்டு மற்றவைகளை யெல்லாம் தோற்பையினுள்ளே அடைத்து விடுகின்றான். மெழுகுவர்த்தி விளக்கில் டம்ளர் ஜலத்தைக் கொதிக்க வைத்து கண்ணாடி பீச்சாங் குழலைச் சுத்தம் செய்து கொள்கின்றான். நோயாளியின் இடது கை மேல்பாகத்தில் மருந்தை இன்ஜெக்ட் செய்கின்றான். (குத்தி ஏற்றுகின்றான்) அவ்விதம் செய்வதால் அவனுடைய மூளைக்கு ஒரு புதிய சக்தியை உண்டாக்குகின்றது. கண்ணாடி பீச்சாங்குழலைச் சுத்தம் செய்து மறுபடியும் தன் ஜேபியில் வைத்துக் கொள்ளுகின்றான். ஜன்னல்களையும் கதவுகளையும் திறந்து விடுகின்றான். அதன் பிறகு நாற்காலியை இழுத்து நோயாளியின் அருகில் போட்டு அமர்ந்து கொண்டு அவனையே உற்று கவனிக்கின்றான். சில நிமிஷங்களுக் கெல்லாம் நோயாளி அசைகின்றார்.)

சின்:—என்னுடைய மனைவி எங்கே?

டாக்:—அவர்கள் மிகவும் கலவரப்பட்டு களைப்படைந் திருக்கின்றார்கள். நான் அவ்வம்மையை எழுப்ப விரும்பேன்.

சின்:—அவளை எழுப்ப வேண்டும் என்ற அவசரமில்லை. எனக்காக அவளை நீங்கள் எழுப்புவீரானால் அவள் உங்களுக்கு வந்தனமளிக்க மாட்டாள்.

டாக்:—சில நிமிஷத்திற்கு முன்னே தாங்கள் பணத்தைப்பற்றி ஏதோ சொல்லப் பிரயத்தனம் செய்தீர்களே.

சின்:—(கோபத்துடன்) நானா!

டாக்:—நான் தங்களுடைய ரகசியத்தைத் தெரிந்துகொள்ள நாடேன். தாங்கள் மிகுந்த அபாயகரமான நிலையில் இருக்கின்றீர். ஆகவே உமது கவலையை வெளியிட்டீரானால் அதை நிவர்த்திசெய்ய வழி தேடுகின்றேன். உள்ளத்தில் உள்ளதை உரைப்பீரானால் உதவி புரியத் தயாராயிருக்கின்றேன்.

(டாக்டர் அறையைச் சுற்று முற்றும் பார்ப்பதை உணர்ந்து நோயாளி கண் சிமிட்டுகின்றார்.)

சின்:—சொன்னேனா நான் பண[illegible] எவ்விடத்தி லிருக்கின்ற [illegible] பதை?

டாக்:—இல்லை. நானே உணர்ந்தேன் அதனுடைய க்ஷேமகரத்தைத் தாங்கள் கருதுவதாய். அது இந்த அறையிலிருக்கும் பட்சத்தில்?

(தயங்குகிறான்.)

சின்:—(நோயதிகரித்த மாதிரி அபி நயித்து) அது எங்கிருக்கும்—அதோ இருக்கும் இரும்புப்பெட்டியில்தான்—

டாக்:—(கவனியாததுபோல) உம்முடைய இடது கையைத் தூக்குங்கள்.

சின்:—டாக்டர் தங்களுக்கே தெரியும் நான் கையை அசைக்க முடியாதென்று (டாக்டர் விரைவாக ஒரே பாய்ச்சலாக இரும்புப்பெட்டியண்டை சென்று தன் காதுகளைப் பெட்டி அருகே வைத்துக் கொண்டு அதன் பிடியைத் திருப்புகின்றான். சின்னப்ப முதலியாரின் சொக்காய் கீழே விழுந்திருப்பதையும் சாவிக்கொத்து தரையில் கிடப்பதையும் காண்கிறான். ஒரே தாவில் சாவியைக் கையிலெடுத்து அதிலிருந்து ஒரு சாவியை இரும்புப்பெட்டி சாவித் தொளையில் பொருத்துகின்றான். நோயாளி இதெல்லா வற்றினையும் உற்று நோக்கியவண்ண மிருக்கின்றார். டாக்டர் இரும்புப்பெட்டியின் கதவுகளைத் திறந்துவிடுகின்றான். அதனுள்ளிருந்து சில கரப்பான் பூச்சிகள் வெளியில் பறந்து வருகின்றன. இரும்புப்பெட்டி காலியாயிருக்கிறது. நோயாளியின் முகத்தில் புன்முறுவல் தவழ்கின்றது.) இம்மாதிரி நான் எப்பொழுதும் கண்டேனில்லை. மருந்தும் களவும் ஒன்றாய்க் கலந்திருப்பதைக் கண்டதுமில்லை. கேட்டது மில்லை. வைத்தியனும் கள்ளனுமா பேஷ். நல்ல கலப்பு—நல்ல கூட்டுறவு டாக்டரே?

டாக்:—(தன் கம்பீரத்தை நிலைநிறுத்தச் செய்ய பாவனைகள் செய்கிறான். தன் கைக்கடியாரத்தைப் பார்க்கின்றான்.) நீ இன்னும் மூன்றே நிமிஷத்தில் இறக்கப் போகின்றாய்.

சின்:—அன்பரே! உமக்குப் பல்லாயிர வந்தனங்கள். நீர் அந்தப் பணத்திற்கு எட்டி எட்டிப் பார்த்துக் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தீர். ஒரு சமயத்தில் நான் கூறிய அந்தப்பணம் அவ்விடத்திலிருந்தது உண்மையே. அதை நான் செலவழித்துவிட்டேன்—எல்லாவற்றையும் இழந்து விட்டேன் (நடுங்குகிறான்.) நான் கொஞ்சம் அயோக்கியனா யிருந்தேன். ஐயா கள்வரே! பழிபறிக் கொள்ளையிலும் ஈனத்தொழில் புரிபவரே! என்னை மன்னிக்க வேண்டும். டாக்டரே! நான் நேர்மையான வழியில் சென்றேன். உம்போன்றவர்கட்கு — கள்வர்களுக்கு—தங்களிடம் அகப்பட்டுக் கொண்ட பலஹீனர்களுக்கு—நோயாளிகளுக்குத் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள தண்ணீர் கொடுப்பது என்பது எதிரிடையானதோ—விரோத மானதோ? (டாக்டர், அவன் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்கின்றான்.)

சின்:—பெருஞ் சூதனாயிருந்தேன்—குடிக்காரனா யிருந்தேன். பணத்தை ஓட்டாஞ்செல்லியாக நினைத்துச் செலவாளியா யிருந்தேன். கண்ட கணிகையரை யெல்லாம் கூடிச் சல்லாபம்புரியும் காம லோலனா யிருந்தேன்—இப்படி யெல்லாம் அடாதசெய்கை புரிந்து உடம்பெடுத் திருந்தேன்—ஆனால் ஒரு வைத்தியக் கள்வனாக—நான் இருந்தேனில்லை. அதைவிட மிகக் கேவலமானது இவ்வகில உலகத்திலும் கிடையாது.

டாக்:—(அசட்டுச் சிரிப்புடன் தலை குனிந்து) நான் எந்தச் சமயத்தி

னும் ஒரு ஸ்திரீயையும் அடித்த வனேயல்லவே.

(ரோயாளி எழுந்திருந்து அப்ப டிச் சொன்னவனைத் தன் முஷ்டியால் ஒரு குத்து கொடுக்க முயற்சி செய்த போது களைப்படைந்து அப்படியே சாய்ந்து விழு கின்றான். பெருமூச்சு விடுகின்றான். திடீரென்று ஒரு வலிப்புவர அவனது தேகம் விறைத்துப்போய் விடுகிறது. வனஜா பிர வேசிக்கின்றாள்.]

வன:—அம்மா கேட்டுக்கொண்டு வரச்சொன்னார்கள்——

டாக்:—சாந்தமாக——அவர் கால கதியை யடைந்துவிட்டார்.

வன:—அந்தோ! அந்தோ! அம்மாள் எங்கே செல்வார்கள்? உதவி செய் வோர் யார்தானிருக்கின்றார்கள்—

டாக்:—அந்த அம்மாளுக்கு உற்றார் உறவினர் ஒருவருமில்லையா?

வன:—உற்றாருமில்லை, உறவினரு மில்லை, ஆஸ்தியுமில்லை, பாஸ்தியு மில்லை. அந்தப் பாவி—அந்த ராக்ஷ சன் எல்லாவற்றையும் அழித்து விட்டான். அவளது நகைகளையும் தொலைத்துவிட்டான். இந்த வீட் டையும் விற்றுச் சுட்டுப் பாழ்ப் படுத்திவிட்டான்.

டாக்:—உன்னுடைய யஜமானியை இங்கு அழைத்துவா. (வனஜா செல்கை. டாக்டர் தன் மருந்துப் பையினின்றும் ஒரு டப்பியை எடுத்து வேகமாக இரும்புப் பெட் டியில் வைத்து அதைப் பூட்டிவிடு கிறான். தையலுயகி வனஜாவின் தோள்மேல் சாய்ந்தவண்ணம் வரு கின்றாள்.)

நையகி:—(பிரலாபித்து) ஐயோ! டாக்டரே!

டாக்:—அம்மணி! தங்களுடைய துக்கம் எல்லையற்றதாகிவிட்டது. அது எவ்வளவு அதிகமாயிருப்பி னும் அதை ஒருவராலும் மாற்ற முடியாது. எதைத்தவிர்க்க முடியா தோ அதை அனுபவித்தே தீர வேண்டும். நீங்கள் வருத்தப்படுவ தில் நானும் பங்கெடுத்துக்கொள்வ தைத்தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது. இப்பொழுது நல்ல நிசிநேரம். ஆகவே சகாயத்திற்கு எவரையும் நாடுவது என்பதும் முடியாது. ஆனல் அதை நான் பார்க்கச் செல்கின்றேன். அம்மணி! உம்முடைய பிராணநாதர் கடைசி யில் இறப்பது நிண்ணம் என்பதை உணர்ந்தார். அப்பொழுது என்னை அந்த இரும்புப் பெட்டியைத் திறக் கச்சொல்லி அதனுள்ளே ஏதோ பணம் வைத்திருப்பதாயும் அதை வைத்துக்கொண்டு தன்னுடைய கடைசி வேண்டுகோள்படி பிற் காலத்தைக் கழிக்கும்படிக்கு உங்க ளிடம் சொல்லச் சொன்னர். அவ ரது கடைசி வேண்டுகோள் தாங் கள் தங்களுடைய கிராமத்திற்குச் சென்று வாழும்படிக்கும், துக்கம் ஒருவிதமாக மாறியபொழுது தான் தங்களுக்கு இழைத்தத் தீமைகள் எல்லாவற்றினையும் மறந்து தன்னை மன்னிக்கும்படிக்கும் கேட்டுக் கொண்டார். ரூபாய் 830 இரும் புப் பெட்டியில் இருக்கின்றது. அதை என்னை எண்ணும்படிச் சொன்னர். அம்மணி! இனிஎப்போ தாகிலும் என்னல் ஏதேனும் சகா யம் வேண்டியிருப்பின் தெரிவித் தால் உடனே உதவி செய்கின் றேன். இப்போது நான் விடை பெற்றுக்கொள்கின்றேன். அதற்கு முன் எல்லாம்வல்ல இறைவனைத்

தங்கட்கு இந்தத் துக்கத்தைச் சகித்துக்கொள்ளுவதற்குப் போது மான பலத்தைத் தந்தருளுமாறு இறைஞ்சுகின்றேன்.

(மருந்து தோற்பையுடன் வெளியே செல்லுகின்றான்.)

தைய :—(தன் புருஷன் தேகத்தின் மீது விழுந்து) ஐயோ! தெய்வமே! கடைசி காலத்திலாவது—உயிர் உடலைவிட்டு அகலும் சமயத்திலாவது என்னை நினைத்தாரே—அதுவும் பட்சத்துடனும் அன்புடனும் ஆதரவுடனும் நினைத்தாரே.

(திரை விழுகின்றது.)

பின்னுரை :-சின்னப்ப முதலியார் குதிரைப் பந்தயம் என்னும் சூதாட்டத்தில் பெரிதும் ஈடுபட்டுத் தமது சொத்து முழுவதையும் இழந்து விட்டார். சுந்தரமும் சுகந்தமும் மிகுந்த புஷ்பத்தைக் கசக்கி முகர்வாரும் உளரோ? பதிப்பிரேமையும், பதி பக்தியும் கொண்டு பதிவிருதா சீலியாயும், சுந்தரவதனா விந்தமும், அரவிந்த தளாய தாக்ஷியாயும், "மானம் போனபின் வாழாமை முன்னினிதே" என்பதையும் 'மானம் பெரிதேயன்றி பிராணன் பெரிதல்ல' என்னும் கொள்கையையே தன் லட்சியமெனக்கொண்ட தையலர் யாவர்க்கும் நாயகியாய் விளங்கிய தையனுயகி யம்மையின் உத்தம சீலத்தை அறிந்து நமது சகோதரிகள் அவ்வழியே ஒழுகி நடக்கக் கடமைப் பட்டவ ராவார்கள். மேலும், சூது என்னும் ஆட்டத்தை விளையாட்டுக் கேயாவது மற்று பொழுது போக்குக் கேயாவது கையாளக் கூடாது. அவ்விதம் செய்ததால் எண்ணிறந்தவர்கள் நாடு நகரம் சொத்து உரிமை மற்று எல்லா வற்றையும்—தன் மனைவியையும் கூட—இழந்துவிட் டிருக்கிறார்கள். பஞ்ச பாண்டவர்கள் சூதாட்டத்தில் தமது மனைவியாம் திரௌபதியை இழந்துவிடவில்லையா? சக்கரவர்த்தியாய் விளங்கிய நளன் சூதாட்டத்தில் நாடு நகரம் யாவற்றினையும் இழந்து காடு புகவில்லையா? இவ்வண்ணமே பற்பல உதாரணங்களை நமது இறுதிக்காலம் வரையிலும் சொல்லிக்கொண்டே போகலாம்.

இதுவுமன்றி; "அடாது செய்பவர் படாது படுவர்" என்னும் அருமையான வேதவாக்கின்படி சின்னப்ப முதலியார் ஒருவிதக் குற்றமும் செய்தறியாத மாசிலாமணியேயான தமது மனைவியைத் தலையில் குட்டிக் காயப்படுத்தி அவளைக் கொல்ல யத்தனமும் செய்தார். ஆனால் "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்து மற்றொன்றாகும்" என்பதிற் கொப்பவும், 'கெடுவான் கேடுநினைப்பான்' என்னும் வாக்கியத்தின் படிக்கும், தான் தையனுயகியைக் கொல்வதற்குப் பதிலாகத் தானேடாக்டரால் கொல்லப்பட்டார். இன்னும், தையனுயகிக்குக் கேடு நினைத்து தானே கடைசியில் கெடுதியை யடைந்தார்.

இறுதியாக, மதுபானம் என்னும் துரப்பியாசப் பிசாசுக்கு இரையாகாதிருக்க வேண்டும். எந்தச் சமயம் அந்தப் பிசாசை நட்பு கொண்டோமோ அந்தச் சமயமே நமது அழிவுக்கு வேர் கோலியாகி விட்டது என்று சொல்லலாம். மதுபானமே கொலைக்கும், களவுக்கும், விபசாரத்திற்கும் ஆதிகாரணமாகும் என்பதும் இச்சிறிய நாடகத்தினல் உணருகின்றோம். அவ்விதம் கற்றுணர்ந்ததை ஒவ்வொருவரும் தம்மால் கூடிய மட்டும் அனுஷ்டித்து வாழ்க்கையில் நலம் பெற நடந்து மாண்புறுவோமாக.

ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி
பிரமோதூதஸு மார்கழிமீ

கி. பி. சேஷாத்திரி அய்யங்கார்.

" அமிர்த குணபோதினி ".

பிரமோதூத வருஷத்திய தை மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்.	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள் முதலியவை.
அ-சி	14	1	பு	ஏகா 34-38, அநு 52-45, உத்தராயனம், பொங்கல், [ஏகாதசி திதி.
பி-சி	15	2	வி	துவா 35-28, கேட் 55-15, மாட்டுப்பொங்கல், சிவரம் [பார்வேட்டை.
அ-பி	16	3	வெ	திர 37-15, மூல 58-40, பிரதோஷம், சிவராத்திரி, [சென்குன்றம் பார்வேட்டை.
சி	17	(4-45) 4	ச	சசி 39-58, பூரா 60-0, திருக்கச்சியூர் பார்வேட்டை.
சி-அ	18	5	ஞா	● 43-40, பூரா 2-58, தைஅமாவாசை, திருப்பாச்சூர் [தெப்பம், பிணுகினி தீர்த்தம்.
ம-அ	19	மகரமீ 6	தி	பிர 48-20, உரா 8-13, மாக சுத்தம், அகஸ் 28-20.
சி	20	7	செ	துவி 53-54, ஶ்ரவ 14-21, கும்பாயனம் 57-51.
பி-சி	21	8	பு	திரி 60-0, அவி 21-16, ரம்ஜான்மீ 1வ.
ம-சி	22	9	வி	திரி 0-10, சத 28-52, கணேசஜயந்தி.
சி	23	10	வெ	சது 6-15, பூட் 36-45.
சி-பி	24	11	ச	பஞ் 13-44, உட் 44-23, ஷஷ்டீதிதி, அகஸ் 28-27.
அ-சி	25	12	ஞா	ஷஷ் 20-0, ரே 51-19, அதிதி, கவிக்கம்பர்.
சி	26	13	தி	ஸப் 25-19, அசு 56-54, ரதஸப்தமி, ஸப்தமிதிதி.
சி	27	14	செ	அஷ் 28-50, பர 60-0, ஶ்ரீமதாநந்தர். [மயில் வாஹனம்.
சி-அ	28	15	பு	நவ 30-20, பர 0-45, கிருத்திகை, சென்னை கந்தஸ்வாமி [தெப்பம்.
ம-உ	29	16	வி	தச 29-37, கிரு 2-32, அகஸ் 28-34.
ம-சி	30	17	வெ	ஏகா 26-41, ரோ 2-5, ஏகாதசிதிதி, கஞ்சி ஏகாம்பரநாதர்
சி	31	18	ச	துவா 21-37, ஆரு 55-21, பிரதோஷம், திதிதுவயம்,
சி	1	19	ஞா	திர 14-55, புந 49-39, சதுர்தசி திதி, எம்பார்.
சி	2	20	தி	சசி 6-54, உப ○ 51-15, பூச 52-48, தைப்பூசம், [பெருந்தேவித்தாயார் தெப்பம்.
சி	பிப்ரவரீ 3	21	செ	பிர 49-0, ஆயி 35-45, அகஸ் 28-41.
சி-அ	4	22	பு	துவி 39-56, மக 28-26, திருமழிசையாழ்வார்.
சி-ம	5	23	வி	திரி 31-18, பூர 21-35.
சி-அ	6	24	வெ	சது 23-36, உத் 15-36, சதுர்த்திதிதி, கூரத்தாழ்வார், [சண்டேசர்.
ம	7	25	ச	பஞ் 17-10, ஹஸ் 10-49, திதிதுவயம்.
சி	8	26	ஞா	ஷஷ் 12-13, சித் 7-25, ஸப்தமிதிதி, அகஸ் 28-47.
அ-ம	9	27	தி	ஸப் 8-51, ஸ்வா 5-30, திருநீலகண்டர், தாயுமானவர்.
ம-சி	10	28	செ	அஷ் 7-5, விசா 5-15, நவமிதிதி.
அ-சி	11	29	பு	நவ 6-54, அநு 6-31, தசமிதிதி.

ரா			குரு
	15வக்கு ராசி.		செ
ரவி			
சனிபு	சுக்		கே

" அமிர்த குணபோதினி " பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை, 1931.